கல்கி

ஸ்பீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



ஜெர்மனி அனுபவம்

KALKI 22.06.2008 ரூ.10.00 96 பக்கங்கள்



மனைவி ஒன்று... காதல் இரண்டு..!

1,85,000 வேலை வாய்ப்பு ரகசியம்

மங்கையர் மலரின்

திருமண மலர்

திருமண மலர் விளம்பரக் கட்டண விவரங்கள்

முதல் முப்பது வார்த்தைகளுக்கு ரூ. 500/-

30க்கு மேற்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் தலா ரூ. 15/-

வண்ணத்தில் ஹைலைட் செய்ய கூடுதல் கட்டணம் ரூ. 100/-

1" X 1" அளவில் வண்ணப் புகைப்படத்துடன் 30 வார்த்தைகள் அடங்கிய விளம்பரத்துக்கு ரூ. 800/- (அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ 15/-)



வண்ணப் புகைப்படத்துடன் விவரங்கள் அடங்கிய அரை பக்க *Profile* விளம்பரம் ரூ. 2500/-

வண்ணப் புகைப்படம் அனுப்புபவர்கள், தெளிவான புகைப்படமாக, பாஸ்போர்ட் அளவில் இரண்டு பிரதிகள் அனுப்பவும். புகைப்படங்களை திருப்பி அனுப்ப இயலாது.




கட்டணத்தை நேரில் ரொக்கமாகவோ அல்லது சென்னை செக்காகவோ, வெளியூர் டிமாண்ட் டிராப்டாகவோ, மங்கையர் மலர் என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

மங்கையர் மலரின் திருமண மலர்

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.
தொலைபேசி : 4343 8888



கல கலக்கும்
வளையோசை....
உங்கள் ரசனைக்கேற்ற வளையல்கள் ஏராளமாய்... வாருங்கள்...
உங்கள் வளையோசையை நீங்களே தேர்ந்தெடுங்கள்.
இந்தியாவின் தன்னிகரற்ற தங்கமாளிகைகள்!
ஸ்ரீ குமரன்
தங்கமாளிகை
The Chennai Silks
Jewellery Mahal
(ஸ்ரீ சென்னை சில்க்ஸ் பக்கத்தில்)
கோவை • திருப்பூர் • ஈரோடு • திருச்சி • சென்னை
கடையுடன் கூடிய விசாலமான கார் பார்க்கிங்
Shop online at: www.sktm.in


வாழ்த்துகள்
சிறந்த தமிழ்ப் படமாக
தேர்வான 'வெய்யில்'
இயக்குநர்
வசந்தபாலன்
இயக்குநர்
அமீர்
சிறந்த நடிகைக்கான
தேசிய விருது
பெற்ற ப்ரியாமணி



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com
சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ.2,700/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

தடைக் கற்களையே படிக்கட்டுகளாக மாற்றும் மனோபாவமும் வல்லமையும் கொண்டவர்கள், உச்சத்துக்குப் போய் விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஜோடிதான், மாஃபா (MA FOI) என்ற பெயரில் இந்தியாவின் நம்பர் ஒன் மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தை நடத்தி வரும் கே.பாண்டியராஜன் - லதா ராஜன் தம்பதி.

வெறும் 60,000 ரூபாயில் துவங்கிய நிறுவனம், வருடத்துக்கு 600 கோடி பிஸினஸ் செய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து, இப்போது 400 கோடியை எட்டி இருக்கிறது. பதினைந்து வருட காலத்தில் அசுர வளர்ச்சி! ஆனால், துவங்கிய சில மாதங் களிலேயே பெரும் அதிர்ச்சியைச் சந்தித் தார் பாண்டியராஜன். அப்போது 99 சதவிகி தம், வளைகுடா மற்றும் இஸ்லாமிய நாடுகளில் உள்ள நிறு வனங்களுக்கு ஆட் களைத் தேர்ந்தெடுத் துக் கொண்டிருந்தது மாஃபா. ஆனால், அப் போது நடந்த பாபர் மசூதி இடிப்பு, எப்படி இந்திய மக்களின் நல்லிணக்கத்துக்கு வேட்டு வைத்ததோ, அதேபோன்று மாஃபாவின் முன்னேற்றப் பாதையிலும் தடைக்கற்களைப் போட்டுவிட்டது. அந்த வரலாற்றுத் தவறின் விளைவாக இஸ் லாமிய நாடுகள் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புக்கு டாடா காட்டிவிட்டன. பாண்டியராஜன் இடிந்து போய்விட வில்லை. அவரது அதிர்ஷ்டம் அப்போது இந்திய தொழில் மற்றும் வியாபார உலகம் பெரும் மாறுதல்களைச் சந்திக்கத் தயா ராகிக்கொண்டிருந்தன. உலகமயமும், தாரா ளமயமும் தலையெடுக்கத் துவங்கிய நேரம். பல நிறுவனங்கள், மக்களிடம் பங்குத் தொகைகள் பெற்று பொது நிறு வனங்களாக உருவெடுத்தன. கார்ப்பரேட் ஜாம்பவான்களின் மரபுப் பார்வை மாறத் துவங்கியிருந்தது. மனித வளம், அதன் மேம்பாடு, உயர் மட்டப் பதவிகளில் தகுதி, திறமையுடன் ஆட்களைப் போடு வது என்ற ஒரு புதிய கண்ணோட்டம் உருவானது.

இந்த வளையத்துக்குள் சரியாகப் பொருந்திவிட்டது மாஃபா. பல பெரிய நிறுவனங்கள், நிர்வாக இயக்குநர், இணை நிர்வாக இயக்குநர், தலைமை நிர்வாக அதிகாரி என்ற மிக உயர் பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க, மாஃபாவை அணுகின. இதுவரை கிட்டத்தட்ட 1,85,000 பேரை பணியில் அமர்த்தியிருக்கிறது மாஃபா. உலகில் 14 நாடுகளில் மாஃபா கிளை நிறுவனங்கள் செயல்பட்டு வருகின் றன. 'வேடியர்' என்ற சர்வதேச மனித வள மேம்பாட்டு நிறுவனத்தோடு கைகோத்துக் கொண்டு செயல்படுவதால், உலக அளவில் மாஃபாவின் பெயரும் கொடி கட்டிப் பறக்கிறது.



● கே.பாண்டியராஜன்

மரம் வளர, வளர, கிளைகள் துளிர் விட்டு பக்கவாட்டில் வளர்வது போல், ஆட்களைத் தேர்ந்தெடுப்பது மட்டுமல்

லாமல், 'மனித வளம்' என்னும் மாபெரும் சக்திக்குள் முடங்கியிருக்கும் வேறு பல அம்சங்களைத் தனது செயல்பாடுகளில் கொண்டு வந்தது மா·பா. அதில் முக்கியமானது, வெவ்வேறு பொறுப்புகளுக்குத் தகுந்த பயிற்சி கொடுத்து (Career Training) ஆட்களை உருவாக்குவது. இன்று கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் இளைஞர்களின் சி.விக்கள் இவர்களது டேட்டா பேஸ்களாக இருக்கின்றன.

'இருக்கும் மனித வளத்தை மிகத் திறமையுடனும், நுட்பத்துடனும் பயன்படுத்தி நிறுவனத்தை எப்படி மேம்படுத்துவது' என்பது இன்று பல நிறுவனங்களுக்குச் சவாலான விஷயம். மா·பா, இவர்களுக்குச் சரியான தீர்வுகள்

மனைவி ஒன்று... காதல் இரண்டு..!



-1,85,000 வேலை வாய்ப்பு ரகசியம்

கொடுத்து முன்னேற்றப் பாதையில் தடம் பதிக்கவும் உதவுகிறது. நொடிந்து போகும் நிலையிலிருந்த பல நிறுவனங்கள் மா·பா கொடுத்த தீர்வுகளால், ஆக்ஸிஜனைச் சுவாசித்து இன்று வீறுநடை போட்டுக் கொண்டிருக்கின்றன. ''அதுபோன்ற நிறுவனங்களை நான் பட்டியலிட்டால்,

அந்த நிறுவனங்கள் அவற்றை விரும்பாது; இதுமட்டுமல்ல; மாஃபா தீர்வுகள் மட்டுமே காரணமல்ல என்று மறுக்கவும் கூடும்'' என்று சொல்லிச் சிரிக்கிறார் பாண்டியராஜன்.

தகுதியான, திறமையான ஆட்களை மாஃபா எப்படி அடையாளம் காண்கிறது? ''ஒரு பக்கம் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்க, மற்றொரு பக்கம் பல நிறுவனங்களில் காலியான பதவிகள்... இந்த விசித்திர நிலைக்கு புரிதலின்மைதான் காரணம். இந்த இடத்தில்தான் மாஃபா தன் முத்திரையைப் பதிக்கிறது. நிறுவனம் தேடும், பொருத்தமான ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கிறோம். ஒரு தனி நபருக்கு உள்ள திறமைகளைக் கணித்து, அவருக்குச் சரியான நிறுவனத்தில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கிறோம்'' என்கிறார் பாண்டியராஜன். வேலை வாங்கிக் கொடுப்பதற்கு, ஒரு பைசாகூட வசூலிக்கக் கூடாது என்பதைத் தொடக்கத்திலிருந்தே ஒரு பாலிஸியாக வைத்திருக்கிறது மாஃபா. தமிழக அரசு, மற்றும் மத்திய பிரதேச மாநில அரசுகள்கூட, உதவி இயக்குநர் போன்ற அதிகாரிகள் பொறுப்புக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்க மாஃபாவை நாடியிருப்பது, குறிப்பிடத்தக்கது.

என் மனைவி மீது வைத்திருக்கும் காதலைப் போல, என் பணியின் மீதான காதலும் அளவிட முடியாதது!

ஒவ்வொரு வேலைக்கும் மாஃபா ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் முறை தனித்துவம்மிக்கது. ''எங்களிடம் சி.விக்களுடன் வரும் இளைஞர்களை, அமர வைத்து, காஃபி கொடுத்து, விவாதிக்கிறோம். இதன் மூலம் அவர்களது பலமும், பலவீனமும் எங்களுக்குப் புரிய வரும். முதலில் அவர்களிடம் 'கேஷ்' இருக்கிறதா என்று பார்ப்போம். கேஷ் என்றால், நான் சொல்வது KASH. Knowledge, Attitude, Skill, மற்றும் Habit. இவற்றின் சுருக்கம்தான் KASH. விண்ணப்பிக்கும் வேலை எதுவானாலும், கல்வித் தகுதிக்குத் தரும் மதிப்பெண் இருபத்தைந்து சதவிகிதம்தான். மீதிக்கு இந்த 'கேஷ்' தேவை. இந்தக் கலவை ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு விதமாக இருக்கும். அதேபோல இந்தக் கலவையின் தேவை ஒவ்வொரு வேலைக்கும் மாறுபடும். பாடப்புத்தகங்களைத் தாண்டிய அறிவு, கூடுதலான திறமைகள், கற்றுக் கொள்ளும் ஆர்வம், அக்மார்க் கேரக்டர் இவை நான்கும் உள்ள இளைஞர்கள் நிறைய கேஷ் சம்பாதிக்கலாம். இப்போது நான் சொல்வது இந்த cash'' என்கிறார் பாண்டியராஜன்.

இன்று லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு ஒளிவிளக்காக இருக்கும் பாண்டியராஜன், இளம் வயதில் தனது பிஞ்சுக் கரங்களால் தீக்குச்சிக்கு மருந்து சேர்க்கும், குழந்தைத் தொழிலாளியாக இருந்தவர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? சிவகாசி பக்கத்தில் விளாம்பட்டிதான் இவரது ஊர். பிறந்தவுடன் அப்பா இறக்க, பழி இவர் மேல் விழுந்தது. ஆனால், சமையல்கார தாத்தாவும், பாட்டியும் பேரனை அணைத்துக் கொண்டார்கள். கஷ்டப்பட்டு கோவை பி.எஸ்.ஜி. கல்லூரியில் பொறியியல் சேர்த்து விட்டார்கள் தாத்தாவும் பாட்டியும். பொறியியல் முடித்தவுடன், மிகவும் சிறப்புவாய்ந்த ஜாம்ஷெட்பூர் எக்ஸ்.எல்.ஆர்.ஐ. கல்வி நிறுவனத்தில், பைசா செலவில்லாமல், எம்.பி.ஏ. படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்துஸ்தான் லீவர் நிறுவனம், ஸ்காலர்ஷிப் கொடுக்க எம்.பி.ஏ.வும் முடித்து



விட்டார் பாண்டியராஜன். அதன்பின் தனி வாழ்வில் ஒரு சிறிய தடுமாற்றம். விளைவு... 5000 ரூபாய் சம்பளத்துக்கு, ஒரு இன்ஜினியரிங் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்துவிட்டார்.

சென்னையில் அந்த நிறுவனத்தில் பணிபுரியும்போது அவரது வாழ்க்கையில் திருப்பு முனையாக மனைவி லதாவைச் சந்தித்தார். லதாவுக்குச் சொந்த ஊர் தூத்துக்குடி பக்கம். சி.ஏ. படித்துவிட்டு ஆடிட்டராக இருந்தார். பாண்டியராஜன் வேலை செய்த நிறுவனத்துக்கு லதா ஆடிட்டிங் பார்க்க வர, பற்றிக்கொண்டது காதல். இருவருடைய கனவுகளும் ஒரே தளத்தில் அமைந்திருந்ததால், அந்தக் காதல் திருமணத்தில் முடிந்தது. ''நீங்கள் ஏன் நல்ல வேலை தேடி அலைய வேண்டும். நாமே மனிதவள மேம்பாட்டு நிறுவனம் துவங்கலாமே'' என்று விதை போட்டது மட்டுமல்லாமல், உரம் போட்டு நிறுவனத்தை வளர்த்ததில் லதாவுக்குப் பெரிய பங்குண்டு.

''என் மனைவி மீது நான் வைத்திருப்பது மகத்தான காதலென்றால், என் பணியின்மீது நான் வைத்திருக்கும் காதல் அளவிட முடியாதது. எனவேதான், என்னால் 1,85,000 பேருக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தர முடிந்தது'' என்று பெருமிதத்துடன் சொல்கிறார் பாண்டியராஜன்.

இதுமட்டுமல்ல குழந்தைகள் கல்வி, குழந்தைகளுக்கு மருத்துவம், பெண்கள் சுயமாக இருக்க பயிற்சி, உதவித்தொகை, என்று கோடிக்கணக்கில் தர்ம சிந்தனையோடு பயணிக்கும் வகையில் செயல்படுகிறது மாஃபா பவுண்டேஷன். ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு கணினி, மற்றும் அவுட்ஸோர்ஸிங் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு




* மாஃபா அலுவலக ஊழியர்கள்



பெற்றுத் தந்திருக்கும் பாண்டிய ராஜனிடம், ''இந்தத் துறைகளில் எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு எப்படியிருக்கும்?'' என்று கேட்டோம். ''கவலையே வேண்டாம். குறைவான சம்பளத்தில் தரமான வேலை செய்துகொடுப்பது இந்தியர்கள்தான். எனவே, இந்தியாவுக்கு எந்தப் பிரச்னையும் இருக்காது'' என்றார்.

– ப்ரியன்

அட்டை மற்றும் படங்கள் : ஸ்ரீஹரி



மட்டும் அடக்கியே வாசித்திருப்பது வியப் பூட்டுகிறது.

- என்.பாலகிருஷ்ணன்,
மதுரை

அடக்கி வாசிப்பது ஏன்?

'கர்நாடகாவில் பாரதிய ஜனதா ஆட்சியைப் பிடித்ததற்கு தேவகௌடாவின் ஏமாற்று அரசியலும், காங்கிரஸின் கோஷ்டிப்பூசலுமே முழுமுதற் காரணம்'. உணர்த்திய கார்ட்டுன் ஜோர்!

- கே.கஸ்தூரி, வேலூர்

காதல் என்றால் என்ன? திரைப்படத்துக்கு விமர்சனம் கன கச்சிதம்!

- அன்பழகன்,
சென்னை - 96

அதிரபள்ளி நீர்வீழ்ச்சி செய்தி படங்கள் அனைத்தும் கோடைக்கு ஏற்ற குளுகுளு.

- இந்திரன், நாகர்கோவில்

விவசாயக் கடன் தள்ளுபடி குறித்த கேள்விக்கு 'தராசு' அளித்துள்ள பதில்தான் இன்றைய யதார்த்த நிலை.

- ஆர்.பழனிக்குமார்,
மதுரை - 14

மற்ற விஷயங்களுக்குக் காரசாரமாக பதிலளிக்கும் டாக்டர் ராமதாஸ், அன்புமணி சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு

ஒகேனக்கலில் பரிசல் ஓட்டி, யெடியூரப்பா வாக்குகளைப் பெருக்கியிருந்தாலும், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்துக்கு 'இடையூறப்பா'வாக இல்லாதிருந்தால், அதைத் தமிழக மக்கள் வாழ்த்தி வரவேற்பார்கள்.

- இரா.சக்கரபாணி,
மதுரை - 7

'காஃபி ஷாப்' பகுதியில் சம்மர் கம்ப்யூட்டர் கோர்ஸ் படிக்கிற மாணவிகளின் அரட்டை, செம ஜாலி. கூட்டணியில் இருந்தாலும் எனக்கு வாய்ப்பூட்டுப் போட முடியாது என்ற டாக்டர் ராமதாஸின் பேட்டி காரசாரம்!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன்,
நாகர்கோவில்



ரஜினி பற்றிய பாடம், சிலபஸில் இடம் பெற்றிருப்பது கடைந்தெடுக்கப்பட்ட மடத்தனம்.

- ப.மூர்த்தி,
பெங்களூர் - 60

தமது அதீத வாழ்க்கை வளர்ச்சிக்கு, கட்டடக் கலையைத் தேர்ந்தெடுத்து சரியான அஸ்திவாரம் இட்டிருக்

வட்டமேஜை

பிறந்த வீடு Vs புகுந்த வீடு. மின்னல் சிறுகதை மிகவும் அருமை. தங்களது 'முடி சூட்டு விழா' கார்ட்டூன் அசத்தல்!


-வி.ஜி. சத்தியநாராயணன், சென்னை - 61

'பொன்னிம்' விஷயம் பொன்னு விளையும் பூமிக்கு வரப் பிரசாதம்.

- ஆர். ராஜாமணி, சென்னை - 81

கடைசிப் பக்கத்தை (பின் அட்டை) புரட்ட மனமில்லாமல் தவித்தேன். அட்டையில் மலர்ந்த முகத்தோடு அருட் பார்வையோடு அன்னை.

- மூர்த்தி, கடலூர் - 2



என்ற புனித சொல்லுக்கு, உரிய மிகப் பொருத்தமான விளக்கம் தந்துள்ளமை போற்றுதற்குரியது.

- க. குமரேசன், சென்னை - 49

சஸ்பென்ஸ், விறு விறுப்பு நிறைந்த ஹிட்ச்காக் த்ரில்லரைப் பார்க்கும் பரவச உணர்வை, அமரர் கல்கியின் 'ஒற்றை ரோஜா' நெடுங்கதை ஏற்படுத்துகிறது.

- ஆர்.கோபாலன், சென்னை

'மரணத்தின் தேதி முன்கூட்டியே தெரிந்து விட்டால்?' என்ற கேள்விக்கு, கிரேஸி பதிலைப் படித்து சிரித்தோம்!

- வே.ந.கதிர்வேல், வேலூர் - 6

'பொன்னிம்'மை தமிழக அரசே தயாரித்து மலிவு விலையில் விவசாயிகளுக்குத் தர வேண்டும்.

- ப.தர்ஷினி, குடந்தை - 1

அருள்வாக்கு பகுதியில், யோகம்

சிசுக்கொலை இல்லாத மண்ணாக தர்மபுரியை மாற்ற நினைத்த அல்ஃபோன்ஸாவுக்கு, ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது வழங்கப்பட்டது, மிகச் சரியானது!

- கே.வி. ராமன், சென்னை - 73

கிறார் கே.பி.சிங்.

- சி.மகேஷ், திருச்சி

முக்கூரரின் மறைவுக்குப் பிறகு, இனி மீண்டு(ம்) வருவாரா என்று என்னுள்ளே எழுந்த வினாவுக்கு விடையாய் வந்துள்ளார் வேளுக்குடியார்...!

- கிருஷ்ண ராஜ்கோபால், சென்னை - 92

கடன் வாங்கிய ஸ்ரீதரன் படும் அவலம் அதிர்ச்சியாக உள்ளது. நிதி நிறுவனங்கள்

அதிகம் வாலாட்டுவதற்கு அனுமதிக்கக் கூடாது!

- ந. சுந்தரராஜ், சென்னை - 61

கல்கியில் வந்த கட்டுரை (வசூல்ராஜா (LIC HFL)) யையே புகார் மனுவாக, தமிழக மனித உரிமைக் கழகமும், உயர்நீதி மன்றமும் ஏற்று, தாமாகவே முன் வந்து (சுவோ மோட்டோ) வழக்குப் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்!

- ச. இராசன், திருச்சி

1328 பக்கங்கள் கொண்ட 495 ரூபாய் மதிப்புள்ள 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' என்ற நூல் வெளிவந்துள்ளது. இதன் உள்ளார்ந்த விஷயங்களை அறிந்து

எட்டு வருட உழைப்புடன் ஓர் உரையாடல்!


கொள்ளும் பொருட்டு சென்னை - 41, திருவான்மியூரில் எச் - 18, பிளாட் எண்.3, சவுத் அவென்யூவிலுள்ள க்ரியா பதிப்பகத்தில் **எஸ். ராமகிருஷ்ணனுடன்** உரையாடியதிலிருந்து...

தற்காலத் தமிழ், இக்காலத்துக்கு மட்டு மானதா?

இல்லை - தற்காலத் தமிழ் என்பது காலத்தால் மட்டுமே வரையறுக்கப் படுவதல்ல. தற்காலத் தேவைகளுக்கு ஏற்றபடி, வாழ்வின் மதிப்பீடுகளை எதிரொலிக்கும்படியானது.

தமிழ் பன்முகத் தன்மை கொண்டதல்லவா? அதை இந்த அகராதியில் எப்படி வெளிக்காட்ட முடியும்?

அந்தப் பன்முகத் தன்மையை உணர்த்தும் விதமாகத்தான் வட்டார வழக்குச் சொற்களும், பேச்சுத் தமிழ்ச் சொற்களும், இலங்கைத் தமிழ்ச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.



இந்த அகராதியை முடிக்க எத்தனை வருடங்கள் உழைத்தீர்கள்? இந்த வேலையின் ருசி எப்படி?

வேலை என்பது வேலை செய்வது மட்டுமல்ல. நம்மைச் சுற்றியுள்ள பல விஷயங்களுடன், மனிதர்களுடன் உறவு கொள்வதும்கூடத்தான். அதனால் எட்டு வருடங்கள் அலுப்பின்றி அகராதிக்காக உழைக்க முடிந்தது.

தமிழ்ச் சொற்களுக்கான தமிழ் அர்த்தம் மற்றும் ஆங்கில அர்த்தம்தான் இந்த அகராதி. நீங்களோ சைக்கிள் என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் அர்த்தம் கொடுத்துள்ளீரே. இதன் பொருளென்ன?

மக்களின் இயல்பான வாழ்வில் புழங்கி, சைக்கிள் பேச்சுத் தமிழ்ச் சொல்லாக மாறிவிட்டது என்று பொருள்.

இந்த அகராதியின் சிறப்பம்சம் என்னென்ன?

21,000 தலைச் சொற்களும், 38,000 எடுத்துக்காட்டு வாக்கியங்களும், 1,700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்களும், 342 சொற்களுக்கான படங்களும் இடம் பெற்றுள்ளன.

அகராதியிலிருந்து சும்மா ஒரு சாம்பிளுக்கு அர்த்தம் சொல்லுங்களேன்...

நீங்க சொன்ன சும்மா என்ற சொல்லுக்கு... நோக்கம் இல்லாமல் (சும்மா வந்தேன்), செய்வதற்கு எதுவும் இல்லை (வீட்ல சும்மா இருந்தேன்), தயங்காமல் (சும்மா படிச்சுப் பார்), அடிக்கடி (சும்மா தொல்லை பண்ணாத) என்று எட்டு விதமான அர்த்தம் உண்டு- என்று முடித்தார் க்ரியா ராமகிருஷ்ணன். 'ஸார், உங்கள ஒரு ஃபோட்டோ எடுத்துக்க அனுமதி...' என்று சொல்லி முடிக்கு முன்பே, திட்டவட்டமாக No சொல்லிவிட்டார். 'இதுக்கு மேல் சும்மா கேள்வி கேட்டுக்கிட்டு இருக்காம, ஒரு அகராதிய வாங்கி அலமாரியில் வைச்சுட வேண்டியது தான்' என்று கிளம்பினேன்.

- அமிர்தா

முந்திக் கொண்ட மும்பை!

வரும் ஜூலை மாத இறுதியில் செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர் நூற்றாண்டை விமரிசையாகக் கொண்டாட, இசை உலகம் தயாராகிக் கொண்டிருக்கிறது. சென்னை மியூசிக் அகாடமியும் செம்மங்குடி அறக்கட்டளையும் பல்வேறு நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு வருகின்றன. செம்மங்குடி பற்றிய 'காஃபி டேபிள் புக்' (அதாங்க பொம்ம பாக்கற புத்தகம்)







ஒன்றும் தயாராகி வருகிறது.

இத்தனை முயற்சிகளையும் முந்திக் கொண்டு மஹாலக்ஷ்மி நகரமான மும்பை, செம்மங்குடி மாமாவின் நூற்றாண்டை பிப்ரவரி மாதமே கொண்டாடி விட்டது! செம்பூர் ஸ்ரீசாரதா கோயிலில், செம்மங்குடி சிஷ்யைகளான கல்யாணி ஷர்மா, ராதா நம்பூதிரி, அலமேலு மணி ஆகியோர் சேர்ந்து, நாத பிரும்மம் அமைப்பின் ஆதரவில் இதை நடத்தியுள்ளனர். ஆண்டுதோறும் நிகழும் தியாகராஜ ஆராதனையில் இவ்வாண்டு செம்மங்குடியின் படத்தையும் வைத்ததுடன், மாமாவுக்கு ரொம்பவும் பிடித்த ஒரு கூடை சாக்லேட், அவர் படத்துக்கு மலரஞ்சலி செய்த ரசிகர்களுக்கு விநியோகிக்கப்பட்டது!

காலை 10.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை நிகழ்ந்த ஆராதனை விழாவில் வைத்தியநாத பாகவதர், செம்மங்குடியின் மகன் ஸ்வாமிநாதன், கல்கி கண்ணன், நாத பிரம்மம் அமைப்பின் தலைவர் சுப்ரமணியம் ஆகியோர் கலந்துகொண்டு, செம்மங்குடி நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர்.

சங்கீதாஞ்சலியில் சுமார் நூறு வித்வான்கள் பங்கேற்று ஆத்மார்த்தமாகப் பாடினர். யதேச்சையாக மும்பை வந்திருந்த ஆர்.வேதவல்லி குரு- சிஷ்ய முறையின் உயர்வைப் பற்றிப் பேச, செம்மங்குடியின் சிஷ்யையாக தாம் அடைந்த அனுபவங்களை, அவரது வாத்ஸல்யத்தை, கல்யாணி சர்மா எடுத்துரைக்க, அனந்தராம பாகவதர் தாம் செம்மங்குடிக்கு ஏகலைவன் போன்ற மானசீக சிஷ்யன் என்று நெகிழ... உணர்ச்சி மயமான சங்கீதச் சூழல் அது.

– லக்ஷ்மி கண்ணன்

மனிதனுக்கு இறக்கை

● எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

கண்ணனைப் பாடிய பாரதியார், ஏன் ராமனைப் பாடவில்லை?

புலி - அவதாரத்தில் ராமனுக்குப் பின் வந்தவன் கண்ணன். கவி - அவதாரத்தில் கம்பனுக்குப் பின் வந்தவன் பாரதி. முன் வந்த ராமனை, முன் வந்த கம்பன் முன் வைத்து ராமாயணம் பாடி முந்திக் கொண்டான் பந்திக்கு; பின் வந்த கண்ணனை, பின் வந்த பாரதி பின்பற்றிப் பாடிப் பிந்திக் கொண்டான் சம-பந்திக்கு. கம்பன் தமிழன்னை குடியிருந்த முன் வீடு... பாரதியார், தமிழன்னைக்குப் பின்-கோடு (Pincode). பி.கு: பாரதியார் ராமனையும் பாடியுள்ளார் - கொஞ்சமாக.





● என்.என்.மணிமாறன்,
திருவண்ணாமலை

மனிதனுக்கு இறக்கை முளைத்துப் பறக்க ஆரம்பித்தால்...?

ஆசை என்னும் இறக்கை கட்டி, ஏற்கெனவே ஆலாய்ப் பறக்கிறான் மனிதன். தரையில் பறக்கும் ஒரே பறவை மனிதன்தான். இவனுக்கு எதற்கு extra இறக்கை. வழக்கம் போல மனிதன் 'இறக்கையிலே பறந்து போகட்டும்...!'

● சுஜாதா, செங்கல்பட்டு

கிரேஸி... நீங்கள் இடதுசாரியா... இல்லை வலதுசாரியா...?


சாரி... நான் சாதா 'சம்சாரி!'

● என்.சித்ராலட்சுமி, சென்னை

? 'பதி-பக்தி' கேள்விப்பட்டிருக்கிறேன். 'சதி-பக்தி' உண்டா?

வாழ்நாள் முழுவதும், ராம

முளைத்தால்...



கிருஷ்ண பரமஹம்சர், தமது மனைவி சாரதாமணி தேவியை அம்பாளாக வழிபட்டு பக்தி செய்து, சதி-பக்திக்கு உதாரண புருஷராக விளங்கிய அவதார புருஷர்.

● வே.ந.கதிர்வேல், வேலூர்

மகாபாரத கதையில் வரும் பஞ்ச பாண்டவர்களில் உங்களைப் பெரிதும் கவர்ந்த பாண்டவன் யார்...? ஏன்...?

நம்மைப் போல் காதல் வயப்பட்டவன்; நம்மைப் போல் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டவன்; நம்மைப் போல் நல்லது-தீயது எது என்ற சந்தேகத்துக்கு உள்ளானவன். சுருக்கமாக 'நம்மைப் போல் ஒருவன்' என்ற நம்பிக்கையை நமக்குத் தரும் 'Hope' பாண்டவன் அர்ச்சுனன்!

● என்.ஷண்முகம், திருவண்ணாமலை

காதல் செய்ய ஆரம்பித்தால் கவிதை எழுத வருகிறது. அப்போது எதைச் செய்ய ஆரம்பித்தால் கதை எழுத வரும்...?

செய்ய ஆரம்பித்ததை விட ஆரம்பித்தால் கதை வரும். 'சும்மா கதை விடாதீங்க' என்றுதானே சொல்கிறோம்.!

● சௌம்யா, கோயம்புத்தூர்

கேள்வி - பதில் பகுதிகளில் யாருடைய பதில்கள் உங்களுக்குப் பிடித்தமானது?

நகைச்சுவையாக மஞ்சரியில் பதில் சொல்லும் தென் 'கட்சிக்கே' என் வோட்டு.

● என்.பாலகிருஷ்ணன், மதுரை


அடிக்கிற கைதான் அணைக்குமா...?

உயிரைப் பணயம் வைத்து நெருப்புக்குள் நுழைந்து, தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கிற கைதான் தீயை அணைக்கும். ○



கல்கி

2008 ஜூன் 22
ஸர்வதாரி ஆனி 8
மலர் : 66
இதழ் : 47



தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்

எதிர்க்காத இந்தியா; ஏய்க்கும் சீனா!

"**சீ**னாவுடன் மோத மாட்டோம்" என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.ஆன்டனி உறுதியளித்திருப்பது வேடிக்கையாக இருக்கிறது.


சீனாவின் சமீபத்திய ஆக்கிரமிப்புகள் குறித்து பா.ஜ.க.வினர் எழுப்பியுள்ள கேள்விக்குப் பதிலளிக்கும் முகமாகவே அமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பதினொரு சுற்றுப் பேச்சுவார்த்தைகள், இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே கடந்த சில ஆண்டுகளில் நடந்திருப்பதாக அமைச்சரே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால், இந்தப் பதினொரு சுற்றுகளுக்கிடையே சீன ராணுவம் இந்திய எல்லைப் பிரதேசத்துக்குள் பலமுறை புகுந்து, சீண்டுதலான ஆக்கிரமிப்புகளைச் செய்திருக்கிறது!

பதிலுக்கு இந்தியா, சீனப் பகுதிகளை ஆக்கிரமிக்கவும் இல்லை; சீனா செய்கின்ற அக்கிரமத்தை எதிர்த்துக் குரல் கொடுத்து, சர்வதேச அரங்குகளில் வலியுறுத்திப் பேசவும் இல்லை. சீன அரசோ, நமது ஹிமாசல பிரதேசத்துக்கும் சிக்கிமின் ஒரு பகுதிக்கும் பகிரங்கமாகச் சொந்தம் கொண்டாடுகிறது!

சீனாவையோ வேறு தேசத்தையோ வலியச் சென்று சீண்டாவிட்டாலும், பதிலடி கொடுக்காவிட்டாலும், பிற நாடுகள் நம் மீது போர் தொடுத்தால், அதனை எதிர்கொள்கிற திறனும் பலமுமாவது நம் நாட்டுக்கும் அதன் ராணுவத்துக்கும் இருக்க





வேண்டாமா!

சீனாவுடன் பேச்சுவார்த்தை என்று மும்முரம் காட்டுகையில், இந்த ராணுவ ஆயத்தத்தையோ, யுத்தத்தை எதிர்கொள்வதற்கு அவசியமான தயார் நிலையையோ நாம் கைவிட்டு விடலாகாது. அமைச்சர் ஆன்டனியும் தேசப் பாதுகாப்பு விஷயத்தில் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று உத்தரவாதம் தந்திருக்கிறார்.

ஆனால், இரு மிக முக்கியமான காரணங்களினால் அமைச்சரின் உத்தரவாதத்தை நாம் முழுமையாக ஏற்க இயலவில்லை.

1. கடந்த பல ஆண்டுகளாக நமது ராணுவச் செலவுகள் கணிசமாக அதிகரித்துள்ள போதிலும், சீன ஊடுருவல், ஆக்கிரமிப்பு, புதுப் புதுக் கோணங்களிலும் இடங்களிலும் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இது நடப்பதற்கு அனுமதிக்கும் வகையில், எங்கு, எப்படி நாம் ஏமாறுகிறோம்? இதனை உடனடியாக ஆராய்ந்து சரிசெய்ய வேண்டியிருக்கிறது.

2. நாம் வலியச் சென்று போர் தொடுக்காவிட்டாலும், பாகிஸ்தானோ சீனாவோ போருக்கான தூண்டுதலையும் சூழலையும் அவ்வப்போது உருவாக்கிய வண்ணம் இருக்கின்றன. கார்கில் போல் இன்னொரு யுத்தம் வர நேர்ந்தால், அதனைச் சந்திக்கும் பொருளாதார பலம் இன்று நம்மிடம் இல்லை. விலைவாசி உயர்வு உச்சத்தைத் தொட்டுள்ள அதே ஆண்டில், மொத்த உற்பத்தி (GDP) படுவீழ்ச்சி அடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசு செலவினங்களைக் குறைப்பதுடன் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த விவசாய உற்பத்தி, விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை தந்து ஆதரிக்க வேண்டும். பாதுகாப்புச் செலவினங்களுக்கு ஒதுக்கும் தொகை விரயமாகாமல், மிகுந்த கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் தீர்கதரிசனத்துடனும் கவனித்துக் கொள்ள வேண்டும். இந்தியாவின் பொருளாதார பலவீனமே சீனாவின் பலமாக மாறிப்போக அனுமதித்துவிடக் கூடாது. மத்திய அமைச்சரவையின் ஒட்டுமொத்த முயற்சியும் இது நோக்கித் திரும்ப வேண்டும். ●

follow up

இலக்கிய சர்ச்சை!

ஆண், பெண் பெயரில் எழுதலாமா என்ற தலைப்புடன் கல்கி (1.06.2008) இதழில் வெளியான இலக்கியச் சர்ச்சைக் கட்டுரைக்கு வாசகர்களின் கருத்துகளைக் கேட்டிருந்தோம். இதோ அவை:

உண்மையில், எழுத்தாளர்கள் பால் பேதம் கடந்தவர்கள்... புனைபெயரில் அவர்கள் ஒளிந்துகொள்ளக் கூடாது என்று வாதிடுவது எத்தனை அபத்தமோ, அதை



விட அபத்தமானது புனைபெயர்கள் இன்னவிதமாகத்தான் இருக்க வேண்டும் என்று பேசுவது.

- துரை. இராஜசேகரன், பொள்ளாச்சி - 2

பெண்களின் புனைபெயரில் எழுதும்போது, பெண்மைக்கு இழுக்கு நேரும் வண்ணம் எழுதினால் கோபிக்கலாம்; தண்டிக்கலாம்; தடை விதிக்கலாம். படைப்புகள்தான் முக்கியம். பெயர்கள் அல்ல.

- ஆர்.பழனிக்குமார், மதுரை - 14

பெண் பெயரில் ஒளிந்துகொண்டு பெண்களுக்கு அநீதி இழைக்கும் வகையில் எழுதியிருப்பவர் ஆண்தான் என்பது அடுத்தடுத்த தலைமுறையில் வாசிக்கக் கூடியவர்களுக்குத் தெரியாமல் போகக் கூடும்.

பத்மா, சென்னை - 20

ரசிக்கப்படும் படைப்பு, ஆராயப்படும் படைப்பு ஆண் எழுதினால் ஒரு பாதிப்பையும், பெண் எழுதினால் ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. சாவி என்ற பெயரில் எழுத, சாவியாக மாற வேண்டுமா?

- லலிதா செல்லப்பா, சென்னை - 75

கன்னட எழுத்தாளர்கள் ஏழு முறை 'சாகித்ய அகாடமி' விருது பெற்றுள்ளார்கள். இது போன்ற பிரச்னையாளர்கள் அங்கு இல்லாததே காரணம். சக எழுத்தாளர்களைச் சீண்டிப் பார்ப்பதும் ஓர் இலக்கிய அராஜகம்தான்!

- சி. நாச்சிமுத்து, ஈரோடு - 9

நேரில் பார்த்தால்தான் தெரியும், பெண் பெயரில் எழுதுபவர்கள் பெண்களுக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கின்றார்கள் என்பது. தனக்கென்று ஒரு பெயர் இருக்கும்போது, பின் எதற்கு பெண்களின் பெயரில்



ஒளிந்துகொள்ள வேண்டும்?

- எஸ். தியாகராஜ், கோவில்பட்டி

பெண்கள் ஏன் ஆண்கள் பெயரில் எழுதுவதில்லை! புதிய ஒரு சர்ச்சையைத் தொடங்கலாமா?

- சுமித்ரா கல்யாணராமன், சென்னை - 90

இயல்பாய் இருக்கும் எழுத்துகளுக்கு, புடைவையோ, வேட்டியோ கட்டிவிட வேண்டாமே.

- உமார்த்தி, கோயம்புத்தூர்.



சோ எழுதிய

மஹாபாரதம்
பேசுகிறது
ரூ. 600/-

வால்மீகி ராமாயணம்
ரூ. 600/-

ஹிந்து மஹா சமுத்திரம்
(3 பாகங்கள்)
ரூ. 600/-

அதிர்ஷ்டம் தந்த அனுபவங்கள்
ரூ. 145/-

இந்து தர்மம் ரூ. 75/-

எங்கே பிராமணன்? ரூ. 125/-

வெறுக்கத்தக்கதா பிராமணீயம்? ரூ. 35/-

1. வந்தே மாதரம்	115.00
2. வாஷிங்டனில் நல்லதம்பி	100.00
3. சர்க்கார் புகுந்த வீடு	100.00
4. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 1)	130.00
5. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 2)	75.00
6. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 3)	40.00
7. துக்ளக் படமெடுக்கிறார்	50.00
8. அதிகப் பிரசங்கம்	45.00
9. இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்	50.00
10. யாரோ இவர் யாரோ?	65.00
11. சாதல் இல்லையேல் காதல்	60.00
12. மை டியர் பிரம்மதேவா	30.00
13. இந்தியா எங்கே போகிறது?	20.00
14. துக்ளக் கேள்வி - பதில் I & II	100.00
15. ஒண்ணரைப் பக்க நாளேடு	40.00
16. காமராஜை சந்தித்தேன்	60.00
17. புரட்சி கீதை	35.00
18. திரையுலகைத் திரும்பிப் பார்க்கிறேன்	45.00
19. யாருக்கும் வெட்கமில்லை	40.00
20. சட்டம் தலை குனியட்டும்	40.00
21. எங்கே போகிறாய்?	40.00
22. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?	35.00
23. இறைவன் இறந்து விட்டானா?	35.00
24. இன்பக் கனா ஒன்று கண்டேன்	25.00
25. சாத்திரம் சொன்னதில்லை	40.00
26. சரஸ்வதியின் சபதம்	35.00
27. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு	35.00
28. நேர்மை உறங்கும் நேரம்	30.00
29. மனம் ஒரு குரங்கு	40.00
30. ஏன் கூடாது?	40.00
31. இரவில் சென்னை	40.00
32. முகமது பின் துக்ளக்	35.00
33. உறவுகள் இல்லையடி பாப்பா	40.00
34. சம்பவாமி யுகே யுகே	40.00
35. எதற்காக?	35.00
36. உண்மையே உன் விலை என்ன?	45.00

எஸ்.குருமூர்த்தி எழுதிய **தண்ணீர் விட்டோ வளர்த்தோம்** (3 பாகங்கள்) ரூ. 525/-

பரத்வாஜ் எழுதிய **ஆட்சி முறை - ஒரு பார்வை** ரூ. 200/-

கி.வா.ஜ. எழுதிய

தமிழ்ப் பழமொழிகள் (4 பாகங்கள்) ரூ. 400/-

கி.வா.ஜ. பதில்கள் (3 பாகங்கள்) ரூ. 165/-

அபிராமி அந்தாதி விளக்கவுரை (4 பாகங்கள்) ரூ. 300/-

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் (6 பாகங்கள்) ரூ. 735/-

தேவன் எழுதிய

1. துப்பறியும் சாம்பு - நாடகவடிவம்	ரூ. 65.00
2. சொன்னபடி கேளுங்கள்.	54.00
3. மல்லாரி ராவ் கதைகள்	60.00
4. அப்பளக் கச்சேரி	70.00
5. ராஜியின் பிள்ளை	45.00
6. போக்கிரி மாமா	90.00
7. மனித சுபாவம்	65.00
8. ஏன் இந்த அசட்டுத்தனம்	ரூ. 55.00
9. விச்சுவுக்குக் கடிதங்கள்	55.00
10. ராஜத்தின் மனோரதம்	50.00
11. சீனுப்பயல்	80.00
12. பார்வதியின் சங்கல்பம்	60.00
13. பல்லிசாமியின் துப்பு	75.00
14. சின்னஞ்சிறு கதைகள்	65.00
15. ரங்கூன் பெரியப்பா	52.00



என் செல்ல தளபதி!

சென்னை டு வேளாங்கன்னி

ஷோபா சந்திரசேகர்

விஜய் அடிக்கடி சென்னை சாந்தோம்ல இருக்கற சர்ச்சுக்குப் போவான். அவனோட புதுப் படம் ரிலீஸ் ஆகறப் போவும் விசேஷ நாட்கள்லயும் கண்டிப்பா அங்க போய், பிரார்த்தனை செஞ்சுட்டு வருவான். ஆனா, திடீர்னு அவன் அங்க போறது குறைஞ்சு போச்சு.

ஒரு நாள் நான் அவன்கிட்ட, ''ஏம்ப்பா இப்போல்லாம் நீ சர்ச்சுக்குப் போறதில்லை?''ன்னு கேட்டேன்.

அவன் ரொம்ப வேதனையோட சொன்னான்: ''அங்ககூட பக்கத்துல வந்து உக்காந்துக்கறாங்க. என்னையே எல்லாரும் வேடிக்கை பாக்கறாங்க. ஆட்டோகிராஃப் கேக்கறாங்க. சங்கடமா இருக்கு.'' கொஞ்சம் பிரபலமாயிட்டாலே இதையெல்லாம் தவிர்க்க முடியாது, இல்லையா?

அதுக்காக அவன் சர்ச்சுக்குப் போறதைச் சுத்தமா நிறுத்திடலை. புதுப்படம் ரிலீஸ் ஆகறப்போ நாகப்பட்டினத்துல இருக்கற வேளாங்கன்னி மாதா கோயிலுக்குக் கிளம்பிடுவான். யாருக்கும் தெரியவும் தெரியாது. ஒரு கார், அதுல அவனும் ட்ரைவரும் மட்டும்தான் இருப்பாங்க. காரை ட்ரைவர் ஓட்ட மாட்டார். விஜய்தான் ஓட்டுவான்!

காலையில் அஞ்சு மணிக்குக் கிளம்பினா, போய் மாதாவைக் கும்பிட்டுட்டு சாயந்தரம் இல்லைன்னா, ராத்திரியே வீட்டுக்குத் திரும்பி வந்துடுவான். காஃபி, டிஃபன் சாப்பிடறதுக்காகவாவது காரை எங்கேயாவது நிறுத்துவானான்னு தெரியல. அவ்வளவு ஃபாஸ்ட்டா ட்ரைவ் பண்ணுவான். அதே சமயம் ரொம்ப ஜாக்கிரதையாவும் ஓட்டுவான்.

''வேளாங்கன்னிக்கு நீ போறேன்னு சொல்லியிருந்தா, நாங்களும் வந்திருப்போம்ல'' அப்படின்னு ஒரு தடவை கேட்டேன்.

''ஆமா... வந்திருப்பீங்கதான். ஆனா, சாப்பிடறதுக்கும் மத்ததுக்கும் அங்கங்க நிறுத்துவீங்க. அது எனக்கு மட்டும் இல்ல, உங்களுக்கும் தொந்தரவாப் போயிடும். நிம்மதியா சாமி கும்பிட்டோமா, வந்தோமான்னு இருக்க முடியாது. அதுனாலதான் தனியாப் போய்ட்டு வந்துடறேன்.''

விஜய்யோட முதல் படம் 'நாளைய தீர்ப்பு' ஐம்பது நாள் போனது. சரி, இவன் எப்படியும் தேறிடுவான்னு முடிவு பண்ணினோம். அப்புறம் விஜய்காந்த் சார்கிட்ட போய்ப் பேசினோம். 'உங்களோட விஜய் நடிச்சா நல்லாருக்கும். ஒரு படத்துல அவன் சேர்ந்து நடிக்கட்டுமே!'ன்னு சொன்னோம். அவரும் ஒப்புக்கிட்டார். 'செந்தூரபாண்டி' படத்துல ரெண்டுபேரும் சேர்ந்து நடிச்சாங்க. படமும் நல்லா போனது.



விஜய் நடிச்ச முதல் நான்கு படங்களையும் அவனோட

மாமா சேவியர் பிரிட்டோதான் பி.வி.கம்பைன்ஸ்ங்கற பேர்ல தயாரிச்சார். அதுக்கு அப்புறம்தான் வெளியாட்கள் தயாரிக்கற படங்கள்ல நடிக்கற வாய்ப்பு விஜய்க்கு வந்தது. 'தேவா' படம் பாத்துட்டுதான் விக்கிரமன் சார், 'பூவே உனக்காக'ல நடிக்கக் கூப்பிட்டார். 'விஷ்ணு' பாத்துட்டுதான் ஃபாசில் சாருக்கு 'காதலுக்கு மரியாதை' எடுக்கணுங்கற ஐடியா வந்திருக்கு.

அப்படி வெளிலருந்து வந்த முதல் படம் 'வசந்த வாசல்'. அந்தப் படத்தை என்னாலயும் என் கணவராலயும் எப்பயும் மறக்க முடியாது. முதல் நாலு படமும்



அவங்க மாமா தயாரிச்ச படம்ங்கறதால நானும் அவரும் விஜய் கூடவே இருப் போம். அவன் தனியா ஷூட்டிங்குக்குப் போனதில்லை. ஆனா, 'வசந்த வாசல்' படம் ஷூட்டிங்கப்போ எங்க ரெண்டு பேராலயும் அவன்கூடப் போக முடியலை.

என் கணவருக்கு அப்போல்லாம் நவம் பர், டிசம்பர் மாசம் வந்தாலே உடம்புக்கு ஒத்துக்காது. 'வீஸிங்' வந்துடும். மூச்சுவிட முடியாம ரொம்ப அவதிப்படுவார். அந்தத் தடவை வந்தது ரொம்ப சிவியர் அட்டாக். அவரை மலர் மருத்துவமனையில ஐ.சி.யுவில சேர்க்க வேண்டியதாயிடுச்சு.

'வசந்த வாசல்' ஷூட்டிங்குக்காக விஜய் வெளியூர் போகணும். அவருக்கு உடம்பு முடியலை. நான் அவர்கூடவே இருந்தாகணும். விஜய்க்கு எங்களை விட்டுட்டுப் போகவே மனசில்லை. என் கணவர், ''நமக்காக விஜய்யோட ஷூட்டிங் நிக்க வேணாம். நீ போய் ரயில் ஏத்திட்டு வந்துடு''ன்னார். விஜய் மனசே இல்லாமக் கிளம்பிப் போனான்.

அன்னிலருந்து இன்னைக்கு வரைக்கும் விஜய் தன்னையோ, தன் குணத்தையோ மாத்திக்கிட்டதே இல்லை. எவ்வளவு பெரிய விஷயமா இருந்தாலும், அதை சாஃப்ட்டா எடுத்துக்குவான். அதுக்கு உதாரணம், 'பூவே உனக்காக' படம்.

அந்தப் படம் விஜய்யோட கலரை மாத்திக் காமிச்ச படம். அது வரைக்கும் கமர்ஷியல் ஹீரோவா இருந்த விஜய், அந்தப் படத்துலதான் நடிப்புல இன்னொரு பரிமாணத்தைக் காமிச்சான். அந்த வித்தியாசம், சட்டுன்னு பெண்கள் முதல் எல்லாத் தரப்பினருக்கும் பிடிக்கப் போயிடுச்சு.

'பூவே உனக்காக' படத்தை முதல் தடவை பாத்துட்டு, விஜய்கிட்ட ''ரொம்ப நல்லா

என்ன பரிசு?

- சரியான விடைகளுடன் வரும் முதல் 10 கூப்பன்களுக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட்...
- குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ்...





இருக்கு விஜய்''ன்னு சொன்னேன். அவன் லேசா சிரிச்சான். வேற எந்தப் பதிலும் சொல்லலை. அப்போ மட்டும் இல்லை. இப்பவும் அப்படித்தான். 'சிவகாசி', 'போக்கிரி' படம் பாத்துட்டு ''பிரமா தம்ப்பா''ன்னு சொன்னா, 'சரி'ங்கற மாதிரி லேசா சிரிப்பான். அவ்வளவுதான். வேற எந்த ரியாக்ஷனையும் அவன்கிட்ட இருந்து எதிர்பார்க்க முடியாது.

'பூவே உனக்காக' 250 நாட்கள் ஓடிச்சு. அந்தப் படத்தை நான் கமலா தியேட்டர்ல இருபத்தெட்டு தடவை பார்த்தேன். அது எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காத படம்.

(தொடரும்)

எழுத்து வடிவம்: **பாலு சத்யா**

ஹலோ வாசகர்களே!

ஷோபா சந்திரசேகர் எழுதற, 'என் செல்ல தளபதி' தொடர் அசத்தலா இருக்குதானே? நீங்களும் சும்மா அசத்தறீங்க இல்ல. போன வாரப் போட்டிக்கு மளமளன்னு என்ட்ரீஸ் குவியுது!

- விஜய் வின்னர்ஸ் - 4 தொடர் சங்கிலிப் போட்டிக்கான முடிவும், இந்த வார கூப்பனும் பக்கம்-22ல் உள்ளன.
- பதிமூணு வாரமும் அதிரடிப் போட்டி தொடரப் போகுது. ஒவ்வொரு வாரமும் பரிசு! பதிமூன்றாவது வாரம் பம்பர் போட்டி, வியப்பான மெகா பரிசுகள்!
- நீங்க செய்ய வேண்டியது ரொம்ப சிம்பிள்! ஒவ்வொரு வாரமும் ஐந்து கேள்விகள் கேட்போம். அதுல ஒண்ணு தொடரிலிருந்து வரும். சரியான விடைகளை 'டிக்' அடிச்சு கூப்பனையும் நிரப்பி, அந்தப் பக்கத்தைக் கத்தரிச்சு அனுப்பணும்.
- ஒருவரே எத்தனை கூப்பன் வேணும்னாலும் அனுப்பலாம். ஆனா ஜெராக்ஸ் கூடாது. எவ்வளவு வேகமா அனுப்பறீங்களோ அந்தளவுக்குப் பரிசு பெற சான்ஸ் இருக்கு!
- வெய்ட்! பதிமூன்றாவது வார பம்பர் போட்டியில நீங்க கலந்துக்கணும்னா 'விஜய்' ஸ்டில் போட்ட 'தொடர் சங்கிலி கூப்பனை' பத்திரமா சேகரிக்கணும். (இந்த வாரம்-21ஆம் பக்கம் இருக்கு)
- பதிமூன்றாவது வார போட்டியோடு தொடர் சங்கிலி கூப்பன்கள் அனைத்தையும் இணைச்சு அனுப்பணும். ஒரு கூப்பனை 'மிஸ்' பண்ணினாலும், நீங்க அந்த வியப்பான பரிசுகளை 'மிஸ்' பண்ணிடுவீங்க.
- இந்த பதிமூன்று வாரத்தில் உங்களுக்கு ஒரு இதழ் கிடைக்காமப் போனாலும், உடனே எங்களுக்கு ஃபோன் பண்ணுங்க. உங்க நகரத்து ஏஜெண்ட் மூலமா கிடைக்க உதவி செய்யறோம்.

  ஸோ, டயல் : 4343 8888
- போட்டி குறித்த இறுதி முடிவுகளில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- போட்டியில் கலந்துக்கங்க; பரிசுகளை அள்ளுங்க!



விஜய் வின்னர்ஸ் - 4

தொடர் சங்கிலிப் போட்டி பரிசு பெற்றோர் விவரம்...

1. ஜி.ராஜா, நெல்லிக்குப்பம்
2. வி.வைஷ்ணவி, ஆதம்பாக்கம்
3. சி.ராஜீசந்திரசேகர், சென்னிமலை
4. மு.மதிவாணன், அரூர்
5. ஜி.பாரதி, நெல்லிக்குப்பம்
6. திருமதி விஜயா, கடலூர்
7. வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி
8. வி.ஸ்ரீராம், ஸ்ரீரங்கம்
9. எம்.சோமசுந்தரம், தர்மபுரி
10. எஸ்.நந்தினி, தர்மபுரி

* முதல் பத்து கூப்பன்களை அனுப்பிய மேற்கண்டோருக்கு விஜய் படம் பொறித்த டி-ஷர்ட் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.
* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 100 அதிர்ஷ்டசாலிகளுக்கு விஜய் கையெழுத்திட்ட ஸ்டில்ஸ் அனுப்பி வைக்கப்படும்.

இந்த வாரக் கேள்விகள்!

கடைசி தேதி : 26.06.2008

1. விஜய்-சிம்ரன் சேர்ந்து நடித்த முதல் படம்?
   ☐ கில்லி ☐ ஒன்ஸ்மோர்
2. 'நிலவு பாட்டு நிலவு பாட்டு...' இந்தப் பாடல் இடம்பெற்ற படம்?
   ☐ கண்ணுக்குள் நிலவு
   ☐ காதலுக்கு மரியாதை
3. ஒவ்வொரு பட ரிலீஸின் போதும் விஜய் செல்லும் கோயில்?
   ☐ வேளாங்கண்ணி ☐ திருப்பதி
4. விஜய்யின் மனைவி பெயர்
   ☐ சங்கீதா ☐ சரண்யா
5. ஐ.பி.எல் கிரிக்கெட்டில் விஜய் எந்த அணியின் அம்பாஸிடர்
   ☐ ராஜஸ்தான் ராயல்ஸ்
   ☐ சென்னை சூப்பர் கிங்ஸ்

பெயர் : .... வயது : ....

முகவரி : ....

....

செல் : .... இ.மெயில் : ....

போட்டி கூப்பன் அனுப்ப வேண்டிய முகவரி :

விஜய் வின்னர்ஸ் போட்டி - 7,

கல்கி, 47-NP, ஜவாஹர்லால் நேரு ரோடு,

ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

சுடும் ஈரம்!

கண் விழித்து வெளியே வந்தாள் கவிதா. எதிரே நின்ற அந்தச் சிடுமூஞ்சி பாட்டியைப் பார்த்ததும் ஆத்திரமாக வந்தது. அவளது குடும்பம் இதற்கு முன் அந்தப் பாட்டியின் வீட்டில்தான் குடியிருந்தது. வீடு நன்றாகத்தான் இருந்தது. என்றாலும், பாட்டியின் சிடுசிடுப்பு அவர்கள் நிம்மதியைக் குறைத்தது.

கவிதா, அப்போது படித்துக் கொண்டிருந்தாள். அவள் கவனத்தைச் சிதைப்பதுபோல ,

''ஏன்டிம்மா, பைப்புல இருந்து இவ்வளவு தண்ணீ வீணா போகுதே... உனக்குத் தெரியலையா என்ன?''


''வண்டியைக் கொண்டாந்து மெதுவா நிறுத்த தெரியாதா? இப்படி வேகமா ஸ்டேண்டு போட்டா, தரையெல்லாம் காரை பெயர்ந்து போகாதா?''

''இப்படிக் காதைப் பொளக்குறாபல சவுண்டு வைச்சிக்கிட்டுப் பாட்டுக் கேக்குறியே அக்கம் பக்கம் இருக்கவங்க நிம்மதியா தூங்க வேணாமா?''

''பொண்ணுன்னா அடக்க ஒடுக்கமா இருக்கணும். உன் கூடப் படிக்கறதுகளோட மொட்டமாடியில் நின்னுக்கிட்டு, அப்படியென்ன வெட்கம்கெட்ட ஆட்டம்?''

- இப்படி, தினசரி பலவிதமான தொணதொணப்புகளை வீசி சிடுசிடுவென விழுவாள்.

ஒருவழியாகப் படிப்பு முடிந்து, அவளிடமிருந்து தப்பித்து, வேறு நல்ல வீடாகப் பார்த்து குடிவந்தால்... இங்கும் அந்தச் சிடுமூஞ்சி வந்துவிட்டதே... என நினைத்தவள், ''என்ன?'' என்று கடுகடுப்புடன் கேட்டாள் கவிதா.



''ஒண்ணுமில்ல தாயி. உனக்கு ஒரு கடுதாசி வந்தது. அதைக் கொடுத்திட்டுப் போலான்னுதான் வந்தேன்'' என்று கடிதத்தை மடியிலிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

அதை வாங்கிப் படித்தவள் அதிர்ந்தாள். அது அவள் வேலையில் சேருவதற்கான உத்தரவு. இன்றுதான் அதற்குக் கடைசி நாள். இவ்வளவு தூரம் நடந்து வந்து, சிரமத்தைப் பாராமல் உரிய நேரத்தில் கடிதத்தைக் கொடுத்த பாட்டியை நினைத்தபோது நெஞ்சம் நெகிழ்ந்தது. ●

வெ. தமிழழகன்

ஸ்லம் டூரிஸம்?!

ஜெய்ப்பூர் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்துக்குப் பின், புலனாய்வு அமைப்புகளின் ஆலோசனைப்படி, மும்பையில் சைக்கிள் விற்பனை நிலையங்களின் மீதான கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, 'வாகன சோதனைகளின்போதும் வி.ஐ.பி. போக்குவரத்துகளின்போதும் மற்ற மோட்டார் வாகனங்களைப் போலவே, சைக்கிள்கள் மீதும் கவனம் இருக்கட்டும்; லைட்டாக விட்டு விட வேண்டாம்' என்றும் காக்கிகளுக்குக் கட்டளையும் இடப்பட்டிருக்கிறது.


மும்பையில் உள்ள குடிசைப் பகுதியான 'தாராவி'க்கு, ஆசியாவின் மிகப் பெரிய குடிசைப் பகுதி என்ற பெயர் உண்டு. இப்போது தாராவி, மும்பைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்கும் ஒரு முக்கிய இடமாகிவிட்டது. சில சுற்றுலா நிறுவனங்கள் 'தினசரி தாராவி சுற்றுலா' நடத்துகின்றன. சிறு சிறு குழுக்களாக காரில் அழைத்துச் சென்று தாராவியைச் சுற்றிக் காட்டி, அங்கு வாழும் மக்களைச் சந்தித்துப் பேசவும், அவர்கள் வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிந்துகொள்ளவும் வழி செய்கிறார்கள். தாராவி சுகாதாரக் குறைவான பகுதி என்பதால், பயணிகளுக்கு ஏகப்பட்ட செய்யக்கூடியவை/ செய்யக் கூடாதவை பட்டியல். அவற்றில் முக்கியமானது; நோ கேமரா! நோ ஃபோட்டோ! தேவையானால், இ மெயிலில் சில புகைப்படங்களை அவர்களே அனுப்பி வைக்கிறார்கள். மெடிக்கல் டூரிஸம், ரூரல் டூரிஸம் போல, இது 'ஸ்லம் டூரிஸமாம்!'

மும்பையின் மேற்கு மற்றும் மத்திய ரயில்வேக்களின் பெரும்பாலான ரயில் நிலையங்களில், புறநகர் ரயில்களின் வருகை, புறப்பாடு, காலதாமதம் மற்றும் இதர தகவல்களை அறிவிக்க, இயந்திரங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. என்றாலும், சர்ச் கேட், தாதர், மும்பை சென்ட்ரல் என்று ஒரு சில ஸ்டேஷன்களில் பார்வையற்றவர்கள், அந்த வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள், அனைத்து அறிவிப்புகளையும் வாய்மொழியாக நேரடியாகவே அறிவிக்கிறார்கள். இது மும்பையின் ரயில் பயணிகள் பலருக்கும் தெரியாத தகவல். குறிப்பாக, சர்ச் கேட் ரயில் நிலையத்தில் பாலூ ஷிண்டேவும், மும்பை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் மீட்டா டொன்வால்கரும் கடந்த ஆறு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். ''மும்பையின் கடுமையான பருவ மழை காலத்தில், வெள்ளம், தண்ணீர் தேக்கம், காலதாமதம் எல்லாம் மிகவும் சகஜம்.





அதனால் மக்கள் படும் கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. அப்போது டியூட்டி நேரம் முழுவதும் (எட்டு மணி நேரம்), மாற்றி மாற்றி ஏதாவது அறிவிப்புகள் இருந்துகொண்டே இருக்கும். அதேசமயம் அறிவிப்பில் செய்யும் சிறு தவறுகூட உதாரணமாக, ரயில் வரும் பிளாட்பாரத்தை மாற்றிச் சொல்லிவிட்டால், அது பலரையும் வீண் சிரமத்தில் ஆழ்த்திவிடும். எனவே, மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.''


● தாராவியின் ஒரு பகுதி...


● மும்பை - சத்ரபதி சிவாஜி இரயில் நிலையம்...

மும்பையின் டாப் தாதாக்களில் ஒருவர் அருண் காவ்லி. இப்போது அவர் மகாராஷ்ட்ரா சட்டமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர். ஆனால், அவர், எம்.எல்.ஏ. ஆன பிறகும்கூட, சட்டமன்றத்தைவிட சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் கழித்துக்கொண்டிருக்கும் நாட்களே அதிகம். அண்மையில் ஒரு வழக்கு சம்பந்தமாகச் சிறையிலிருந்து கோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்டார் அருண் காவ்லி. அவருக்கு ஜாமீன் வழங்கலாமா? கூடாதா? என்று அருண் காவ்லியின் வக்கீலும், அரசு வக்கீலும் காரசாரமாக வாதிட்டு முடித்த பிறகு, காவ்லி, திடீரென்று நீதிபதியிடம், ''ஐயா! எனது தாடியைப் பாருங்கள்; ஷேவ் செய்து பல நாட்களாகிவிட்டன; நகம் வெட்டிக்கொள்ளவும் வழியில்லை!'' என்று சொல்ல, உடனே, அரசு வக்கீல், ''அருண் காவ்லி ஒன்றும் சாதாரணமான ஆளில்லை. அவர் கையில் ரேசர், பிளேடு எல்லாம் கொடுப்பது மிகவும் ரிஸ்க்'' என்று தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தார். அதை நீதிபதியும் ஏற்றுக்கொண்டார்.

– **எஸ்.சந்திரமௌலி**

கால் கிலோ காதல் அரை கிலோ கனவு

இன்றோடு வகுப்புகள் முடிகின்றன. 'சரியாக ஏழாவது நாள் தேர்வுகள் தொடங்கும்' என்று ஹெட் மாஸ்டர் கையெழுத்துப் போட்ட அறிவிப்பை, நோட்டீஸ் போர்டில் ப்யூன் எட்டியப்பன் வந்து ஒட்டிவிட்டுச் சென்றான்.

''வளர்மதி ஏன் இந்த ஒருவாரமா ஸ்கூலுக்கு வரல?'' என்று பத்மநாபன் ராஜாத்தியிடம் கேட்டான்.

அவனை ஒரு மாதிரி முறைத்துப் பார்த்தவள், ''தெரியல. தெரிஞ்சிக்கவேண்டிய அவசியமும் இல்ல'' என்று சொல்லிவிட்டுப் போனாள். வேறு யாரிடம் விசாரித்தால் விவரம் தெரியும் என்று புரியவில்லை. பையன்கள் யாருக்கும் தன் தவிப்பு தெரியாமல் இருக்க, பெரும்பாலும் புத்தகங்களால் தன் முகத்தை மறைத்துக்கொண்டான். பெண்கள் பிரிவில் வளர்மதிக்கு நெருக்கமான ஒன்றிரண்டு பேரிடம் பேச்சுக் கொடுத்துப் பார்த்தபோது, சரியான பதில் கிடைக்கவில்லை.

''ஏதனா உடம்புக்குச் சரியில்லாம இருக்கும்டா குடுமி'' என்று க்ளாரா சொன்னாள். திக்கென்றது. சந்தேகமாகத்தான் சொல்கிறாள் என்றாலும், தனக்கு ஏன் அது குடலைப் புரட்டி, தொண்டைக்குத் தள்ளுகிறது?

ஜெயலலிதாவிடம் கேட்டபோது, ''அவங்கப்பா அவள அடையாறுல சேக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தாரு. ஒரு வேளை எக்ஸாம அடையார் ஸ்கூல்ல எழுதறாளோ என்னமோ'' என்றாள் சர்வ அலட்சியமாக.

வெறுப்பாக இருந்தது. எப்போதும் அழுகை வந்தது. படிக்கத் தோன்றவில்லை. இதுதானா? இவ்வளவுதானா? ஒரு மாதக் கடும் முயற்சி. இறுதித்தேர்வில் நிச்சயமாக முதல் மார்க் வாங்கக்கூடிய தரத்தைத் தொட்டுவிடுவோம் என்று அவன் தீர்மானமாக நம்பத்தொடங்கியிருந்த வேளையில், இப்படியொரு பூதம் புறப்பட்டிருக்கிறது. 'நான் என்ன ஆகப்போகிறேன்?'

மொட்டை மாடி விளக்கின் அடியில் புத்தகத்தை வைத்துக்கொண்டு, பத்மநாபன் யோசித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வியப்பாக இருந்தது. வளர்மதி பள்ளிக்கு வராதது பற்றி, ஆசிரியர்கள் யாரும் ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை.

''படிக்கறியா? படிபடி'' என்று மேலே வந்து எட்டிப்பார்த்த அப்பா, அன்பாகத் தலையை வருடினார். அழுகை வந்தது.

படிக்கவில்லை; படிக்க முடியவில்லை; அதுகூடப் பரவாயில்லை. படித்ததெல்லாம் மறந்துவிடும்போல் இருக்கிறது. 'இந்தக் கடன்காரி அப்படி எங்கேதான் போயிருப்பாள்?'

ஃபார்முலாக்கள் மறக்கத் தொடங்கின; உருப்போட்ட செய்யுள்கள் உதைத்தன;

பாஸ்ட் டு பர்ஃபெக்ட் டென்ஸும் ப்ரசன்ட் கண்டின் யூவஸ் டென்ஸும் தண்ணி காட்ட ஆரம்பித்தன; அக்பரும் பாபரும் பானிப் பட்டில், ஒரே நாளில் நேருக்கு நேர் மோதிக்கொண் டார்கள்; உலகம் வலப்புற மாகச் சுழல ஆரம்பித்தது. புத்தகம் சரிய, அவன் அப் படியே தூங்கிப்போனான்.

''நிஜமாவாடி?'' என்றாள் வளர்மதி.

''சொன்னா நம்பமாட்ட. உம்மேல பைத்தியமா இருக் கான்டி'' என்று ராஜாத்தி சொன்னாள்.

அவள் சிரித்தாள். ''தெரி யும். ஆனா, இதெல்லாம் தப்புதானே!''

''நம்ம க்ளாஸ் பசங் களுக்கு, லவ் பண்றது ஒரு ஹாபிடி. ஆனா, குடுமி டோட்டலா



பா.ராகவன்

வேற மாதிரி இருக்கான் வளரு. போன வாரம் முழுக்க க்ளாஸ்ல அவன் பட்ட பாட்டப் பாக்கணுமே நீ? மூஞ்சி பேய றைஞ்சமாதிரி இருந்துச்சு. யார்கிட்டயும் ஒரு வார்த்த பேசல. நீ உக்கார்ற இடத்தையே பாத்துக்கிட்டிருந்தான்.''

வளர்மதி திரும்பவும் புன்னகை செய்தாள். சாப்பிட்டுக்கொண்டிருந்த குச்சி ஐஸ், உதட்டோரம் சற்றே ஒழுகி உதிர்ந்தது... அழகாக இருந்தது.

''சொல்லிவெச்ச மாதிரி வாத்யார்கூட நீ எங்கன்னு கேக்கல தெரியுமா?''

''நான்தான் அப்பாகிட்டேருந்து லெட்டர் வாங்கிட்டு வந்து குடுத்து, முன்னாடியே அட்டண்டன்ஸ்ல லீவ் மார்க் பண்ணிட்டேனே? போறச்சே, எல்லா சார்ங்ககிட்டயும் சொல்லிட்டுத்தான் போனேன்.''

''அத்தை வீட்ல படிக்க முடிஞ்சதாடி?''

''சுமாரா படிச்சேன். கல்யாணத்துக்குப் போய்ட்டு, படிக்க எங்க முடியுது? ஆனா, ஜாலியா இருந்துச்சிப்பா. மெட்ராஸ்னா மெட்ராஸ் தான்!''

''காந்தி படம். மாமா கூட்டிக்கிட்டுப் போனார். இங்கிலீஷ் படம்.''

''ஓ...'' என்றாள் ராஜாத்தி. செகண்ட் ரேங்க் வாங்குகிறவள், இங்கிலீஷ் படம் பார்ப்பதில் தவறில்லை. தவிரவும் ராஜலட்சுமி திரையரங்கில் காந்தி போன்ற படங்களைப் பொதுவாகத் திரையிடுவதில்லை.

''அவன் என்னை லவ் பண்றான்னு எனக்குத் தெரியும்டி. சின்ஸியராத்தான் பண்றான். ஆனா, எனக்கு இதெல்லாம் பிடிக்கல தெரியுமா?''

''அடச்சீ அவன விடுடி. மெட்ராஸ்ல வேற எங்கெல்லாம் போன?''

''பீச்சுக்குத்தான் போனேன்.''

''இங்க பாக்காத பீச்சா?''

''அங்க பீச்ல கடலையெல்லாம் விக்கறாங்கடி. குதிரை ஓட்றாங்க. நிறையப்பேர் ஜோடி ஜோடியா மண்ணுல உக்காந்துக்கிட்டு லவ் பண்றாங்க. யாரும் கண்டுக்கறதே இல்ல.''

இதைச் சொல்லும்போதே வளர்மதி வெட்கப்பட்டதுபோல் ராஜாத்திக்குத் தெரிந்தது. உற்றுப்பார்த்தாள். சில வினாடிகள் கழித்துக் கேட்டாள். ''உண்மையச்



செஞ்சிக்கோட்டை சிங்கங்கள்!

''கவிஞர்கள் முத்துலிங்கம், புலமை பித்தன், பாடகர்கள் எஸ்.என்.சுரேந்தர், சீர்காழி சிவ சிதம்பரம் இவர்கள்தான் எனக்கு வேண்டும்'' என்கிறார், 'அய்யா வழி' படத்தின் இயக்குநர் பி.சி.அன்பழகன். கவிஞர்கள் பாட்டெழுதுவதற்கும், பாடகர்கள் பாடுவதற்குமா... என்றால், ''அதுதான் இல்லை; நடிப்பதற்கு'' என்கிறார். ஏற்கெனவே 'காமராசு' படத்தின் மூலம் திரையுலகில் தம் முத்திரையைப் பதித்த அன்பழகன், இப்போது மன்னர்கால கதையோடு களத்தில் குதித்திருக்கிறார்!

''இந்தப் படத்துக்காக செஞ்சிக் கோட்டையில், அரண்மனை போன்ற அரங்குகள் அமைத்து ஒரு மாதம் படப்பிடிப்பு நடத்தியிருக்கிறோம். வேடிக்கை பார்க்க வந்த சுற்று வட்டார மக்கள், எங்களுக்கு உதவியதை மறக்க முடியாது. கேமரா ஆங்கிள் மாற்றும் போதும், இடம் மாற்றும்போதும் தங்கள் தோளில் தூக்கி உதவி செய்தனர். படப்பிடிப்பு முடித்துக் கிளம்பும்போது, சொந்தங்களை விட்டுப் பிரிவது போன்ற ஒரு நெகிழ்வு இருந்தது'' என்கிறார் இயக்குநர் அன்பழகன்.

சொல்லு. நீ குடுமிய லவ் பண்றியா?''

வளர்மதி திடுக்கிட்டாள். சற்றுநேரம் யோசித்தாள். பிறகு, ''அவன எனக்குப் பிடிக்கும்டி. ஆனா லவ் இல்ல.''

''பின்ன? பிரதரா?''

''சேச்சே.''

''பிரதர் இல்லன்னா லவ்தான்.

வேறென்ன இருக்கு?''

''நல்ல ஃப்ரெண்டுடி அவன்.''

''அவன் அப்படி நினைக்கலியே?''

''தெரியல... பாப்போம்... மொதல்ல முழுப்பரீட்சை முடியட்டும். அடுத்த வருஷம் செக்ஷன் மாத்திட்டாங்கன்னா, டோட்டலா எல்லாம் மாறிடும்.''

பள்ளியில் அந்த ஒரு பிரச்னை இருந்தது. இன்ன காரணம் என்று யாரும் சொல்வதில்லை. சம்பந்தமில்லாமல் பிள்ளைகளை அடுத்த வகுப்பில், வேறு வேறு பிரிவுகளுக்குப் பிரித்துப் போடுவார்கள்.

ஒருவார ஸ்டடி ஹாலிடேஸ் முழுவதும் வளர்மதியும் ராஜாத்தியும், வளர்மதியின் வீட்டு மொட்டைமாடி கூரைச் சரிவினடியில்தான் படித்துக்கொண்டிருந்தார்கள். க்ளாரா வந்தாள். இரவு பகலாகப் புத்தகங்களை மேய்ந்துதின்று கொண்டிருந்தார்கள். நடுவில் பள்ளி குறித்தும் பையன்கள் குறித்தும் பேச்சு வரும் போதெல்லாம், வளர்மதி, குடுமியைப் பற்றிப் பேசியதை ராஜாத்தி கவனித்தாள்.

வாரத்தின் கடைசி தினம், ஞாயிற்றுக் கிழமை விடுமுறை. மறுநாள் முழுப் பரீட்சை. பதற்றமும் கவலையும் மேலோங்கி, விடைபெற்ற கணத்தில்



அவள் மீண்டும் கேட்டாள். ''இப்பவாச்சும் சொல்லிடுடி. குடுமிய நீ லவ் பண்றியா?''

யோசித்தாள். ''இல்லன்னுதான் நினைக்கறேன்'' என்று சொன்னாள்.

அதே ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறு மணி முப்பது நிமிடங்களுக்கு பத்மநாபன் முகம் கழுவி, சட்டை மாற்றி நெற்றி நிறைய விபூதி வைத்துக்கொண்டு அப்பாவிடம் வந்து, ''நான் பைபாஸ் முத்துமாரியம்மன் கோயில் வரைக்கும் போயிட்டு வந்துடறேம்பா'' என்று சொன்னான்.

நிமிர்ந்தவர், ''இந்தா... போறச்சே கற்பூரம் ஒரு கட்டி வாங்கிட்டுப் போ'' என்று ஒரு ரூபாய் கொடுத்தார்.

பத்மநாபன் வாசலுக்குச் சென்றதும் தன் மனைவியிடம், ''பாத்தியா எம்புள்ளைய?'' என்றார்.

''என்னமோ... பாஸ் பண்ணான்னா சரி.''

''பைத்தியக்காரி, அவன் ஃபர்ஸ்ட் ரேங்க் வாங்கப் போறான்டி!''

''நெசமாவாங்க?''

''வெயிட் பண்ணிப் பாரு. எம்புள்ள படிப்புல எறங்கிட்டான்.''

பத்மநாபன் கேட்டுக் கொண்டுதான் இருந்தான். அழுகை வந்தது. அடக்கிக் கொண்டு முத்துமாரியம்மனிடம் ஓடினான். ஒரு கற்பூரத்தைக் கொளுத்திக் கும்பிட்டுவிட்டு மூன்று முறை சுற்றிவந்தான்.

'நாளை தேர்வு தொடங்குகிறது. முத்துமாரியம்மா! பாடங்கள் மறந்தால்கூடப் பிரச்னையில்லை. சமாளித்துவிடுவேன். வளர்மதி நினைவில் வராதிருக்க, நீதான் அருள் புரியவேண்டும்' என்று வேண்டிக் கொண்டு வந்தான்.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு உட்கார்ந்து புத்தகத்தைத் திறந்தான். வளர்மதிக்கு எழுதிய கடிதம்தான் முதலில் கண்ணில் பட்டது.

(தொடரும்)

கிச்சனில் அழகுப் பொருட்கள்!



ப்யூட்டி பார்லர் போய் ஃபேஸ் பேக், ஃபேஷியல் என பணத்தை வாரி இறைப்பவர்கள் ஏராளம்! முகத்தில் அழகு வந்திருக்கிறதா என கண்ணாடியில் தேடிப் பார்த்த கையோடு பர்ஸிலும் பணத்தைத் தேடிக் கொண்டிருப்பார்கள். நம் வீட்டு கிச்சனிலேயே அழகுப் பொருட்கள் ஒளிந்து கொண்டிருப்பது பெண்களுக்குத் தெரியவில்லை. சருமம் பளபளவென்று மின்னும், 'சாட்டின் சருமத்துக்கு நாங்க கியாரெண்டி' என காய்-கனிகள் கோரஸாக பாடுவதைக் கேட்போமா?



வெள்ளரி டானிக் : எண்ணெய்ப் பசையுடன் ஒருவித டல் சருமமா? கவலையை விடுங்கள். ஒரு சிறு வெள்ளரியைத் துருவி, கைகளால் ஒட்டப் பிழிந்து ஜூஸை எடுங்கள். இதில் ஒரு ஸ்பூன் ரோஸ் வாட்டர், ஒரு ஸ்பூன் எலுமிச்சை ஜூஸ் சேர்த்து முகம், கழுத்து மற்றும் கைகளில் தடவவும். 15 நிமிடங்கள் கழித்து கழுவவும். ரெகுலராக செய்தால் பலன் கண்டிப்பாகத் தெரியும்.

தக்காளி லோஷன்: சிலருக்குச் சருமத்தில் பெரிய துளைகள் இருக்கும். இது சுருங்க வேண்டுமானால், தக்காளிச் சாறில், சில துளிகள் எலுமிச்சை ஜூஸைக் கலந்து முகத்தில் தடவ வேண்டும். 15 நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும். நாளடைவில் பிரமிக்கத்தக்க பலன் தெரிய வரும். சருமத்துக்கு மிகவும் நல்லது!

கோகோனட் லோஷன்: இளநீர் சருமத்துக்கு மிகவும் நல்லது. இளநீரை சருமத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து வாஷ் பண்ணவும். கலர் கூடும். கபாலென்று தேங்காயை உடைத்து, மடக்கென்று இளநீரை வாயில் விடாமல், முகத்தில் தடவவும்.

ஆப்பிள் டானிக்: ஆப்பிள் ஜூஸில் சிறிது எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவவும். எண்ணெய்ப் பசையுள்ள சருமத்திலிருந்து விடுதலை நிச்சயம்! 1 டேபிள் ஸ்பூன் ஆப்பிள் ஜூஸ் என்றால் கால் டீஸ்பூன் எலுமிச்சை ஜூஸ் கலந்து, முகத்தில் தடவி 20 நிமிடங்கள் ஊறிய பிறகு கழுவவும்.

உடையழகு... நடைப்பழகு...

கேபேஜ் மாஸ்க்: முகம் பூவைப் போல ஃப்ரெஷ்ஷாக இருக்க வேண்டுமா? முட்டைக்கோஸை ஒரு மிக்ஸியில் அரைத்து சாறை எடுக்கவும். இதில் கால் டீஸ்பூன் ஈஸ்ட்டைக் கலக்கவும். கூடவே ஒரு ஸ்பூன் தேன்! இந்தக் கலவை திக்காக இருக்க வேண்டும். முகம் மற்றும் கழுத்தில் பூசி கால் மணி நேரம் ஊறிய பிறகு, தண்ணீரில் நனைத்த பஞ்சால் துடைத்து எடுக்கவும். கேபேஜ் மாஸ்க் தினசரி போடவும். சருமம் ஜொலிக்கும்.

பப்பாளி க்ரீம்: பப்பாளிக் காயை நன்றாக மையாக அரைத்து முகத்தில் நன்றாகத் தடவவும். 15 நிமிடங்கள் கழித்து கழுவவும். முகம் பூரா பருக்கள், வடுக்கள் உள்ளவர்கள், தினம் பப்பாளி க்ரீமை உபயோகித்தால் நாளடைவில் பருக்கள் காணாமல் போய்விடும். பப்பாளி பருக்களின் எனிமி!








க்ரேப் லோஷன்: திராட்சை ஜூஸை முகம், கழுத்துப் பகுதிகளில் தடவி கால் மணி நேரம் ஊறிய பிறகு கழுவவும். முகம் பளபளக்கும். க்ரேப் சில்க் போல சருமம் வழுவழுப்பாக மாறும்.

ஆரஞ்சு டானிக்: இது கொஞ்சம் ரிச்சான டானிக். 2 டேபிள் ஸ்பூன் பாலில் 1 டேபிள் ஸ்பூன் காரட் ஜூஸ் மற்றும் ஆரஞ்சு ஜூஸ் கலக்கவும். முகத்தில் திக்காகத் தடவவும். அரை மணி ஊறவும். முகத்தில் தழும்புகள், வடுக்கள் இருந்தால் ஓடிப் போய் விடும். சாஃப்ட் + ஸ்மூத் சருமத்துக்கு, சோம்பல் படாமல் ஆரஞ்சு டானிக்கைத் தடவவும். ஷைன் பண்ணுவீர்கள்!

மேலே சொல்லியுள்ள க்ரீம் வகைகளை ஏதோ ஒருநாள் தடவிக்கொண்டு பலனில்லை என சோர்வாக உட்கார்ந்து லாபமில்லை. தினமும் ஒரு மாதத்துக்கு உபயோகித்து பிறகு வட்டமேஜைக்குக் கடிதம் எழுதத்தான் போகிறீர்கள்!

– **லதா சேகர்**



* விஜய் டெண்டுல்கர்

உஷ்... கோர்ட் இயங்கிக் கொண்டிருக்கிறது

'வாழ்வதற்காக எழுதாதே. வாழ்க்கையை எழுது; என்றென்றைக்கும் ஜீவித்திருக்கும்படியான எழுத்தை எழுது.'

- என்று தம் சகபடைப்பாளிகளை நெறிப்படுத்திக்கொண்டேயிருந்த படைப்பாளி விஜய் டெண்டுல்கர், நம்மிடமிருந்து விடைபெற்று தம் எழுத்தின் மூலம் வாழத் துவங்கிவிட்டார்.

இந்திய இலக்கியத்துக்கு குறிப்பாக, மராத்திய இலக்கியத்துக்கு அவரின் மறைவு பேரிழப்பாகும்.

அவரின் நாடகங்கள்... வாழ்க்கையை விசாரணைக்குட்படுத்தியவை. அலங்காரமில்லா மன உள்ளுணர்வை வெளிப்படுத்தியவை.

எழுபது, எண்பதுகளில் இந்திய சினிமாவில் புதிய அலை ஏற்பட டெண்டுல்கரின் எழுத்து காரணமாயிருந்தது.

'விஜய் டெண்டுல்கரின் திரைக்கதை அமைப்பும், வசனங்களும் திருத்தங்கள் கோர முடியாத முழுமையான, அசலான சித்திரங்கள்' என்பார், புகழ்பெற்ற இயக்குநரான ஷ்யாம் பெனகல்.

உணர்ச்சிக் கொந்தளிப்போடு கூடிய வெகு ஜன கோஷங்களுக்கு எதிரான தம்முடைய விமர்சனக் கருத்துகளை, தயவு தாட்சண்யமின்றி எப்பொழுதும் வெளிப்படுத்தத் தயங்காதவர். ஆனால், அதே சமயம் தம் அபிப்பிராயங்களுக்கான எதிர்வினைகளையும் அவர் முழுமனதோடு ஏற்றுக்கொண்டவர்.

டெண்டுல்கரின் தியேட்டர் படைப்புகளுக்கு ஏராளமான ரசிகர்கள் இருந்தாலும், எதிர்ப்பாளர்களும் நிறையவே இருந்தனர். அவர்கள் சும்மா இருந்ததுமில்லை. அதனால்தான் எழுத்தாளர், நாடக ஆசிரியர் கிரிஷ் கர்னாட், ''அவமானத்தையும் இழிவையும் மிகச் சரியாகப் புரிந்துகொண்ட விஜய் டெண்டுல்கர் போல, வேறு யாரும் இருக்க முடியாது'' என்றார்.

''விஜய் டெண்டுல்கர் சுதந்திரமானவர். எதனோடும்



* ஷ்யாம் பெனகல்



* ஷபானா ஆஸ்மி

தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளாதவர். அவருக்கு கட்சி, முத்திரை, சார்பு கிடையவே கிடையாது. அவர் உண்மையின் மீது ஒளியைப் பாய்ச்சினார். ஆம், அது மட்டும் தான் அவரின் பணி'' என்று நெகிழ்ச்சியோடு சொன்னார் நடிகையும் சமூக சேவகியுமான ஷபானா ஆஸ்மி.

'உஷ்... கோர்ட் இயங்கிக்கொண்டிருக்கிறது', 'வல்லூறுகள்' போன்ற நாடகங்கள் மூலம் டெண்டுல்கர் எழுப்பிய அலை, இன்னும் தொடர்ந்து பரவியபடியுள்ளது. ஒருவர் மறைந்த பின்பும் எழுத்தின் மூலம் வாழ்வது மகா பாக்கியம்தான்.

- **இ.நந்தினி**

பனையில் தொங்கும் மாலை

சுழற்றிப் போட்டது
எவரோ தெரியவில்லை -
எல்லோரையும் அழைக்கிறது
என்னைச் சூடுங்களென

பலரும் நினைத்தது
ஆளைக் கொல்லும்
பனைமர முனியின்
நாடகம் இதுவென்று

ஒற்றை மாலையென்பதால்
கன்னிப் பிசாசின்
கைங்கர்யம் எனவும்
மாறியது வழக்கு

இறுதி ஊர்வலத்தினின்று
தவறி இருக்குமெனில்
அருகே இல்லை
சுடுகாடு எதுவும்

திருமணம் பிடிக்காதவள்
தூக்கி எறிந்தாளானால்
வனாந்திரத்தில் வந்துவிழ
வாய்ப்புகளில்லை

வானிருந்து வந்ததென்றால்
பனைமரத்துக்கு
வாக்கப்படமாட்டார்கள்
தேவதைகள்

தெய்வமானதாய்
தகவல் இல்லை
வந்தது எப்படி
விளங்கவில்லை -

காற்றின் முகத்தில்
ஊஞ்சலாடி இருக்கிறது
பனைமரத்தில்
தொங்கும் மாலை

வே.இராமசாமி



* தெனாலிராமன் நாடகக் காட்சி...

ஹாரிபாட்டர், பவர் ரேஞ்சர்ஸ் போன்ற கதைகளின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறது இன்றைய இளைய தலைமுறை. அவர்களுக்கெல்லாம் தெனாலிராமனைத் தெரியுமா? ஆனால், பத்து - இருபது வருடங்களுக்கு முன்னால்கூட அவனைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. அவனை மையமாகக் கொண்ட நகைச்சுவைக் கதைகள், நம் கற்பனையைத் தூண்டிவிடும்; யோசிக்க வைக்கும்.

கேட்டும், படித்தும் ரசித்த அந்தக் கதைகளை தற்போது நாடகமாக்கி, தெனாலிராமனை நம் கண் முன்னே உலவ விட்டிருக்கிறது கூத்துப்பட்டறை.

ராமன் சரி. அது என்ன தெனாலி? ராமனின் அம்மா பிறந்த ஊர். அதைத் தன் பெயரின் முன் போட்டுக்கொள்கிறான் ராமன். வறுமையான குடும்பத்தில் பிறந்த ராமன், தன் நகைச்சுவைத் திறமையால் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் அன்பைப் பெற்று உயரத்துக்கு வருகிறான். அவன் வெறும் விதூஷகன் மட்டும் இல்லை. விஜயநகர அரசவையில் இருந்த எட்டுப் புலவர்களில் ஒருவன். தெலுங்கில் இருக்கும் பஞ்ச காவியங்களில் ஒன்றான 'பாண்டு ரங்க மஹாத்மிய'த்தை எழுதியவன்.

மாஸ்டர்



இவை எல்லாவற்றையும் விட ராமனுக்கு சமூக அக்கறை அதிகம். வெகு நாட்களாக மழை பெய்யாத ஊருக்கு ஒரு சாமியார் வருகிறார். ஊரில் இருப்பவர்கள் எல்லோரும், 'பாரு! இந்தச் சாமியார் வந்ததும் மழை வந்துடுச்சு'' என்கிறார்கள். ஆனால், தெனாலிராமனோ, ''மழை வர்ற நேரத்துல சாமியார் வந்திருக்கிறார்'' என்கிறான்.

உண்மையில் நம் மரபில் இல்லாத விஷயங்களே இல்லை. அவற்றை முழுமையாக நம் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தினாலே போதும். அவர்களின் கற்பனையும் திறமையும் விரியும்.

கூத்துப்பட்டறை, இந்த நாடகத்தை ஜூன் ஐந்தாம் தேதியிலிருந்து பதினைந்தாம் தேதிவரை மேடையேற்ற இருக்கிறது. மிக எளிமையான அரங்கப் பொருள்கள்; ஆனால், நம்மை அந்தக் காலத்துக்கே கொண்டு போய்விடுகின்றன. மேடையின் வலது புறத்தில் இரண்டு பேர் உட்கார்ந்து ஒவ்வொரு காட்சிக்கும், டோலக், மிருதங்கம், கஞ்சிரா... என்று வாசிக்கிறார்கள். அந்த இசை மிகப் பொருத்தமாக அமைந்திருப்பதுதான் ஆச்சரியம்.

விஜய நகர மன்னர் கிருஷ்ண தேவ ராயர் எப்படி இருப்பார்? கொஞ்சமாவது பந்தாவாக இருப்பார் இல்லையா? இந்த நாடகத்தில் வரும் கிருஷ்ண தேவ ராயர், சதா குச்சி மிட்டாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

தெனாலிராமன்

தெனாலிராமனாக வருபவர் ஒவ்வொரு காட்சியிலும் ஒரு கிலுகிலுப்பையைப் பிடித்து ஆட்டிக்கொண்டிருக்கிறார். இப்படிப் புதுமை கலந்த படைப்பாக இருக்கிறது நாடகம்.



தெனாலிராமனாக நடித்திருக்கும் சாந்தகுமாரிலிருந்து எல்லா நடிகர்களும் அந்தந்த பாத்திரமாகவே மாறி, நாடகத்தைத் தொய்வில்லாமல் கொண்டு செல்ல உதவியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம். நம்மை உட்கார்ந்த இடத்திலேயே கட்டிப் போட்டுவிடுகிறார் இயக்குநர் சோமசுந்தரம்! நாடகம், நம்மைச் சிரிக்க வைக்கிறது; சிந்திக்க வைக்கிறது.

இந்த நாடகத்தை எழுதியிருப்பவர் ந.முத்துசாமி. அவர் இப்படிச் சொல்கிறார்: ''கூத்துப்பட்டறை நாடகங்கள் அனைத்தும் தமிழ் நாடகத்தைப் புதிய கலாசாரத்துக்கு எடுத்துச் செல்கிற முயற்சிகள்'' நாடகம் முடிந்து வெளியே வந்ததும் நமக்கும் அப்படித்தான் தோன்றுகிறது!

– கே. பாலசுப்ரமணியன்



★ சாந்தகுமார் - ப்ரியா

பள்ளிப் பருவத்தில் பழகிப் பிரிந்த பெண் பூ! சுகந்த நினைவுகளோடு பனி வியர்வை அரும்பிய அவள் முகமும் நாணம் மறைக்க முயலும் செங்குறுஞ்சிரிப்பும் ஞாபக அடுக்குகளிலிருந்து எழுந்து வந்து கண் முன் சித்திரம் படைக்கும் - கண் பார்வை இருந்தால்! ஆனால், பார்வை பாக்கியம் இல்லாத சாந்தகுமார், ப்ரியாவின் முகத்துக்குத் தன் மனத் திரையில் வடிவம் தந்து விரும்பியிருக்கிறார். ப்ரியாவும் என்றும் பிரியா துணையாக அவர் வாழ்வில் பின்னிக் கலந்துவிட்டார்! இதோ, வித்தியாசமான அவர்களது காதல் கதை.

''சேலம், செவ்வாய்ப்பேட்டை அரசினர் பார்வையற்றோர் பள்ளியில் எட்டாம் வகுப்புவரை படித்தேன். ஒன்பது முதல் மேனிலைப்பள்ளி படிப்பு சென்னை, பூந்தமல்லியில். சேலம், அரசு இசைக் கல்லூரியில் சங்கீத வித்வான். மூன்று வருடப் படிப்பு. வாய்ப்பாட்டு மற்றும் வயலின். அப்புறம், சங்கீத ஆசிரியர் டிப்ளோமா. 2002ல் சங்கீத ஆசிரியரா வெளியே வந்தேன். ஆர்க்கெஸ்ட்ராவுல பாடறது, பிள்ளைகளுக்கு சங்கீதம் கத்துத் தர்றதுன்னு வாழ்க்கை ஓடிக்கிட்டே இருந்துச்சு. அந்தச் சமயத்துல எனக்கு உடம்பு மோசமாப் போய்டுச்சு!'' என நினைவுகளோடு பின்னோக்கிப் போகிறார் சாந்தகுமார்.

மனக்கண்ணில் மலர்ந்த காதல்!

''ஸ்கேன் பண்ணிப் பார்த்தப்ப சாந்தகுமாரோட நுரையீரல்ல தண்ணி

கோத்துக்கிட்டது தெரிஞ்சது. கிழ் மேட்டூர் ஜி.ஹெச். டாக்டர் சிவக்குமார், இவன் மேல தனி அக்கறை எடுத்துக்கிட்டு வீட்டுக்கே வந்து சிகிச்சை செஞ்சார். அவரு மட்டும் உதவி பண்ணலன்னா, எம் மவனுக்கு டி.பி.வந்திருக்கும். கொஞ்ச நாள் வீட்லயே விரக்தியா படுத்துக்கிடந் தான். அந்த நேரத்துல அவனோட பழைய நண்பன் சௌந்ரி வந்து பார்த்தான். அந்தச் சந்திப்புதான் சாந்தகுமார் வாழ்க்கையில் திருப்பமா அமைஞ்சது!'' என்கிறார் இவரின் அம்மா பானுமதி.

''சேலத்துல நம்பகூட படிச்சுதே ப்ரியா... ஞாபகமிருக்கா?ன்னு கேட்டான் சௌந்ரி. வேணும்னா அவங்களோட செல் நம்பர் தர்றேன். பேசிப் பாருன்னான். கட்டில்ல படுத்திருந்த எனக்கு ஏதோ ஆகா சத்துல மிதக்கற மாதிரி தோணிச்சு. நான் எட்டாவது படிச்சப்ப, ஆறாவது படிச்சது அந்தப் பொண்ணு. ஒரு வருஷம்தான். ஒன்பதாம் வகுப்புக்கு நான் சென்னை போய்ட்டேன். பல வருஷங்கள் ஓடிப் போச்சு. இப்ப அதெல்லாம் நெனைப்பு இருக்குமா அந்தப் பொண்ணுக்குனு, என் மனசுக்குள்ளார பட்டாம்பூச்சிகள் பறந்துக் கிட்டே இருந்துச்சு!'' என்று படபடப்பும் வெட்கமும் கலந்து பேசுகிறார் சாந்தகுமார்.

''முதல்ல என்கிட்டே கொஞ்சம் பட படப்போடதான் பேசினார். அப்ப அதே படபடப்பு என்கிட்டேயும் இருந்துச்சு. ஒரு ரெண்டு நிமிடம் என்னோட ஞாபக அடுக்குகள்ல துழாவினேன். அட... இது நம்ப சாந்தகுமார்!

எனக்குச் சொந்த ஊரு ஈரோடு பக்கத் துல சூரம்பட்டி. ஈரோடு வெள்ளாளர் கல்லூரியில் பி.ஏ. இங்கிலீஷ், எம்.ஏ. இங்கிலீஷ் தேர்ச்சி பெற்றேன். பிரெய்ல் முறையில் குறிப்புகள் எழுதிக்குவேன்; லெக் சரர் ஸ்பீச்சை கேசட்ல ரெக்கார்டு பண்ணிக்குவேன். எம்.ஏ. இங்கிலீஷ் முடிச்சதும், இங்கிலீஷ் டீச்சரா கணும்னு ஆசைப்பட் டேன். சென்னை லேடி வெலிங்டன் கல்வி யியல் கல்லூரியில் தேர்ச்சி பெற்றேன். இப்போ வேலை தேடிக்கிட்டு இருக்கேன்னு சொன்னேன். ரொம்ப சந்தோஷமாய்ட்டார்!'' என்கிறார் ப்ரியா.



● பானுமதி

''எங்கள் இருதரப்பு வீட்டிலும் பேச்சு வார்த்தை ஆனது. 25.4.2008 அன்று சேலம் ரிஜிஸ்டர் ஆஃபீஸில் எங்கள் திருமணத் தைச் சட்டப்படி பதிவு செய்துகொண் டோம். இப்படியொரு வாழ்க்கை அமையு மென்று, நாங்கள் இருவருமே நினைக் கவேயில்லை. தற்சமயம் ப்ரியாவுக்கு போக்குவரத்துச் சிரமம் இல்லாதிருக்க, மேட்டூர் அரசு மேனிலைப் பள்ளிக்கு பணி மாறுதல் கேட்டிருக்கிறோம். கிடைத்துவிடுமென நம்பு கிறோம். நான் சங்கீத ஆசிரியர். அவள் ஆங்கில ஆசிரியை. எங்கள் இல்லற வாழ்வில், என் றைக்கும் நாங் கள் காதலர் களே!'' எனக் குறிப்பிடுகிறார் சாந்தகுமார்.

செய்தியும் சித்திரங்களும்:

ஸ்ரீரங்கம் திருநாவு

மணமேடை அருகே எதற்கோ சத்தமிட்டுக் கொண்டிருந்த சம்பந்தி ரெங்கநாதனை, சுந்தரமூர்த்தி சற்றுத் திகிலாகப் பார்த்தார். முகூர்த்தத்துக்கு ஒரு மணி நேரமே உள்ள கடைசி நேரத்தில், அதைக் கொண்டு வா... இதை வாங்கி வா என்று செலவு வைத்து விடுவாரோ என்பதுதான் திகிலுக்குக் காரணம்.

வசந்திக்கு நல்ல இடமாக அமையாமல் தட்டிக்கொண்டே போய்... கிட்டத்தட்ட மூன்று வருடங்கள். மாப்பிள்ளை சரியாக இருந்தால், அதிகம் சீர் வரிசை கேட்டார்கள். குறைவாகக் கேட்குமிடத்தில் மாப்பிள்ளையின் தகுதி மற்றும் அழகு இடித்தது. எல்லாம் பொருந்தி வந்தால்... உங்க பெரிய பொண்ணு...? என்கிற கேள்வி.

அந்தக் கேள்வி மட்டும் சுந்தரமூர்த்தியை முள்ளாக உறுத்தும். எல்லாவற்றையும் கடந்து அமைந்ததுதான் இந்த இடம்.

• திருவாரூர் பாபு •



"மாப்பிள்ளையின் தாய்மாமன் வெளி நாட்டிலிருந்து வர வேண்டும். ஆறு மாதங்கள் திருமணத்தைத் தள்ளி வைத்துக் கொள்ளலாம்'' என்றார் ரெங்கநாதன். நீண்ட தேடுதலுக்குப் பிறகு அமைந்த இடம் என்பதால், சரி என்றார் சுந்தரமூர்த்தி. தள்ளிப்போகும் ஒவ்வொரு நாளும், மகளின் வயது ஏறுகிறதே என்கிற பொறுப்பான அப்பாவின் கவலை, அவரை அரித்துக் கொண்டுதான் இருந்தது. ஆரம்பத்தில் எல்லாமே நல்லபடியாகத்தான் நடந்தன. பிறகுதான் திகில்.

நாற்பது பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு பைக்கும், சீர் வரிசைகளும்தான் முதலில் பேசியது. திருமண நாள் நெருக்கத்தில் 'திருமணத்தை நீங்

களே செய்துவிடுங்கள்' என்றார்கள். திருமணச் செலவுக்காக ஒரு லட்சம் தந்து விட வேண்டுமென்பது முன்பு பேசியது. நீண்ட யோசனைக்குப் பிறகு, சுந்தரமூர்த்தி சரி என்றார். பட்ஜெட்டில் முழுதாக ஒரு லட்சம் நிச்சயம் அதிக

சுந்தரமூர்த்திக்கு அவள் பேச்சில் இருக்கும் நியாயம் புரியும். சட்டெனக் கோபம் வரும். ஆனால், வெளியே காட்டமாட்டார். இந்த நேரத்தில் தானும் கோபப்பட்டால், காரியம் நடக்காது என்பது அவருக்குப் புரிந்தது. அதே



வல்லமை தாராயோ?

மாகும் என்பதை உணர்ந்தார்.

இதோடு முடிந்து விடும். இனிமேல் மாப்பிள்ளை வீட்டுப் பக்கமிருந்து, எந்த டார்ச்சரும் இருக்காது என்கிற நம்பிக்கை, அடுத்த வாரத்திலேயே பொய்த்தது.

''மாப்பிள்ளைக்கு ஐந்து பவுன் போடுவதாகச் சொன்னீங்க... அது பத்தாது. எட்டுப் பவுனாவது போட்டால்தான், 'பார்வை'யாக இருக்கும்'' என்றார்கள். அவர்கள் ஒவ்வொரு முறை இப்படி பட்ஜெட்டை ஏற்றும்போது கோதை அழுவாள்.

''என்னங்க இது... பி.எஃப்.பணம், என்கிட்ட இருக்கற நகை, ரெண்டு லட்சம் கடனும் வாங்கி, கல்யாணத்தை முடிச்சிடலாம்னு நினைச்சிருந்தா, இப்ப வீட்டையும் வைக்கணும் போலருக்கே...''

நேரத்தில் வசந்தி காயப்பட்டு விடுவாள் என்று எண்ணினார். ஏதோ தான் ராசியில்லாதவள் என்கிற நினைப்பு அவளுக்கு.

ஒவ்வொரு இடம் தட்டிப்போகும் போதும் இரவு நீண்ட நேரம் அவள் அழுவதை, அவர் கவனித்திருக்கிறார். அதனால் எப்பாடுபட்டாவது, இந்தக் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார்.

திருமணத்துக்கு ஒரு மாதம் இருந்த போது, மாப்பிள்ளை வீட்டிலிருந்து அடுத்த நிகில் குண்டு வந்து விழுந்தது.

'திருமணத்துக்குப் பேசியிருந்த மண்டபம் மிகவும் சுமாராக இருக்கிறது. மாப்பிள்ளைக்கு அந்த மண்டபம் பிடிக்கவில்லை' என்றார்கள். பிறகு ஒடியாடி அலைந்து, வேறு மண்டபம் பிடித்தார். அந்த வகையில் பட்ஜெட்டில் ஐந்தாயிரம் எகிறியது.

அவர்கள் சொந்தத்துக்குப் பத்திரிகை கொடுக்க, சுந்தரமூர்த்தி தவது செலவில் கார் ஏற்பாடு செய்ய வேண்டும்

என்றார்கள்... செய்தார்.

பத்திரிகை டிசைன் பார்ப்பதற்கு சென்னை செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார்கள்; செய்தார். மாப்பிள்ளையின் நண்பர்கள் திருமணத்துக்கு முதல்நாள் தங்குவதற்கு, பெரிய லாட்ஜில் ரூம் போட வேண்டும் என்றார்கள்; போட்டார்.

திருமணம் முடிந்து விருந்துக்கு அவர் ஏற்பாடு செய்திருந்த ஐயிட்டங்களோடு, எட்டு ஐயிட்டங்களைச் சேர்த்தார்கள்.

சுந்தரமூர்த்தி யோசித்தபோது, 'அப்ப தான் விருந்து சிறப்பா இருக்கும். எங்களுக்கும் பெருமை' என்றார்கள்.

''அப்பா... எனக்குப் பயமா இருக்குப்பா. இப்பவே இவ்வளவு டார்ச்சர் பண்றாங்க... கல்யாணத்துக்குப் பின்னாடி என்ன செய்வாங்களோ...?''

வசந்தி கண்கலங்கினாள்.

''நல்ல இடம்மா... உன்னை ரொம்ப நல்லா வைச்சுப்பாங்க... இந்தக் காலத்துல இப்படித்தான்...'' மகளைச் சமாதானம் செய்தார்.

எல்லாம் கேட்டவர்கள், ஒரேயொரு கேள்வி மட்டும் கேட்கவில்லை.

'உங்க பெரிய பொண்ணு எங்கே?'

சுந்தரமூர்த்திக்கு அதுவே பெரிய சந்தோஷம்.

ரமேஷ் அவரை நோக்கி ஓடி வந்தான்.

''என்னப்பா...?'' சுந்தரமூர்த்தி பதட்டமாகக் கேட்டார்.

''வீடியோ ஏற்பாடு பண்ணியிருந்தோம்ல... அது மாப்பிள்ளையோட மாமாவுக்குப் பிடிக்கலையாம். ரெண்டு காமரா, ஜிம்மி ஜிப் எல்லாம் வேணுமாம்...''

''ஜிம்மி ஜிப்-ன்னா...'' - குரல் உயர்த்தினார்.

ரமேஷ் படபடப்பானான்.

''அப்பா, சத்தம் போடாதீங்க... அது ஒரு புது டெக்னிப்பா...'' என்றபடி மணப்பெண் அறை நோக்கி அவரை இழுத்துச் சென்றான்.

''பெரிய இஷ்யூவா ஆக்கிடுவாங்க போலருக்கு... எப்படியாச்சும் ஏற்பாடு பண்ணணும்ப்பா...''

சுந்தரமூர்த்திக்குத் திடுக் என்றது.

''கடைசி நேரத்துல சொன்னா, என்னடா பண்றது...? அதுக்கு எவ்வளவு செலவாகும்?'' என்றவர், திடுமென ஏதோ நினைத்தவராகத் திரும்பிப் பார்த்தார்.

கழுத்தில் மாலையோடு, மணவறை செல்லத் தயாராய் வசந்தி அமர்ந்திருந்தாள். கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது.

''அது ஆகும்ப்பா... முப்பதாயிரம்... நீங்க இங்கேயே இருங்கப்பா. நான் பார்த்துக்கறேன்'' ரமேஷ் அங்கிருந்து வேகமாக நகர்ந்தான்.

சுந்தரமூர்த்தி நகர்ந்து சென்று மகளின் தலையை ஆதரவாகக் கோதினார். பட்டென அவள், அவர் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

''எனக்குப் பயமா இருக்குப்பா...''

''ச்சீ... கழுத... என்ன பயம்...?



''இனிமேல் லீவு எடுக்கணும்ன்னா தெளிவாகக் காரணம் இருக்கணும்னு சொன்னது உண்மைதான். அதுக்காக, இப்படி ஒன்பது பக்கத்திலா லீவு லெட்டர் எழுதிக் கொண்டு வருவது...?''

- எம். அசோக்ராஜா

''ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் எப்போ வரும்?''

''ஒரு மணி நேரம் ஆகும்!''

''நெல்லை எக்ஸ்பிரஸ்...?''

''அரை மணி நேரத்துல வந்துடும்!''

''பாண்டியன் எக்ஸ்பிரஸ் வர எவ்வளவு நேரம் இருக்கு?''

''கால் மணி நேரம்... ஏன்ய்யா கழுத்தறுக்கிற, நீ எந்த ஊருக்குப் போகணும்?''

''அர்ஜென்டா தண்டவாளத்தைத் தாண்டி அந்தப் பக்கம் போகணும்!''

- ச.ஆதிகேசவன்



இதெல்லாம் கல்யாணத்துல சகஜம்'' என்றவாறு மகளை அணைத்துக்கொண்டார்.

சில நிமிடங்களில் ரமேஷ் அறைக்குள் வேகமாக வந்தான்.

அவரை உற்றுப் பார்த்தான்.

அவருக்குப் பதட்டமானது.

''என்னடா?'' படபடப்பாகக் கேட்டார்.

''அக்கா வந்திருக்குப்பா...''

ரமேஷ் சொல்லிக்கொண்டிருக்கும் போதே... அவரது மூத்த பெண் மாலதியும் அவளது கணவனும் தயங்கித் தயங்கி அறைக்குள் வந்தார்கள்.

சுந்தரமூர்த்திக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''அப்பா...'' என்றபடி மாலதி அவரை நோக்கி வந்தாள்.

''மாமா...'' என்றபடி அவள் கணவன், அவர் கால் நோக்கிக் குனிந்தான்.

மூன்று வருடங்களுக்கு முன், தனக்குப் பிடித்தவனைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்து, மாப்பிள்ளை வேறு ஜாதி என்று, சுந்தரமூர்த்தி பிடிவாதமாக மறுத்ததால், வீட்டை விட்டு ஓடிப் போனவள்.

மாலதியை சுந்தரமூர்த்தி உற்றுப் பார்த்தார்.

வரதட்சணை எதுமில்லாமல் வேறு ஜாதியைச் சேர்ந்த கணவனோடு, அவளே அமைத்துக்கொண்ட வாழ்க்கையில்... மகிழ்ச்சியாய்... பூரிப்பாய்... நிறைவாய்... சதைபோட்டு மேடிட்டிருந்த வயிற்றோடு.

ஜாதகம்... பெண் வீடு பார்த்தல்... பைக்... விருந்து... கை நனைத்தல்... நிச்சய தார்த்தம்... சீர் செனத்தி... ஜிம்மி ஜிப்... பதினாறு வகை ஐயிட்டங்கள் நிரம்பிய சாப்பாடு...

வசந்தியைப் பார்த்தார். மணப்பெண் முகத்தில் கலக்கம். கண்ணீரில் தோய்ந்திருந்த கண்கள்; ஒருவித பயத்தால் பொலிவிழந்திருந்த முகம்.

''அப்பா... அவங்க கேட்ட வீடியோ ஏற்பாடு பண்ணியாச்சு...''

சுந்தரமூர்த்தி நினைவு கலைந்து ரமேஷைப் பார்த்தார்.

''மாமாதான் ஏற்பாடு பண்ணி வாங்க'' மெல்லிய குரலில் சொன்னான்.

சுந்தரமூர்த்தி மூத்த மாப்பிள்ளையை நன்றி பொங்க பார்த்தார்...

''பொண்ணை அழைச்சிட்டு வாங்கோ...''

மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் இருவர் வேகமாக அறைக்குள் நுழைந்தார்கள்.

அதில் ஒருவர் மாலதியைப் பார்த்துத் தயங்கி நின்றார். பிறகு மெதுவாக சுந்தரமூர்த்தியிடம், ''உங்க பெரிய பொண்ணுதானே?'' என்றார்.

வழக்கமாக மூத்த மகளைப் பற்றி யாராவது பேசினால், அவரை முள்ளாக உறுத்தும். இப்போது இல்லை. ●

சோடச உபசாரங்கள்

புராதனச் சிறப்பு வாய்ந்த கோயில்களில், தினந்தோறும் ஆறுகால பூஜைகள் நடைபெற்று வந்தன. இன்று அவை நாலாக, மூன்றாக, இரண்டாகச் சுருங்கி, சில கோயில்களில், ஒரு கால பூஜை நடைபெறுவதுகூட அபூர்வமாகி வருகிறது! ஒவ்வொரு கால பூஜையின்போதும் சோடச உபசாரங்களுடன் தீபாராதனை நடைபெறுகிறது.





மரபைப் பேணும் சில குடும்பங்களில், விசேஷக் காலங்களிலும் பண்டிகை நாட்களிலும் ஒருவகை சோடச உபசார பூஜை செய்யப்படுகிறது. நம் வீட்டுக்கு ஒரு முக்கிய பிரமுகர், பெரியவர் வருகிறார் என்றால் நாம் என்ன செய்வோம்? அவரை மரியாதையுடன் வரவேற்று, அமரவைத்து, உபசார வார்த்தைகள் பேசி, சாப்பிடுவதற்கு ஏதேனும் கொடுத்து, அவரிடம் ஆசிபெற்று வழியனுப்பி வைப்போம் அல்லவா? அதைப் போலத்தான் வீட்டில் செய்யும் சோடச உபசார பூஜையும். இஷ்ட தெய்வத்தை மனத்தில் தியானித்து, வீட்டில் உள்ள படத்திலோ விக்ரகத்திலோ எழுந்தருளுவதாகப் பாவித்து, பாவனையாகப் பாதங்கள் அலம்பவும், கை அலம்பவும், முகம் அலம்பவும், நீர் கொடுத்து, ஸ்நானம் செய்வித்து, சந்தனம், குங்குமம் இவற்றால் அலங்கரித்து, ஆடை ஆபரணங்கள் சமர்ப்பித்து, மலர்களால் அர்ச்சித்து, தூபம் தீபம் காட்டி, உணவு வகைகளையும் பழங்களையும் நிவேதனமாகப் படைத்து, தாம்பூலம் சமர்ப்பித்து, கற்பூர ஆரத்தி செய்து, பிரார்த்தனை, நமஸ்காரம் இவற்றுடன் பூஜையை முடிப்பது, வைதிக முறைப்படி வீட்டில் செய்யும் சோடச(16) உபசாரம். கோயில்களில் செய்யப்படும் சோடச உபசார பூஜை இதனினும் சற்று வேறுபட்டது.

ஆலயங்களில் எந்நேரமும் இறைவன் குடிகொண்டிருப்பதால் தியானம், ஆவாஹனம் போன்ற

உபசாரங்கள் தேவை இல்லை. இவை கும்பாபிஷேகத்தின் போதே நடைபெற்றுவிடும். பாத்யம் (பாதம் அலம்புதல்), அர்க்கியம் (கை அலம்புதல்),






ஆசமனீயம் (வாய் அலம்புதல்) போன்றவையும் இதில் வராது. அபிஷேகம், அலங்காரம் நைவேத்யம் ஆகியவை முடிந்த பிறகு, செய்யும் உபசார பூஜையே ஆகம முறைப்படி சோடச உபசார பூஜை. சன்னிதியில் திரையிட்டு நைவேத்யம் முடிந்ததும், திரை விலக்கி விதவிதமான அமைப்புள்ள தீபங்களை ஏற்றி இறைவன் திருமுன்பு சுழற்றிச் சுழற்றி தீபாராதனை செய்வார்கள். பின்னர், குடை, கொடி, விசிறி, கண்ணாடி, ஆலவட்டம், சூரிய வட்டம், வெண் சாமரம்... ஆகியவற்றை ஒவ்வொன்றாக எடுத்து, இறைவன் திருமுன் காட்டுவார்கள். இதன் பின்னணியில் உள்ள தத்துவம்தான் என்ன?

▪ த.கி.நீலகண்டன் ▪



அகில உலகத்துக்கும் சக்ரவர்த்தியாக விளங்கும் இறைவன் திருமுன், அவனது அருளாட்சியில் அவன் கீழ்ப்படிந்து இப்பூவுலகைக் காத்துவரும் எட்டு திக்பாலர்களும் சூரியன், சந்திரன், அஸ்வினி தேவர்கள் ஆகியோரும்... தமக்குரிய பொருள் ஒன்றை, இறைவன் திருமுன்பு காணிக்கையாகச் செலுத்துவதாக அமைந்ததுதான் சோடச உபசார பூஜை. இந்திரன் கொடியையும், வருணன் பூர்ண கும்பத்தையும் (நிறைகுடம்) வாயு விசிறியையும், ஈசானன் தாம்பூலத்தையும், நிருதி கண்ணாடியையும் யமன் ஆலவட்டத்தையும், குபேரன் வெண்





சாமரங்களையும் சமர்ப்பிக்கிறார்களாம். சூரியன் சூர்யவட்டத்தையும் (கருட்டி என்றும் இதற்குப் பெயர்) சந்திரன் குடையையும், அக்கினி தூபக் கலசம், தீபம் ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறார்களாம். தீபங்களிலும் பல வகைகள் உண்டு. கீழ்ப்பகுதி அகன்றும்





மேலே வரவரக் குறுகியும் கோபுரம் போல் அமைந்த அடுக்கு தீபம் (அலங்கார தீபம், புஷ்பரத தீபம் என்றும் இதற்குப் பெயர்), நட்சத்திர தீபம், பூர்ண கும்ப தீபம், பஞ்ச பிரம்ம ஆரத்தி ஆகியவை இறைவனது சன்னிதியை ஜோதிமயமாக ஆக்கிவிடும். இவை தவிர, விசேஷ நாட்களிலும் உற்சவ தினங்களிலும், நாகம், யானை, சிங்கம், குதிரை, அன்னம், மயில், சேவல், புருஷ மிருகம் ஆகியவற்றின் உருவங்களுடன் கூடிய தீபவகைகளும் ஆரத்தியின்போது காணலாம்.

திருவாரூரில் தியாகராஜப் பெருமான் சன்னிதியில் நாள்தோறும் மாலைக் காலத்தில், சாயரட்சை பூஜையின்போது, நடைபெறும் சோடச உபசார தீபாராதனை காணவேண்டிய ஒன்று. திருவந்திக் காப்பு என்று இந்த நிகழ்ச்சிக்குப் பெயர். அவசரம் இல்லாமல், நிதானமாக, சிரத்தையாக ஒவ்வொரு உபசாரமும் நடைபெறும். அதற்குரிய மந்திரங்கள் அனைவருக்கும் கேட்கும் வண்ணம் ஒலிபெருக்கியில் ஒலிக்கும். திருவாரூருக்கே உரியதான பாரி நாயனம் குடமுழுவு, மேள - தாளங்களுடன் மிகக் கோலாகலமாக இது நடைபெறும். ஆர அமர, உட்கார்ந்து இதைக் கண்டு ரசிக்கலாம். 'செவ்வந்தித் தோடழகர், திருவந்தி காப்பழகர்' என்றே புகழ்பெற்றவர் தியாகராஜர். மகாராஜா அல்லவா! அவர் திருமுன் கோலாகலத்துக்குக் கேட்கவா வேண்டும்! சன்னிதியில் உட்கார்ந்து, தரிசனம் செய்யும் பக்த ஜனங்கள் மறைக்கிறார்கள் என்று, மரியாதையுடன் நந்தியெம்பெருமான் நின்றுகொண்டல்லவா இந்தக் காட்சியை நாள்தோறும் கண்டு மகிழ்கிறார்! ஒருநடை திருவாரூருக்குப் போய், இந்த வைபவத்தைப் பார்த்துவிடுங்கள்!



(நன்றி. பூஜை.ச.அருணவசந்தன்)

ஒரு பக்கத் தொடர்

புள்ளிகள்... கோலங்கள்...

பெருதலம் சுகுமாரன்



''மிஸ்டர் விஷ்வா, வாட் டு யூ மீன்..? கொலைகாரன் சீரியல்ல இருக்கானா... என்ன?''

''இல்லைதான். ஆனால், 'க்ளூ' கிடைக்கும்னு எதிர்பார்க்கறேன்...''

''என்ன மிஸ்டர் விஷ்வா, சீரியல்ல வர்ற சம்பவங்களைப் பார்த்துட்டு, ஒருத்தன் வந்து கொன்னுருப்பான்னு நினைக்கறீங்களா?''

''பொன்ராஜ் வைஃப் பார்வதி, கணவனுக்கு ஆபத்து வர்றதுபோல கனவு கண்டிருக்காங்க. அது பலிச்சிருக்கு; நடந்திருக்கு. அப்ப, டீ.வி.யில ஒருத்தரோட கற்பனைல உருவாகிற காட்சியைப் போல, நிஜத்திலும் ஏன் நடக்கக்கூடாது?''

''புதிர் போடறீங்க...''

''நானே அதை விடுவிக்கறேன்...''

- என்றார், விஷ்வா.

ஹோட்டல் அறையில், பூபதி சுரத்தில்லாமல் உட்கார்ந்திருந்தான். எதிரில் விஷ்வா.

''இதுவரை டெலிகாஸ்ட்டான எபிசோட்ஸையும், டெலிகாஸ்ட் பண்ணத் தயார் நிலையில் இருக்கிற எபிசோட்ஸையும் பார்த்தேன். புள்ளிகள், கோலங்களைப் பார்த்தேன்; படிச்சேன். ரொம்ப இம்ப்ரஸிவாய் இருந்தது. பாராட்டுகள்...''

''....'' வெறுமனே தலையசைத்தான், பூபதி.

''ஒரு கேள்வி... இந்த சீரியலின் அடிப்படைக் கரு அல்லது கதை என்ன? இந்தத் தொடர் மூலம் சொஸைட்டிக்கு என்ன சொல்ல விரும்பறீங்க...?''

''ஒரு பொண்ணு நினைச்சா எவ்வளவு சோதனைகள் வந்தாலும் கடந்து, வாழ்க்கைல சாதிக்க முடியும்னு காட்றதுதான். கதாநாயகி கவி, பாரதிகண்ட புதுமைப் பெண்...''

''இது குடும்பக் கதைதானே...?''

''ஆமாம்... ஆனால், அந்தப் பெண் சமுதாயத்தில் போராட வேண்டியிருப்பதால் சமூகக் கூறுகளும் வரும்; காதல் வரும்.''

''சரி... இதுல கதாநாயகியோட தங்கையின் சின்ன மாமனார்னு ஒரு கேரக்டர் காட்டறீங்க...''

''போஸ் கேரக்டரைச் சொல்றீங்களா...? பாஸிட்டிவ் கேரக்டர். கவிதா மீது அனுதாபம் கொண்டு, அவ்வப்போது உதவிகள் செய்யறவர்...''

''யெஸ்! அந்தக் கேரக்டருக்கு ஒரு ஆபத்து வர்றதுபோலவும், அவர் கார் டிரைவராலேயே நடக்குமோங்கறது போலயும்... ஒரு க்ரைம் லைன் ஓடுதே... கதை க்ரைமுக்குத் திரும்புமோ...?''

''சும்மா ஒரு சுவாரஸ்யத்துக்காகச் சேர்த்திருக்கேன்! மத்தபடி, இதைச் சமூகக் கதையாத்தான் கொண்டு போவேன்.''

(தொடரும்)

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: பேச்சுத் திறமையுள்ள மேஷ ராசிக்காரர்களே! தொழில்ல புதிய மாற்றம் ஏற்படப் போகுதுங்க. உடல் ஆரோக்கியம் நல்லா இருக்குமுங்க. வீடு, மனை மூலமாக ஆதாயம் கிட்டுமுங்க. பொறுப்புள்ள பதவிங்க தேடி வருமுங்க. கடன் சுமையெல்லாம் தீருமுங்க. நினைத்த காரியம் நடக்குமுங்க. குழந்தைகள் மூலம் சந்தோஷம் வந்து சேருமுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மை தருமுங்க!

ரிஷபம்: பேச்சுவன்மை மிக்க ரிஷப ராசிக்காரர்களே! குழந்தைகள் மேல் கொஞ்சம் கவனம் செலுத்துங்க. வியாபாரம் நல்ல நிலையில் இருக்குமுங்க. புதிய தொழில் துவங்க நல்ல காலமுங்க. வேலையில் உயர்வு உண்டுங்க! வெளிநாடு போவீங்க! புதிய பொருட்கள் வாங்கிக் குவிப்பீங்க. எதிர்பாராத நேரத்துல சுபகாரியம் நடக்குமுங்க. ராகு / கேது வழி பாடு நன்மை தருமுங்க.

மிதுனம்: பொறுமையுள்ளம் கொண்ட மிதுனராசிக்காரர்களே! பணவசதி பெருகப் போகுதுங்க. வீடு, மனை வாங்க நல்ல நேரமுங்க. வாகன யோகமும் உண்டுங்க. உத்தியோகத்துல உயர்வு ஏற்படுமுங்க! வெளியூரிலிருந்து இனிப்பான செய்தி வருமுங்க. பட்டங்களும் பதவி உயர்வுகளும் உங்களைத் தேடி வருமுங்க. பணிவோட நடந்துக்குங்க. எல்லாம் நன்மையாய் முடியுமுங்க. வாரந்தோறும் சனிஸ்வர வழிபாடு நன்மையளிக்குமுங்க.

கடகம்: போராட்ட குணம் நிறைந்த கடக ராசிக்காரர்களே! எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லதுங்க. இல்லற வாழ்க்கைல அனுசரணையோடு நடந்துக்குங்க. உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்குமுங்க. எதிர்பார்த்தபடி புதிய வேலை வாய்ப்புகள் வீடு தேடி வருமுங்க. குழந்தைகள் நலத்தில் அக்கறை காட்டுங்க. பணியிடத்தில் அனுசரித்துப் போங்க. ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மை யளிக்குமுங்க.

சிம்மம்: தெய்வ நம்பிக்கையில் சிறந்து விளங்கும் சிம்மராசிக்காரர்களே! உங்கள் வாக்கு மேன்மையடையுமுங்க. தடைப்பட்ட திருமணம் நடக்கப்போகுதுங்க. வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவைங்க. உடல் நலத் துல அக்கறை செலுத்துங்க. பதவி வரும் போது பணிவா இருங்க. வழக்கு வெற்றி அடையுமுங்க. ராகு / கேது / குரு வழிபாடு நன்மை யளிக்குமுங்க.

கன்னி: எதிரியையும் நண்பர்களாக்கும் இனிய சுபாவம் உடைய கன்னி ராசிக்காரர்களே! உங்களுக்கு மகிழ்ச்சிகரமான வாரமுங்க. வெளிநாடு போவீங்க. பொன் பொருள் சேர்க்கை "இருக்குமுங்க. புதிய தொழில் தொடங்குவீங்க. காதல் இனிக்குமுங்க. பதவிங்க தேடி வருமுங்க. கலைத் துறையினர் மகிழ்ச்சி அடையும் வகையில் தகவல்கள் வருமுங்க. சனிஸ்வர வழிபாடு மேலும் நன்மையை அதிகப்படுத்தும்.

துலாம்: செயல் வேகம் கொண்ட துலா ராசிக்காரர்களே! வெளியூர்ப் பயணம் செல்வீங்க. உத்தியோகத்துல உயர்வு ஏற்படப்போகுதுங்க. இல்லற வாழ்க்கை ஜம்முன்னு இருக்குமுங்க. வியாபாரம் வெற்றிகரமா நடக்குமுங்க. வழக்குல வெற்றி பெறுவீங்க. அயல்நாட்டு நண்பர்கள் மூலம் ஆதாயம் கிட்டுமுங்க. கைப் பொருள் மீது கவனம் தேவைங்க. ராகு / கேது / சனி வழிபாடு நன்மையைத் தருமுங்க.

விருச்சிகம்: பிறருக்கு உதவும் எண்ணம் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே! நெருங்கிய நண்பர்கள் உங்களை விட்டு

விலகப் போறாங்க. தொழில்ல ஏற்றம் இருக்கு முங்க. விட்டுக் கொடுத்துப் போவது நல்லதுங்க. வாகனத்தில் செல்லும் போது உஷாரா இருங்க. வேறு பணி தேடும் முயற்சியை சற்று தள்ளி வையுங்க. ராகு / கேது வழிபாடு நன்மையைத் தருமுங்க.

தனுசு: பழகுவதற்கு

15.6.08 முதல் 21.6.08 வரை



இனிமையான தனுசு ராசிக்காரர்களே! வீண் விரயங்கள் ஏற்படுமுங்க. பூர்வீகச் சொத்து பிரிவினை ஆகுமுங்க. எதிர் பார்த்த உத்தியோக மாற்றம் உண்டுங்க. கல்வியில் மேன்மை அடைவீங்க. மனைவி வழியில் ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் விலகிச் செல்வார்கள். ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மையளிக்குமுங்க.

மகரம்: வேகமும் விவேகமும் கொண்ட மகரராசிக்காரர்களே! மன உளைச்சல் தீருமுங்க. குடும்பப் பிரச்னைகள் இனி இருக்காதுங்க. கொடுக்கல் வாங்கல் நல்ல நிலையில் இருக்குமுங்க. எதிர்பார்த்த இடத்தில் வேலை மாற்றம் ஏற்படுமுங்க. வீடு / மனை வாங்க ஏற்ற நேரம் இதுங்க. வியாபாரத்துல எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டுங்க. ராகு / கேது / குரு / சனி வழிபாடு நன்மையைத் தரும்.


கும்பம்: தளராத மனம் கொண்ட கும்ப ராசிக்காரர்களே! பணம் பல வழிகளில் வந்து பாக்கெட்டை நிரப்பும்ங்க. நீண்ட காலமாக எதிர்பார்த்த காரியம் நடைபெறும்ங்க. கல்வி வளம் மேம்படுமுங்க. வெளிநாடு செல்ல அழைப்பு வருமுங்க! புதிய தொழில் துவங்க ஏற்ற காலமுங்க. கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரு முங்க. எதிரிங்க தொல்லை இருக்காது. சனீஸ்வர வழிபாடு நன்மையளிக்குமுங்க.

மீனம்: பேச்சுவன்மை மிக்க மீன ராசிக்காரர்களே! உடல் ஆரோக்கியம் நல்ல நிலையில் இருக்குமுங்க. அயல்நாட்டு மனிதர்கள் மூலம் ஆதாயம் கிட்டுமுங்க. வீடு / மனை வாங்கும் யோகம் ஏற்படுமுங்க. குழந்தைகள் வழியில் சுபச் செலவு உண்டுங்க. புதிய வேலைவாய்ப்புங்க தேடி வருமுங்க. மகான்களின் தரிசனம் கிட்டுமுங்க. வழக்கு வெற்றி பெறுமுங்க. வாரந்தோறும் சனி / குரு வழிபாடு நன்மையளிக்குமுங்க.



மனசுக்குள் டைரி!

காஃபி ஷாப்




✱ திருச்சி ஹலோ எஃப்.எம். ஆர்.ஜேஸ்

திருச்சி மாநகராட்சியே 100 டிகிரிக்கும் அதிகமாக எகிறி 'ஹாட்'டா இருந்தாலும், திருச்சி ஹலோ எஃப்.எம்.106.4 மட்டும் செம கூல்ல்ல்...மா!

உணர்வுகளின் பக்கங்களைப் புரட்டுற 'டைரி' புரோகிராமை வழங்கும் சகாவைச் சுத்தி, அனைத்து ஆர்.ஜே.க்களும் அணி அணியாய் (சும்மா 'பளிச்'னு) நிக்கறாங்க. ஏன்னு கேட்டா... இன்னைக்கு (ஜுன் 12) உலக டைரி தினம்னு சொன்னாங்க - அதுக் கப்புறம் நடந்த ஆர்.ஜே.க் களின் அரட்டைக் கச்சேரியை அப்படியே இங்கே தர்றோம்...





''சகா...!
காலேஜ்ல படிக்கறப்போ
எனக்குப் பிடிச்ச ஒரு பொண்ணைப் பத்தி வர்ணிச்சு நச்... நச்..னு டைரியில எழுதி வைச்சிருந்தேன். அதை எங்க அண்ணன் பார்த்துட்டு மேட்டர அப்படியே அப்பாகிட்ட டிரான்ஸ்ஃபர் பண்ணினான். தெலுங்குப் பட வில்லன் ரேஞ்சில் அப்பாகிட்ட இருந்து மிரட்டல்...'' என்று ***'நண்பனே' விஷ்ணு*** பழைய பக்கங்களைப் புரட்டினார்.


''இதுக்குத்தான்ப்பா உண்மையையெல்லாம் டைரியிலே எழுதக் கூடாதுங்கறது.. மத்தவங்க டைரியை எடுத்துப் படிச்சோமா... சிரிச்சோமான்னு இருக்கணும்'' என ***'அவசரக்கோழி' அருணா*** அருள் வாக்கு சொன்னதும், அவருக்கு 'டைரி திருடி'ன்னு, ***'ப்ரியசகி' 'ஐஸ்'வர்*** பட்டம் கொடுத்தார்.

'ஐஸ்' தன்னோட டைரியிலே 9-ஆம் வகுப்பு படிக்கும்போது, அவங்க வளர்த்த நாய் பத்தி எழுதி வைப்பாங்களாம்.

கெஸ்ட் டயலாக்!







அதோட பர்த் டே, குகம்பு களை (லொள்... லொள்.. பக கங்கள்) எழுதினாலும், இப் பல்லாம் எதுவுமே எழுதற தில்லப்பா'' என்று பிஃப்டி பர்சன்ட் பந்தா விட்டார். ''யேய்! உனக்கு அரியர்ஸ் எழுதறதுக்கே டைம் இல்ல. இதுல எங்க டைரி...?'' என ***'பல்லாங் குழி' ராஜா*** பட்டையைக் கிளப்பியபடி களத்தில் குதித்தார்.

''நான் எழுத ஆரம்பிச்சா நிறுத்தவே மாட்டேன்...'' என விரைந்து பேசிய ***சால மன்***, 'ஹலோ'வில் 'மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ்' புரோகிராமை வழங்குபவர். (கரெக்டாதான் புரோகிராம் கொடுத்திருக் காங்க!)

'ஐ அம் ஏ ஓப்பன் புக்' என்று ஓபனிங் குடன் வந்த ***'ஸ்பரிசம்' மாணவா***, ''டைரி யில எதையும் நான் மறைக்கறது இல்ல...'' என்று சீரியஸா பேச ஆரம்பிச்சதும், ஈவென்ட் மேனேஜர் ***ஜெகன்***, 'ஜாலியா பேசுங்கப்பா...' என கச்சேரிக்கு டர்னிங் பாயின்ட் கொடுத்தார்.

''பழைய சினிமாக்கள்ல எல்லாம் 'டைரி' முக்கியமான கேரக்டரா இருக்கும். டைரியக் கைப்பற்றுறதுக்கு வில்லன்ஸ் கூட பயங்கர ஃபைட் பண்ண வேண் டிருக்கும். இப்பல்லாம் அந்த மாதிரி இல் லேல்ல...'' என்று ***'இவள்' பாரதி*** கேட்டதும், ''இது இருக்கட்டும் பாரதி... உங்க டைரி மேட்டரை இன்னும் ஓப்பன் பண்ணவே இல்லையே'' என்று பார திக்கு 'செக்' வைத்தார், புதுசா 'ஹலோ'வுக்கு வந் திருக்கிற ***'ஆர்.ஜே' மாயா***. ''டைரியில குட் டிக் குட்டிக் கவிதையா எழுதிக் குவிக்கறதுதான் என்னோட பாலிஸி'' என பாரதி பேசி முடிப்பதற்குள், இன்ட்ரஸ்டிங் ஏரியாவுக்குள் இழுத்தார் ***ராஜா***. ''லவ்ஸ்ல டைரி பிரசன்டேஷன்லாம் கொடுப்பாங்க. அப்ப ஃபர்ஸ்ட் பேஜ்ல, லிப்ஸ் முத்திரை யோடு சும்மா 'கும்'னு இருக்கும்'' என்றார்.

''இந்த மாதிரி பண்ணும் போது, பல் விளக்க வேண் டியது ரொம்ப முக்கியம். இல்லைன்னா, முதல் பக்கத் துல வர்ற நறுமணத்துல லவ்ஸ் முறிஞ்சு போறதுக்கு வாய்ப்பிருக்கு'' என ***'டைரி' சகா*** கலாய்க்க ஆரம்பித்ததும், ''அதென்ன அன்புப் பரிசா? டூத்பேஸ்ட் விளம்பரமா?'' என்று ஒரு போடு போட்டது ஐஸ்ஸ்ஸ், அருணா கூட்டணி!

''மத்தவங்களோட நிகழ்வுகள் என் னோட டைரியில பதிவு பண்ணிக்கிட்டு இருக்கேன். அதுல எனக்கு ஒரு திருப்தி'' என்று செண்டிமென்ட்டாக 'சகா' பேசி யதும், ஆர்.ஜே.க்களின் 'ஓ' ஒலம் ஓங்கி ஒலித்தது.

''இதுவரைக்கும் டைரி எழுதுறவங்ககூட அட்லீஸ்ட் 106.4 பக்கங்களாவது எழுது துங்க. ஏன்னா 106.4. - 'டைரி'க்கும் இது தான் ரைட் நம்பர்'' என, 'ஹலோ' பாணி யில் எல்லோரும் ஒரே 'வாய்ஸி'ல் சொல்ல, குட்பை சொல்லி நாம் சானல் மாறினோம்!

எம்.திரவிய முருகன்

நிறைவு

ஒருவன் பீரோ நிறைய துணி வைத்திருப்பதாலோ, கண்ட வேளைகளில் ஹோட்டலுக்குப் போய்க் கண்டதைத் தின்பதாலோ, வீட்டை ஏர்-கண்டிஷன் செய்துகொண்டு விட்டதாலோ அவனுடைய வாழ்க்கை தரமாகிவிடாது. மனம் நிறைந்திருந்தால் அதுவே வாழ்க்கைத் தர உயர்வாகும்.

மன நிறைவு வெளி வஸ்துக்களால் ஒருநாளும் கிடைக்காது. வெளி வஸ்துக்களைச் சேர்க்கச் சேர்க்க மேலும் மேலும் சௌகரியத்துக்கு ஆசைப்பட்டுக்கொண்டு புதுப்புது வஸ்துக்களைக் கண்டுபிடித்து வாங்கிக் கொண்டேதான் இருப்போம். நாம் இப்படி இருப்பதைப் பார்த்து வசதியில்லாதவர்களுக்கும் இதே ஆசை வெறியை உண்டாக்கி விடுகிறோம். இதனால் போட்டி, சண்டை எல்லாம் உண்டாகின்றன. வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக ஏக முஸ்தீபுடன் இறங்கிய பின்தான் சகலருக்கும் எப்போது பார்த்தாலும் எதையாவது வாங்கிக்கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. நமக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று சதா அரிப்பு இருக்கிறவரையில் நாம் தரித்திரர்கள்தான். இப்போது கோடீசுவரனிலிருந்து எல்லோருக்கும் இந்தக் குறை இருப்பதால், எல்லோருமே தரித்திரர்களாகத்தான் ஆகியிருக்கிறோம். பணம் இல்லாவிட்டால்தான் தரித்திரம் என்பதில்லை. பணம் அதிகமாகி விட்டதாலேயே, எல்லோருக்கும் தரித்திரர்களாகியிருக்கிறோம்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்யா சுவாமிகள்



டிஜிட்டல் ஜென்டில்மேன்

காற்றினிலே

இரா.முருகன்

வாய்ப்பாட்டு, இசைக் கருவி வாசிப்பு. ரெண்டும் கலந்த இன்னிசை அல்லது உச்சபட்ச கூச்சல். இப்படி எல்லாவற்றுக்கும் ஓஹோ என்று அந்தஸ்து ஏற்பட்டு, கிட்டத்தட்ட 125 வருடங்கள் ஆகப் போகின்றன. தாமஸ் ஆல்வா எடிசன் ரொம்ப சிம்பிளாக உருவாக்கின சமாசாரம்தான் காரணம். பெயர் கிராமஃபோன்.

யாரையாவது பாடச் சொல்ல வேண்டியது. அந்தச் சத்தத்தில் ஒரு ஜவ்வு அதிர வைக்கப்படும். அதோடு இணைத்த ஊசி, மெழுகு பரத்திய ஒரு தட்டையான பரப்பில் அதிர்வுக்குத் தக்கபடி ஊரும். வரிவரியாக ஊசி வட்டம் கீறிய மெழுகுத்தட்டு முதல் பதிவு. இந்த மாஸ்டர் ரெக்கார்டை ஓர் அரக்குத் தட்டில் ஒற்றி எடுத்தால், கச்சிதமான நகல். அதில் நகர இன்னொரு ஊசி, அதிரும் ஜவ்வு., திரும்பப் பிறந்த ஒலி. நாய்க்குடை மாதிரி தகரத்தை மேலே இணைத்தால், ஊர் முழுக்க பாட்டு கேட்கும். நம் பாட்டன், பூட்டன் வகையறா கம்பி இன்றி, கரன்ட் இன்றி கிராமஃபோனைச் சாவி கொடுத்துச் சுழற்றி, **'பண்டித மோதிலால் நேருவைப் பறி கொடுத்தோமே'** பாட்டுக் கேட்டு, 'பேஷ் பேஷ்' போட்டது இப்படியாகத்தான்.

நாளாவட்டத்தில், கிராமஃபோன் வழிவிட, டேப் ரிக்கார்டிங் வந்தது. ஒலிக்குத் தகுந்தபடி ஒலிப்பதிவு முனையில் மின்சார அலை பரவும். மெல்லிய உலோகப் பூச்சு அமைந்த ஒரு நாடா நகர, மின் அலை அதில் காந்தத் தடத்தைத் தீற்றும். நாடாவைத் திரும்ப ஓடவிட்டால், காந்தத் தடம் மின் அலை எழுப்ப, திரும்பவும் ஒலி. 1932-ஆம் வருடம் வரை லண்டன் பி.பி.சி. வானொலியில்

நிலைய வித்வான்கள் 'லைவ்' ஆகத்தான் பாடி, வாத்தியம் வாசித்து ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திக்கொண்டிருந்தார்கள். அந்த வருடம் கிறிஸ்துமஸ் தினத்தில், இந்த இம்சை முடிவுக்கு வந்தது. முதன்முதலாக வானொலியில் டேப் ரிக்கார்டர் அறிமுகம். கனமான சாஸ்திரிய சங்கீதத்தை அரைமணி நேரம் ஒலிபரப்ப, அவர்கள் உபயோகித்த ஒலிநாடாவும் கனமானதுதான்; எடை சுமார் 25 கிலோ;

வரும் கீதம்...

நீளம் மூணு கிலோ மீட்டர். விரைவிலேயே எதிரி நாடாகப் போன ஜெர்மனி சரக்கு அது.

சொல்லப்போனால், இரண்டாம் உலக மகா யுத்தம் உச்சகட்டத்தை அடைந்த 1940களில், ஜெர்மனி அதி நவீன ஸ்டீரியோ டேப் ரிக்கார்டரை உருவாக்கி விட்டது. 150 கிலோ ஹெர்ட்ஸ் அளவு ஹை ப்ரீக்வென்ஸி மின் அலையை, ஒலியோடு சேர்த்து காந்த நாடாவில் பதித்துக் கிடைத்தது, அசலுக்கு ஈடான ஒலிப்பதிவு. இப்படியான உன்னத இசையைக் கேட்டபடி, ஹிட்லர் லட்சக்கணக்கான யூதர்களை விஷவாயு முகாமுக்கு அனுப்பிக் கொன்று குவித்தான்.

யுத்தம் முடிந்தபிறகு, தோற்ற ஜெர்மானிய ராணுவத்திடமிருந்து இம்மாதிரியான ஏகப்பட்ட டேப்-ரிக்கார்டர்களும் அவற்றை உருவாக்கும் சாதனங்களும் நேச நாட்டுப் படைகளின் வசம் கிடைத்தன. இவற்றை நட்டு போல்ட் விடாமல் பிரித்துப்போட்டு ஆராய்ந்தார் ஜான் லெனன். அமெரிக்கப் படைவீரர் அவர். இந்தத் தொழில்நுட்பத்தை ஹாலிவுட்டில் விற்றுக் காசாக்க ஐடியா பிறந்தது.

இத்தனைக்கும் யுத்தத்துக்கு வெகு முன்பே, ஹாலிவுட் படம் பேச ஆரம்பித்து விட்டது. ஒலி, படச்சுருளின் ஓரமாகப் பதியப்படும். ப்ரொஜக்டரில் படம் ஓடும்போது, படத்தில் உதடு அசைவோடு பதிவான குரல் ஒத்துப் போகத் தேவையான தொழில்நுட்பம் புழக்கத்தில் இருந்தது. இந்த அனலாக்டெக்னாலஜியைவிட அற்புதமான மேக்னடிக் டேப் ஒலிப்பதிவுக்கு மாறச் சொன்னார் மல்லின். இவருக்கு வெற்றி வேறு தினுசாகக் கிடைத்தது.

சிங்கம் கர்ஜித்துத் தொடங்கி வைக்க சினிமா எடுக்கும் பிரபல எம்.ஜி.எம் ஸ்டுடியோவில் மல்லின் படியேறிய போது, நடிகரும் பாடகருமான பிங் கிராஸ்பி காதில் டேப் ரிக்கார்டர் விழுந்தது. 'நாளையிலேருந்து, நான் டேப்புக்கு மாறிட்டேன்' சந்தோஷமாக அறிவித்தார் சூப்பர் ஸ்டார். வீட்டில் பைஜாமாவோடு உட்கார்ந்து, சாவகாசமாகப் பாடி டேப்பை அனுப்ப அவர் முனைந்தபோது, ரேடியோ ஸ்டேஷன்கள் எதிர்த்தாலும் அப்புறம் ஒரு வழியாக வழிக்கு வந்தன.

ஒற்றைத்தட ரிக்கார்டிங்கிலிருந்து ரெண்டு, மூணு, நாலு டிராக் ரிக்கார்டிங்காக ஒலியை நுணுக்கமாகப் பிரித்து ஒலிப்பதிவு செய்ய, அதைத் திரும்ப ஒன்றாக இணைத்து இசைக்க, டெக்னாலஜி அறுபதுகளில் வளர்ந்தது. பிரபல பாப் பாடகர்களாக விளங்கிய பீட்டில்ஸ் பல படி முன்னால் போய், ஏகப்பட்ட ஒலித் தடங்களை ஒற்றை டிராக்கில் இணைத்துப் பதித்தார்கள். அது போல் நாலு டிராக் சேர்த்து காத்திரமாக ரெக்ஸ் ஹாரிசன் பாட, ரவிஷங்கர் சிதார் வாசிக்க இசைக்காவியமாக வெளிவந்த 'ஸார்ஜன்ட் பெப்பர்ஸ் லோன்லி ஹார்ட்ஸ் க்ளப்' கேட்டிருக்கிறீர்களா? மல்ட்டி டிராக் டிஜிட்டல் ரிக்கார்டிங்கில், இன்றைக்கு தூள் கிளப்பும் எல்லா ஆல்பத்துக்கும் ஈடு கொடுத்து, ஊடு கட்டி அடிக்கும் அது. ●





1970, பிப்ரவரி 18.

நான்கு போலீஸ்காரர்கள் ஒரு கைதியைப் பிடித்துக்கொண்டு நிற்கிறார்கள். உயர் அதிகாரி கேட்கிறார்: ''உங்களில் யார் இவனைச் சுட்டுக் கொல்லப் போகிறீர்கள்?''

மூன்று போலீஸ்காரர்கள் தயங்கித் தயங்கிக் கையைத் தூக்குகிறார்கள்.

கையைத் தூக்காமல் இருந்த போலீஸ்காரரிடம், அந்த அதிகாரி சொல்கிறார்: ''இந்த வேலையை நீதான் செய்ய வேண்டும். அல்லது நக்சலைட்டுகளுடன் நடந்த மோதலில், மேலும் ஒரு கான்ஸ்டபிள் கொல்லப்படலாம்!''

ஒரே ஒரு தோட்டா. முடிந்தது அந்தப் போராளியின் கதை. ஆனால், சுட்டுக் கொன்ற வலியை இருபத்தெட்டு ஆண்டுகளாக, தனக்குள் வைத்துக் குமுறிக் கொண்டிருந்த ஒரு கான்ஸ்டபிளின் ஒப்புதல் வாக்குமூலம்தான் **''நான் வாழ்ந்தேன் என்பதற்கான சாட்சி.''**

அந்தப் போலீஸ்காரர் ராமச்

''நான் ஏன்


சந்திரன் நாயர். ஆயுதப் படைப் பிரிவில் கேரளாவில் பணியில் இருந்தவர். கேரளாவில் போலீஸுக்குச் சங்கம் அமைக்க வேண்டும் என்று போராடியவர்களுள் இவரும் ஒருவர்.

எல்லோருடைய வாழ்க்கையிலும் சொல்வதற்கு எவ்வளவோ விஷயங்கள் உண்டு. அத்தனையும் வெளியே சொல்ல முடியுமா? ராமச்சந்திரன் நாயர் சொல்லியிருக்கிறார்.



விளைவு, வர்க்கீஸைச் சுட்டுக்கொன்ற வழக்கில் ராமச்சந்திரன் முதல் குற்றவாளி.

ஒரு போலீஸ்காரரின் சுயசரிதையில் அப்படி என்ன



முத்துராமன்

குள் பல்லாண்டு காலமாக முன் நின்ற ஒரே கேள்வி, நான் ஏன் ஒருவனைக் கொன்றேன்? என்பதுதான்.

'இது உயர் அதிகாரியின் கட்டளை. ஆகவே, நான் சுட்டுக்கொன்றேன்' என்று இவர் சொல்லவில்லை. தன்னுடைய உயர் அதிகாரி தவறு செய்கிறார் என்று தெரிகிறது. ஆனால், அதைச் சொன்னாலும் யாரும் கேட்கவில்லை. இந்த உண்மைகள், காவல் துறையோடு அமுங்கிவிடக் கூடாது என்று, தமக்குத் தெரிந்த பல நண்பர்களிடம் சொல்லியிருக்கிறார். ஆனால், விஷயம் வெளியே தெரியவில்லை.

எதற்கும் நேரம் வரவேண்டும் என்று சொல்வார்களே! அந்த நேரமும் வந்தது. 'மலையாள மனோரமா'வில் ராமச்சந்திரனின் கடிதம் பிரசுரமானது. அந்தக் கடிதம் வர்க்கிஸைக் சுட்டுக் கொன்றதைப் பற்றி தோழர் வாசுவுக்கு வாக்குமூலம் கொடுத்த கடிதம்.

மனிதர்கள் இன்னும் இருக்கிறார்கள் என்று அப்போதுதான் நம்பத் தொடங்கினார்.

இருந்துவிட முடியும்? உயர் அதிகாரிகளைப் பற்றிப் புகழ்ந்து எழுதியிருப்பார்கள். தமக்கு வேண்டிய பல அரசு அதிகாரிகளைப் பற்றி ஆஹா ஓஹோவென்று சொல்லியிருப்பார்கள். வேண்டப்பட்ட

கொன்றேன்?"

அரசியல் தலைவர்களுக்குத் தாங்கள் செய்த 'சேவை'யை நினைவு படுத்துவதாக எழுதுவார்கள்.

இவை எதுவுமே இந்தப் புத்தகத்தில் இல்லை. இது ராமச்சந்திரன் என்பவரின் வாழ்க்கை. இரட்டை வாழ்க்கை. ஒன்று போலீஸ் வாழ்க்கை. போலீஸ் என்ற அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்ட வாழ்க்கை. போலீஸாக இருந்துகொண்டு, தாம் பொதுமக்களுக்குச் சேவை செய்த வாழ்க்கை. இரண்டும் கலந்த ஒரு மனிதனுக்

ராமச்சந்திரன் நாயர் மேல் சி.பி.ஐ. வழக்குப் போட்டது.

ராமச்சந்திரன் கவலைப்படவில்லை. தன்னைச் சுடச் சொன்ன அதிகாரிகளுடன், தாம் ஒரு நாளாவது சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று அவர் காத்திருந்தார். ஆசை நிறைவேறவில்லை. வழக்கின் முதல் குற்றவாளி இயற்கை மரணமடைந்தார்.

ஆம், ராமச்சந்திரன் இப்போது இல்லை.

■ ராமச்சந்திரன் நாயர்



– போலீஸ் வாக்குமூலம்

இயக்கம்!

'பெரிய டைரக்டர் ராஜாராம். அவரை நேரில் கூடப் பார்த்ததில்லை. என்னை ஏன், எல்லா படத்திலிருந்தும், நீக்கச் சொல்லிக் கெஞ்சுகிறார்?'

புரியாத புதிராயிருந்தது மைதிலிக்கு. நேற்று ஒப்புக்கொண்ட படம், அட்வான்ஸ் வரை வந்த சான்ஸ் - இன்று கேன்சல் என்றால்...

காரணம் - டைரக்டர் ராஜாராம். அவரை நேரில் பார்த்து, 'நறுக்'கென்று நாலு வார்த்தை கேட்டுவிடுவது என்று தீர்க்கமான முடிவுடன் புறப்பட்டாள் மைதிலி.

டைரக்டரின் வீட்டு வாசலில், காரில் இருந்தபடியே ''உள்ளே வரலாமா?'' என்று செல்ஃபோனில் கேட்டாள்.

''பேஷா! வாம்மா'' என்று அன்பான குரலில் வரவேற்றார்.

'நடிப்பா? நடிகையிடமே நடிப்பா? நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி, நாலே வார்த்தை கேட்கப் போகிறேன். மனுஷன் அப்பவாவது திருந்தட்டும்.'

''வாம்மா மைதிலி, ஏது இவ்வளவு தூரம்?''

''உங்களை வாழ்வில் சந்திக்கவே கூடாதுன்னு நினைச்சேன்! முடியலை. உங்களை நினைக்கவே எனக்கு அருவருப்பாயிருக்கு'' என்றாள் மைதிலி.

''ஏன்?''

''நானும் அதையே கேட்கிறேன். ஏன்?''

''எதற்கு... ஏன்...?''

''என் சினிமா வாய்ப்புகளை ஒவ்வொன்றாய்க் காலி செய்யறீங்க... ஊசியால் பலூனை உடைக்கற மாதிரி! ஒவ்வொரு பட முதலாளிக்கும் ஃபோன் போட்டு, என்னை நீக்கச் சொல்றீங்களாமே... ஏன்?'' மூச்சிரைக்கக் கேட்டாள்.

''யார் சொன்னா...?'' அமைதியாய்க் கேட்டார். ''இண்டஸ்ட்ரியில் எல்லோரும் சொல்றாங்க, நீங்கதான் காரணம்ன்னு!'' ஆத்திரமாய்ச் சொன்னாள்.

''யோசிச்சியா? என்னை மாதிரி ஒரு ஆள், உன் பட உலக வாய்ப்புகளை அஸ்தமிக்கச் செய்ய என்ன காரணம்னு?''

''பிறத்தியாரைக் கெடுக்க நினைக்கற சின்னபுத்தி உள்ள உங்களைப்போல் பெரிய மனிதரைப் பத்தி ஏன் வீணாக நினைச்சு, நேரத்தைப் போக்கணும்? தேவையில்லை.''

''குட்! லாஜிக்கலா பேசறே! நீ அறிவாளி. உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்! என்ன படிச்சிருக்கே நீ?''

''ம்... எம்.ஏ. ஃபிலாஸஃபி, டிஸ்டிங்ஷன். அப்புறம் ஆராய்ச்சிக்குப் போனவ, பட வாய்ப்பு வந்ததும் படிப்பை விட்டுட்டேன்.''

''பாத்தியா? உன்னை மாதிரி இவ்வளவு பெரிய நல்ல படிப்பாளி... படிப்பை விடலாமா?''

''படிச்சு... என்ன... வேலைக்குப் போகப் போறேன்! அது இப்பவே கிடைச்சிருச்சு. ஆனால், என்னை முன்னுக்கு வர விடமாட்டீங்க போல இருக்கே...''

''ஆமாம்! உன்னை சினிஃபீல்டில் இருக்க விட மாட்டேன்.''

''ஏன்?''

''ஏன்னா... டிஸ்டிங்ஷனில் பாஸ் பண்ணி ஆராய்ச்சி செய்யற ஓர் அறிவாளியை, ஏன் சினிமா உலகம் எடுத்துக்கணும்? நீ பெரிய படிப்பாளி! ஆனா ரொம்ப ரொம்ப சுமாரான நடிகை! உன் முதல் படம் முதல், இப்ப நடிக்கற படம்

வரை தெரியும்! நாலஞ்சு படத்திலும் ரொம்ப ரொம்ப சுமார்! உன்னை மாதிரி ஆயிரம் நடிகைகள் சினிமா உலகத்துக்குக் கிடைப்பாங்க. கிடைக்காட்டாலும் பெரிய நஷ்டமில்லை! ஆனால், அறிவுலகத்தில், உன் லெவலுக்குப் படிச்சு வர்றவங்க அவசியம் தேவை. நீ படிப்பை பாதியிலே விட்டுட்டால், யாருமே கிடைக்க மாட்டாங்க. காட்டில் சிங்கம் பெரிசு! கடலில் முதலை பெரிசு! அது அது அங்கேயே இருக்கணும்!''

''நீங்க பெரிய டைரக்டர்! எனக்கு வாய்ப்புக் கொடுத்து பெரிய நடிகையாக் கலாமே!''

''எதுக்கு? அதுக்குப் பதிலா உன் வாழ்க்கையை, கேரியரை டைரக்ட் பண்ணப் போறேன்!''

''உங்களுக்கென்ன அவ்வளவு அக்கறை?''

''ஏன்னா, நீ என் பால்ய நண்பன் ரகுராமோட ரெண்டாவது மக. என்னை உனக்குத் தெரியாது. உன்னை, உங்கப்பன, உன் குடும்பத்த... எனக்குத் தெரியும். என் நண்பனின் மக, சினிமாவுக்கு வர்றதை நான் விரும்பல. தெய்வமாயிட்ட என் நண்பனும் விரும்ப மாட்டான். நீ என் கஸ்டடியில் படிக்கப் போறே.



உனக்கு நடிப்பு வராது! படிப்பு வரும்! ஓ.கே! என் செல்லம்ல படிம்மா!'' என்றார். ஒரு தந்தையைப் போல் அன்பாய் வாழ்க்கையை இயக்கும் அவரின் முன், மைதிலி சிந்திக்க ஆரம்பித்தாள். ●

உலகே மாயம்

ஜெயிலில் யாரையெல்லாம் அடைப்பார்கள்? அடிதடி, குத்து கொலை, கொள்ளை, பிக்பாக்கெட்... என்று பெரிய பட்டியலை மூச்சு விடாமல் சொல்லலாம். ஆனால், கழுதை, நாய், மாடு என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

மெக்ஸிகோவில் ஒரு கழுதையைப் பிடித்துச் சிறையில் அடைத்திருக்கிறார்கள். காரணம், ஒருவரைக் கடித்துவிட்டது, இன்னொருவரை உதைத்துவிட்டது.



'இங்கு யார் எந்தக் குற்றம் புரிந்தாலும் ஜெயிலில் போட்டுவிடுவோம். அவர்கள் யார் என்பதெல்லாம் எங்களுக்குத் தேவையில்லாத விஷயம்' என்று சொல்லியிருக்கிறது காவல்துறை.

கழுதையின் உரிமையாளரான மோரா கட்டரேஸ் உதை வாங்கியவர்களின் மருத்துச் செலவை ஏற்றுக்கொண்ட பிறகே, கழுதையை விடுதலை செய்திருக்கிறார்கள். அதே ஜெயிலில், இரண்டு மாதங்களுக்கு முன்பு, ஒரு காளை மாடு கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறது. ஆளில்லாத சோளக் கொல்லையில் இஷ்டத்துக்கு ஆட்டம் போட்டதுதான் அது செய்த குற்றம்.

சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் என்பதற்கு இதுதான் அர்த்தமோ... அதுசரி... ஜெயிலில் இருக்கும் மனிதக் கைதிகளைப் பார்த்து, வாயில்லா ஜீவராசிகளும் கெட்டுப் போகாமல் இருக்குமா?

எமர்ஜென்சி நம்பர்களுக்கு ஃபோன் செய்ய, பொதுவாக எந்த நாட்டிலுமே கட்டணம் வசூலிப்பதில்லை. ஜப்பானில் வேறு சில அத்தியாவசியமான உபயோகங்களுக்கும் இந்தச் சலுகை உண்டு. அப்படி அனுமதியளிக்கப்பட்ட ஒரு உணவு நிறுவனத்துக்கு அடிக்கடி ஒரு ந(ம்)பர் ஃபோன் செய்துகொண்டே இருந்தார்.

ஒன்றரை வருஷமாக 500 தடவைக்கு மேல் தொடர்புகொண்டு, 3,100 மணிநேரம் இலவச ஃபோன் வசதியை வீணடித்திருக்கிறார் அந்த நபர். ஆளைக் கண்டுபிடித்து கைதும் செய்துவிட்டார்கள்.



'சும்மா சும்மா ஏன் ஃபோன் செய்கிறாய்' என்று கேட்டால், 'பதில் சொல்லும் பெண்ணின் குரலைக் கேட்டால் ரொம்ப 'கிக்'கா இருக்கு' என்று பதில் வந்திருக்கிறது.

'அடப்பாவி... அது ஒரிஜினல் இல்லடா... ரிக்கார்ட் வாய்ஸ்' என்று தலையிலடித்து கொண்டனர்.

அயர்லாந்து பிரதமர் பிரையன் கோவனின் கதை இப்படி ஆகியிருக்கக் கூடாது. பாராளுமன்றத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த கோவன் செம கடுப்பாகி 'எல்லா

பயலுகளோட இதுவும் எனக்குத் தெரியும்' என்று முனகிவிட்டார். (இது வும் என்ற இடத்தில் வந்து விழுந்தது அவையில் சொல்லவே கூடாத ஒரு வார்த்தை.)

கோவனின் துரதிர்ஷ்டம் மைக்ரோஃபோன் அவர் சொன்னதைக் காட்டிக் கொடுத்துவிட்டது. பொறுப்பான பதவியில் இருப்பவர், இப்படி நாடாளுமன்றத்தில் நாலாந்தரமாகப் பேசலாமா என்று, எல்லாப் பத்திரிகைகளும் தலையங்கம் எழுதிவிட்டன. பாவம் மனிதர், கடைசியில் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டிருக்கிறார்.





கம்பி எண்ணும் காளைமாடு!



பிரைன் கோவென்

கார் விற்பனை கொஞ்சம் சூடுபிடிக்க வேண்டுமென்றால் தள்ளுபடி, எக்ஸ்சேஞ்ச் ஆஃபர் என்றெல்லாம் பல ஐடியாக்கள் உண்டு. அமெரிக்காவில் மார்க் முல்லர் என்ற கார் விற்பனையாளர் அறிமுகப்படுத்தியிருப்பது அதிரடித் திட்டம்.

ஒரு கார் வாங்கினால், ஒரு கைத்துப்பாக்கி இலவசம்! சராசரி விற்பனையை விடவும் நாளொன்றுக்கு முப்பது கார்கள் கூடுதலாக விற்க ஆரம்பித்திருக்கின்றன!

அமெரிக்காவின் துப்பாக்கி கலாசாரம் எங்குபோய் முடியுமோ? அடுத்த நாடுகளைப் பாதிப்பது ஒருபுறம். தன் நாட்டையே பாதிப்பது ஒருபுறம். இரண்டு பக்கமும் கூரான கத்தியை எந்தப் பக்கம் பிடித்தால் என்ன?

- ஸாந்த்



''தலைவரே! நடிகர்களை நம்ம கட்சியில் சேர்க்க வேணாம்ன்னு சொன்னேனே... கேட்டீங்களா?''

''ஏன்... என்னாச்சு?''

''அவங்களோட மேக்கப் செலவுக்கே நம் கட்சி நிதி பத்த மாட்டேங்குதே!''

- வெ.ராம்குமார்

ஆபரேஷன் தியேட்டரில்

''எதுக்கு டாக்டர் எனக்கு தாயத்து கட்டறீங்க?''

''ஆபரேஷன் தியேட்டர்ல கொஞ்சம் பிசாசுத் தொந்தரவு உண்டு!''

- அம்பை தேவா





''உன்னோட மனைவிக்கு மூக்குக்கு மேல கோபம் வருமா...?''

''அட... எப்படிக் கண்டுபிடிச்சே?''

''உன் மூக்கைப் பார்த்துதான்.''

- கே.ஆனந்தன்

''அரண்மனையில் ஆயுதங்கள் குறையாமல் இருப்பதற்கும் மன்னரின் ஷுகர் வியாதிக்கும் என்ன சம்பந்தம்?''

''ஷுகர் வந்ததிலிருந்து, மன்னர் ஆயுதங்களை பேரீச்சம் பழத்துக்குப் போடுவதில்லையே!''

- தூத்துக்குடி வி.சகிதா முருகன்



''குழாய் ரிப்பேருக்கு ஆயிரம் ரூபாயா! டாக்டரான நானே ஒரு நாளைக்கு அவ்வளவு சம்பாதிக்கலையே!''

''நான் டாக்டரா இருந்தப்பவும் அப் படித்தான்!''

- ஜி. லக்ஷ்மிபதி



பிசாசு ...



''எம்.எல்.ஏ. விடுதில மட்டும் திருடறியே... ஏன்?''

''எனக்கு அரசியல் ஆர்வம் ஜாஸ்திங்க!''

- அம்பை தேவா



''சமையலறையில் ராணியாருக்கு உதவி செய்ய, ஏன் மன்னா பயப் படுகிறீர்கள்?''

''காய்கறி நறுக்கும் என் போர் வாளை யாரோ 'அபேஸ்' செய்து விட்டார்கள், மந்திரியாரே!''

- வெ.ராம்குமார்




''போர் முடிந்த பின்பு மன்னரைப் பார்க்க முடிவதில்லையே. வெளியில் இருக்கவே மாட்டேனென்கிறார்...''

''எப்படி இருப்பார்...? போர் முடிந்த பின்பு அவர்தான் 'வலி'யில் இருப்பாரே...''

- கே.ஆனந்தன்

நியூ டேஸ்ட்டி டயட் –11



‘‘**ச**த்தான உணவாகப் பார்த்துப் பார்த்துச் சாப்பிடுகிறேன். கலோரிகள் அதிகம் உள்ள பொருள்களை ஒதுக்கி விடுகிறேன். ஆனாலும் எனக்கு ஏன் இந்த நிலை?’’

போன மாதம், என்னிடம் ஆக்ரோஷமாக நியாயம் கேட்டார் ஒரு பெண்மணி. கையில் சிலம்பு மட்டும் தான் இல்லை! அடிக்கடி வயிற்றுக் கோளாறுகளால் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

பிறகுதான் உண்மை தெரிந்தது. எரிபொருள் சிக்கனம் என்கிற நல்ல கொள்கையை அளவுக்கதிகமாக அவர் கடைப்பிடித்திருக்கிறார். அதாவது உணவுப் பொருள்கள் முழுமையாக வெந்து பக்குவப்படுவதற்கு முன்பாகவே, அவற்றை ஸ்டவ்விலிருந்து இறக்கிவிடுவார்.

ஒன்றை உணர்ந்துகொள்ளுங்கள். சத்துள்ள கீரை வகையைத்தான் சாப்பிடுகிறீர்கள் என்றாலும், அது அரைகுறையாக வேக வைக்கப்பட்டிருந்தால் வயிற்றுத் தொல்லைகள் வரத்தான் செய்யும்.

அரிசியை வேக வைப்பதே ஜீரணத்துக்காகத்தான். இதிலும் பச்சரிசியைவிட புழுங்கல் அரிசி மேலும் எளிதாக ஜீரணமாகக் கூடியது.

காய்கறிகளிலும் கேரட், வெங்காயம், வெள்ளரி போன்றவை சுலபத்தில் ஜீரணமாகக் கூடியவை.

மாறாக, கத்தரிக்காய், பீட்ரூட், உருளைக் கிழங்கு போன்றவை சரியாக சமைக்கப்படவில்லை என்றால், அஜீரணக் கோளாறுகளை உண்டு பண்ணக்கூடும்.

உணவுப் பொருள்களை எதற்காகச் சமைக்கிறோம்? மூன்று முக்கிய காரணங்கள் உண்டு. கடினமான பொருள்கூட மிருதுவாக மாறி செரிமானமாவதற்கு; உடலுக்கு நல்லது என்றாலும், சில பொருள்களில் உள்ள ஏற்றுக்கொள்ள முடியாத நாற்றத்தை அகற்றுவதற்கு; ருசிக்கேற்றபடியும் அதிக சத்து கொண்டதாகவும் (வேறு பொருள்களைச் கலப்பதன் மூலம்) அவற்றை ஆக்குவதற்கு.



கொத்துமல்லி, புதினா போன்றவற்றை உணவுப் பொருள்களில் இடம் பெறச் செய்யும்போது, வாசனை மட்டுமல்ல, ருசியும் பல மடங்கு கூடும். வயிறும் சிரமமின்றி இதனை ஏற்றுக்கொள்கிறது.

கடும் வயிற்று வலி என்று ஒருவரை அழைத்து வந்திருந்தார்கள். எண்டோஸ்கோப் மூலமாக சோதனை செய்தபோது அதிர்ச்சி ஏற்பட்டது. அவர் வயிற்றில் ஒரு பெரிய முடிச் சுருள். ஏதோ ஒரு விதத்தில் அவரது மனநலம் பாதிக்கப்பட்டிருந்தது. அதனால், அவ்வப்போது முடியைப் பிய்த்து வாயில் போட்டுக்கொள்ளும் பழக்கம், அவருக்கு இருந்திருக்கிறது. சிறு துளி பெரு வெள்ளம்போல, இந்த முடிகள் எல்லாம் ஒன்றோடொன்று இணைந்து நூல்கண்டுபோல் ஆகி, வயிற்றை அடைத்துக்

கொண்டிருக்கிறது. அறுவை சிகிச்சை மூலம்தான் அதை நீக்க முடிந்தது.

உங்களால் நம்ப முடியாவிட்டாலும், வேகாத காய்கறிகள்கூட இப்படிப் பந்தாக வயிற்றில் அடைத்துக்கொள்ளலாம். அறுவை சிகிச்சை என்ற 'பேட்' மூலமாகத்தான் அந்தப் பந்தை பவுண்டரிக்கு வெளியே அனுப்ப முடியும்.

சமைக்காமலேயே சாப்பிடுவதற்கு, சில அதற்கான காரணத்தை நீங்க தெரிஞ்சுக்கணும். கிழங்குகளிலே மாவுச் சத்தும் சர்க்கரையும் எக்கச்சக்கமாக இருக்கு. பல கிழங்குகளில் நிறைய நார்ச்சத்தும் இருக்கு.

நார்ச்சத்து உடலுக்கு நல்லதுதான். இதனால் மலச்சிக்கல் உண்டாவது தடுக்கப்படுகிறது. மலச்சிக்கல் ஓ.கே.! ஆனால், வேறு சில சிக்கல்கள் தோன்றுமே?

(தொடரும்)

எழுத்து வடிவம்: **ஆதர்ஷ்**

அப்படியே சாப்பிடலாமா?



வண்ணமிகு சாலட்!

தேவைப்படும் பொருள்கள்:

1. மெல்லியதாக நீளவாக்கில் நறுக்கிய முட்டைக்கோஸ், கீரை (லெட்யூஸ்), கேரட், சிவப்பு, பச்சை, மஞ்சள் வண்ண குடைமிளகாய், வெள்ளரிக்காய். 2. மாங்காய் ஸ்லைஸ் (விருப்பப்பட்டால்) - அரை கப், 3. எலுமிச்சை ஜூஸ் - இரண்டு டீஸ்பூன், சர்க்கரை - 1 டீஸ்பூன், உப்பு - தேவைக்கேற்ப, மிளகுத்தூள் - அரை டீஸ்பூன்.

காய்களை உப்பு நீரில் ஊற வைத்துக் கழுவுங்கள். பிறகு, நறுக்கிய காய்கறிக் கலவையுடன் எலுமிச்சை ஜூஸ், சர்க்கரை, உப்பு, மிளகுத்தூள் சேர்த்து நன்றாகக் கலக்கவும். குளிர வைத்துப் பரிமாறவும். வண்ணம் முழுமையாக இருக்கும் சாலடை, குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள்.



காய்கறிகளை மட்டுமே டிக் செய்யலாம். தக்காளி, வெங்காயம், வெள்ளரி, முட்டைக்கோஸ் இலை (இது மட்டும் வேக வைத்தது) கூட்டணி சரியானதுதான். ஆனால், இவற்றையெல்லாம் சுத்தமாகக் கழுவ மறக்க வேண்டாம்.

'பூமிக்குக் கீழே விளைந்ததை எல்லாம் ஒதுக்கிடுங்க' என்று சிலர் சொல்வார்கள். அதாவது கிழங்குகளைத்தான் அப்படித் தீண்டாமல் இருக்கச் சொல்றாங்க. அவர்கள் மீது தீண்டாமை தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு முன்னாலே

கூலா சாப்பிடுங்க!



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 2008

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

முதல் பரிசு - ரூ.10,000/-
இரண்டாம் பரிசு - ரூ.7,500/-
மூன்றாம் பரிசு - ரூ.5000/-

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

விதிமுறைகள் :

★ கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது. சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.

★ அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.

★ படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. - ஜெராக்ஸ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

★ முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.

★ தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

★ போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.

★ பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

★ முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.

★ **'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2008'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

✱ **கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 16.**

✱ **போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 3 ஆண்டு மலரில் வெளியாகும்.**

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்


புத்தக விமர்சனம்

நினைவில் நீந்தும் ஃப்ளாஷ்பேக்



நாற்பது திரைப்பட இயக்குனர்களும் நானும் - 'கலை வித்தகர்' ஆரூர்தாஸ், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 02. விலை ரூ.65

திரையுலக நட்சத்திரங்கள், இயக்குநர்கள், அவர்களுக்குத் தாம் வசனம் எழுதிய படங்கள் என தம் நினைவில் நீந்திவந்த ஃப்ளாஷ் பேக் காட்சிகளை, உணர்வு பூர்வமாக சுவைபடத் தொகுத்தளித்துள்ளார் நூலாசிரியர். சினிமாவை விரும்பும் எல்லோரும் படித்து ரசிக்கும் வகையில், நாற்பது இயக்குநர்களுடனான தமது அனுபவங்களை விவரித்துள்ளார் ஆரூர்தாஸ்.




உடல்மொழி - ஆலன் மற்றும் பார்பரா பீஸ், தமிழில் : பி.உதயகுமார், கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.150

விற்பனையில் நம்பர் ஒன் சர்வதேச சாதனை புரிந்த நூல். உடலின் அசைவுகள், முக பாவங்கள், சைகைகள் பற்றி எழுதப்பட்டுள்ள இந்நூல், ஓர் உடல்மொழி அகராதி! பல ஆராய்ச்சிகளின் பயனாக வெளிவந்திருக்கும் இப்புத்தகம், பிறரின் மனோ பாவங்களையும், உணர்வுகளையும் அறிந்துகொள்ள உதவும். நேர்முகத் தேர்வுகளில் சிறப்பாகச் செயல்படும் வழிகள், அலுவலகத்தில் உயர்ந்த மதிப்பைப் பெற வழிமுறைகள் என பல பயனுள்ள தகவல்கள் விளக்கப் பட்டுள்ளன.



கலை வரலாற்றுப் பயணங்கள் - மு.ஸ்ரீனிவாஸன், சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 78. விலை ரூ.150

தாம் பயணம் செய்த தலங்களின் கலை, வரலாற்றுச் சிறப்புகளை கட்டுரைகளாக வழங்கியுள்ளார் நூலாசிரியர். அந்தந்த இடங்களின் சிறப்பைக் கூறும் புகைப்படங்களைச் சேர்த்திருப்பது நூலுக்குக் கூடுதல் அழகு.



அருள்மிகு காட்டு மிராண்டிக்கு... - புவனகிரி கல்யாண், கல்யாண் பதிப்பகம், 75/15, பாளையகாரத் தெரு, புவனகிரி. விலை ரூ.60

இளமை நினைவுகள், காதல், ஏழ்மை, இரக்கம், சமுதாயம், பெண்மை என அனைத்து பிரிவுகளிலும் தம் உணர்வுகளைக் கவிதைகளாகப் பதிவு செய்துள்ளார் நூலாசிரியர்.

- மித்ரா

அண்மையில் ஜெர்மனியின் மியூனிக் நகரில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில், 'தேவதைகள்' ஆவணப்படம் திரையிடப்பட்டது. அந்தப் படத்தினை இயக்கியவர், கவிஞர் லீனா மணிமேகலை. சிறப்பு அழைப்பின் பேரில் திரைப்பட விழாவில் கலந்துகொண்ட தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார் :

மியூனிக் நகரத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தியேட்டர்களில் அதி நவீன டெக்னாலஜியைப் பயன்படுத்தி, ஜெர்மன் மொழியாக்கத்துடன் 'தேவதைகள்' திரையிட்ட





● தேவதைகள் - திரையிட்டபோது...

போது, அதை உருவாக்கிய எனக்குப் பரவசமாக இருந்தது.

இரண்டு உலகப் போர்கள். மனித இனத்தையே உலுக்கிய ஹிட்லரது இனப் படுகொலைகள். மற்ற வல்லரசுகளது ஆக்கிரமிப்புகள்... என்று வரலாற்றின் சிதைவுகளிலிருந்து மீண்டும் எழுந்த மியூனிக், இன்று உலகின் மிகச் சிறந்த பத்து நகரங்களுள் ஒன்று. சென்னை கோடை சுட்டெரிக்கிறது. ஆனால், ஜெர்மனியில் மக்களைத் தாலாட்டுகிறது. கோதுமையிலிருந்து தயாரிக்கப்படும் பீர், ஜெர்மனியில் வெகு பிரபலம். மியூனிக் நகரைச் சுற்றி ஓடும் இசா நதியில், ஓடுவது தண்ணீரா... பீரா? என்று எண்ணுமளவுக்கு மக்கள் வீடுகளை மறந்து, பீர் கோப்பையும் கையுமாக கோடை சூரியனை அணுஅணுவாக ரசிக்கிறார்கள்.

மியூனிக் நகரின் பழைமை வாய்ந்த கட்டடங்களையும், மாளிகைகளையும் எந்த விதமான மாற்றங்களும் செய்யாமல், அப்படியே பாதுகாத்துப் பராமரித்து வருகிறார்கள். இரண்டாம் உலகப் போரில் வான் வழித்தாக்குதலில் சிதைந்த பகுதிகளைக்கூட பழைய மாதிரியே சீரமைத்து வைத்திருக்கிறார்கள்.

மியூசியம் ஐலேண்ட் என்று ஒன்றை உருவாக்கி அங்கே அறிவியல், தொழில் நுட்பம், சினிமா, வரலாறு என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அருங்காட்சியகங்களை அமைத்திருக்கிறார்கள். ஹேவல், ஸ்ப்ரீ ஆகிய இரண்டு நதிகளின் தயவில், பெர்லின் நகரையே ஒரு சிறிய கப்பலில் சுற்றிப்பார்க்க முடிகிறது.

ஐரோப்பா முழுவதுமாக இருபதுக்கும் மேற்பட்ட சித்ரவதை முகாம்களை ஹிட்லர் பராமரித்து வந்திருந்தாலும், முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டு இறுதிவரை செயல்பட்டது 'டகெள' சித்ரவதை முகாம்தான். 'சாகும்வரை அல்லது விடுதலையாகும் வரை வேலை செய்' என்ற சித்ரவதை முகாமின் முகப்பு வாசகமே நமக்குக் கிலி ஏற்படுத்துகிறது. 1933 முதல் 45 வரை, இரண்டு லட்சத்துக்கும்

அதிகமான யூதர்களை அடைத்து வைத்து கொடுமைப்படுத்தி அழித்தொழித்த இடம் அது. கைதிகள் இருந்த படுக்கை அறைகள், கழிவறைகள், சுட்டுக் கொல்லப்பட்ட இடங்கள், விஷவாயுக் குளியலால் சாகடிக்கப்பட்ட இடங்கள், பிரம்மாண்டமான பிணவறைகள், பிணங்கள் எரிக்கப்பட்ட மயானங்கள்... என்று ஒவ்வொரு சதுர அடியும் கொடூரமான ஹிட்லர் காலத்துக்கே நம்மை அழைத்துச் செல்கின்றன.

முழு வரலாற்றையும் மியூசியமாக அமைத்திருக்கிறார்கள். கிழக்கிலிருந்து பார்த்தால் அமெரிக்க ராணுவ வீரர் போலவும், மேற்கிலிருந்து பார்த்தால் ரஷ்ய ராணுவ வீரர் போலவும் தெரியும் புகைப்படம் அனைவரையும் ஈர்க்கிறது. தவிர, ராணுவ உடைகள் அணிந்த மனிதர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு போஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மன் மக்கள், மரங்களை பிள்ளைகளைவிட மேலாகப் பாது

ஜெர்மனியில் தேவதைகள்!



* ஜெர்மனியில் வீணா மணிமேகலை



* போஸ் கொடுக்கும் இராணுவ வீரர்கள்...

ஜெர்மனியில் வசிக்கும் எழுத்தாளர்-நண்பர் கருணாமூர்த்தியுடன் பெர்லின் நகரத்துக்குச் சென்றேன். முன்பு கிழக்கு-மேற்கு ஜெர்மனிக்கு இடைப்பட்ட 'யாருக்கும் சொந்தமில்லாத நிலப்பகுதி' யில், இன்று அதி நவீன வான்முட்டும் கட்டடங்கள் எழுந்து நிற்கின்றன. அவற்றில் பன்னாட்டு நிறுவனங்களின் அலுவலகங்கள் செயல்படுகின்றன. செக் பாயிண்ட் சார்லி என்ற இடத்தில், பெர்லின் சுவரின்

காக்கின்றனர். வறண்ட காலத்திலும் பூமிக்கு அடியில் பதிக்கப்பட்டுள்ள நவீன குழாய்கள் வழியாக, செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். விபத்தில் மரத்தை இடித்துச் சாய்த்துவிட்டால், விதையிலிருந்து மரமானது வரை ஆன செலவு என்று 50 ஆயிரம் யூரோக்களை அபராதமாகத் தீட்டிவிடுகிறார்கள்.

தொகுப்பு : மானஸா

புலிராஜா

நமது கதாநாயகர் பிரதிபந்தபுரம் மகாராஜா அவர்களை, ஹிஸ் ஹைனஸ் ஜமேதார் - ஜெனரல், கிலேதார் - மேஜர், சத வியாக்ர ஸம்ஹாரி, மகா ராஜாதிராஜ விசுவபுவன ஸம்ராட், ஸர் ஜிலானி ஜங் ஜங் பகதூர், எம்.ஏ.டி., ஏ.ஸி.டி.ஸி, ஸி.ஆர்.ஸி.கே. என்றும் சொல்வதுண்டு; 'புலி ராஜா' என்று சுருக்கமாகச் சொல்வதும் உண்டு. அவருக்குப் 'புலி ராஜா' என்ற பெயர் ஏன் வந்தது என்பதைத்தான் இங்கே சொல்ல முன் வந்திருக்கிறேன். ஆனால், முன் வருவது போல் வந்து விட்டுப் பின்வாங்கும் உத்தேசம் எனக்குக் கொஞ்சம்கூடக் கிடையாது. 'ஸ்டுகா' பாம்பர் விமானம் வந்தாலும் நான் பயப்படப் போவதில்லை. 'ஸ்டுகா'தான், என் கதைக்குப் பயந்து ஓடும்படியிருக்கும்.

புலி ராஜாவைப் பற்றி மிகவும் முக்கியமான விஷயத்தை முதலிலேயே சொல்லி விடுவது அவசியமாகிறது. ஏனெனில், அவரைப் பற்றிப் படிக்கும்போது, அப்பேர்ப்பட்ட அஸகாய சூரனைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் அளவில்லாமல் உண்டாகி விடும். ஆனால், அந்த ஆசை நிறைவேறுவதற்கு வழி கிடையாது. பரதன் ராமனிடம் தசரதரைக் குறித்துச் சொன்ன பிரகாரம், உலகிலேயே பிறக்கும் ஜீவர்களெல்லாம், கடைசியாக எந்த இடத்துக்குப் போய்ச் சேர்கிறார்களோ, அங்கே நமது புலி ராஜாவும் விஜயமாகிவிட்டார். சுருங்கச் சொன்னால், புலி ராஜா இறந்துபோனார்!

அவர் எப்படி இறந்து போனார் என்பது ஓர் அதிசயமான விஷயம். அதைக் கதையின் கடைசியிலேதான் சொல்ல வேண்டும். ஆனால், அவருடைய மரணத்தில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால், அவர் பிறந்த காலத்திலேயே, அவர் ஒரு நாள் இறந்தும் போவார் என்று ஜோசியர்கள் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டார்கள்!

''குழந்தை வீராதி வீரனாகவும், சூராதி சூரனாகவும், தீராதி தீரனாகவும் விளங்குவான். ஆனால்...'' என்று மென்று விழுங்கினார்கள். ''என்ன சமாசாரம்?'' என்று அழுத்திக் கேட்டதன்பேரில், ''சொல்லக் கூடாது; ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ஜாதகனுக்கு ஒரு காலத்தில் மரணம் நேரிடும்'' என்றார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு பெரிய அதிசயம் நடந்தது. பிறந்து பத்துத் தினங்கள்தான் ஆன ஜிலானி ஜங் ஜங் பகதூர் வாயிலி



ருந்து. ஓர் ஆச்சரியமான வார்த்தை கிளம்பிற்று. ''பிரகஸ்பதிகளே!'' என்பதுதான் அந்த வார்த்தை.

எல்லோரும் அப்படியே பிரமித்துப் போய் நின்றுவிட்டார்கள். ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

''நான்தான் பேசினேன், பிரகஸ்பதிகளே!''

இந்தத் தடவை சந்தேகத்துக்கே இடமில்லை. பிறந்து பத்தே நாளான குழந்தைதான் அவ்வளவு திவ்யமாகப் பேசியிருக்கிறது!

தலைமை ஜோசியர், மூக்குக் கண்ணாடியைக் கழற்றிவிட்டு குழந்தையை உற்றுப் பார்த்தார்.

''பிறந்தவர் யாவரும் இறந்துதானே தீர வேண்டும்? அதற்கு, நீங்கள் என்ன ஜோசியம் சொல்வது? மரணம் எந்த விதத்தில் நேரும் என்று சொன்னாலும் அர்த்தம் உண்டு'' என்று சின்னஞ்சிறு கீச்சுக் குரலில் யுவராஜா திருவாய் மலர்ந்தார்.

ஜோசியர் தலைவர், மூக்கிலே விரலை வைத்து அதிசயித்தார். பத்து நாள் குழந்தை பேசுகிறது. அதோடு இல்லை, இவ்வளவு புத்திசாலித்தனமான கேள்வி கேட்கிறது என்றால் - இதென்ன, யுத்த இலாகா



''பையனுக்கு குண்டான பொண்ணுதான் வேணும்ங்கறீங்களே... ஏன்?''

''அப்பத்தான் தலையில தூக்கி வைச்சுக்கிட்டு ஆடமாட்டான்''

- என்.எஸ்.பாலசுப்பிரமணியன்



அறிக்கைகளைப் போல் தோன்றுகிறதே தவிர, நம்பக்கூடியதாய் இருக்கிறதா?

தலைமை ஜோசியர், மூக்கிலிருந்து விரலை எடுத்துவிட்டு, யுவராஜாவை உற்றுப் பார்த்துவிட்டுச் சொன்னார்:

''ரிஷப லக்கினத்தில் யுவராஜா ஜனனம். ரிஷபத்துக்கும் புலிக்கும் பகை. ஆகையால், புலியினால் மரணம்.''

புலி என்ற வார்த்தையைக் கேட்டதும், யுவராஜா ஜங் ஜங் பகதூர் பயந்து நடுங்கியிருப்பார் என்று நீங்கள் நினைக்கலாம். அதுதான் இல்லை. புலி என்று கேட்டதும், யுவராஜா ஓர் உறுமல் உறுமினார். பிறகு இரண்டு பயங்கரமான வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளிவந்தன:

''புலிகள் ஜாக்கிரதை!''

மேலே கூறிய சம்பவம், பிரதிபந்தபுரத்தில் வழங்கி வந்த வதந்தியேதான். ஆனால், பின்னால் நடந்தவற்றைக் கொண்டு பார்க்கும்போது, அது உண்மையாயிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

யுவராஜா ஜங் ஜங் பகதூர், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். மேற்கூறிய சம்பவத்தைத் தவிர, அவருடைய குழந்தைப் பருவத்தில் வேறு அதிசயம் ஒன்றும் நடக்கவில்லை. மற்ற சுதேச சமஸ்தானங்களின் யுவராஜாக்களைப் போல்தான் அவரும் இங்கிலீஷ் பசுவின் பாலைக் குடித்து, இங்கிலீஷ் நர்ஸினால் போஷிக்கப்பட்டு, இங்கிலீஷ் உபாத்தியாயரால் இங்கிலீஷ் கற்பிக்கப்பட்டு, இங்கிலீஷ் சினிமாக்கள் பார்த்து - இப்படியாக வளர்ந்து வந்தார். வயது இருபது ஆனதும், அதுவரைக்கும் 'கோர்ட் ஆப் வார்ட்'ஸில் இருந்த ராஜ்யமும் கைக்கு வந்தது.

ஆனால், ராஜ்யத்தில் மட்டும், மேற்சொன்ன ஜோசியக் கூற்று எல்லோருக்கும் நினைவிருந்தது. அநேகர் அதைப் பற்றிப் பேசியும் வந்தார்கள். மெதுவாக மகாராஜாவின் காதிலும் இந்தப் பேச்சு விழுந்தது.

பிரதிபந்தபுரம் சமஸ்தானத்தில் காடுகள் ஏராளமாக உண்டு. அவற்றில் புலிகளும் உண்டு. 'தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம்' என்ற பழமொழி, மகாராஜாவுக்குத் தெரிந்திருந்தது. தன்னைக் கொல்ல வரும் புலியைக் கொல்லுவதைப் பற்றி என்ன ஆட்சேபனை? மகாராஜா புலிவேட்டையாடக் கிளம்பினார்.

முதல் புலியைக் கொன்றதும், மகாராஜாவுக்கு ஏற்பட்ட குதூகலத்துக்கு அளவில்லை. சமஸ்தானத்தின் ஜோசியர் தலைவரைக் கூப்பிட்டு அனுப்பினார். செத்த புலியைக் காட்டி, ''இப்போது என்ன சொல்கிறீர்?'' என்று கேட்டார்.

''மகாராஜா, இந்த மாதிரியே 99 புலிகளைக் கொன்றுவிடலாம்; ஆனால்...'' என்று ஜோசியர் இழுத்தார்.

''ஆனால், என்ன? தைரியமாகச் சொல்லும்!''

''ஆனால், நூறாவது புலி விஷயத்தில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.''

''சரி, நூறாவது புலியையும் கொன்றுவிட்டால் அப்புறம்?''

''அப்புறம் என்னுடைய ஜோசியப் புஸ்தகங்களையெல்லாம் கிழித்து,

நெருப்பு வைத்துவிட்டு...''

''வைத்துவிட்டு...''

''... தலையில் கிராப்பு வைத்துக் கொண்டு, இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏஜன்ட்டாகப் போய்விடுகிறேன்!'' என்று ஜோசியர் சம்பந்தமில்லாமல் முடித்தார்.

பிரதிபந்தபுரம் சமஸ்தானத்தின் காடுகளிலிருந்த புலிகளுக்கெல்லாம் அன்று முதல் கொண்டாட்டம்தான்.

மகாராஜாவைத் தவிர, வேறு யாரும் புலி வேட்டை ஆடக் கூடாது என்று உத்தரவு பிறந்தது.

தப்பித்தவறி யாராவது ஒரு புலியின் மேல் கல்லை விட்டெறிந்தால்கூட, அப்படிப்பட்ட ராஜத் துரோகத்தைச் செய்தவனுடைய சொத்துக்களெல்லாம் பறிமுதல் செய்யப்படுமென்று தண்டோரா போடப்பட்டது.

மகாராஜா நூறு புலிகளை முழுசாகக் கொன்ற பிறகுதான், மற்ற காரியங்களில் கவனம் செலுத்துவது என்று கங்கணம் கட்டிக்கொண்டார். அவருடைய உத்தேசம் நன்கு நிறைவேறியும் வந்தது.

அபாயங்கள் அவருக்கு நேரிடாமல் இல்லை. சில தடவை, துப்பாக்கிக் குறி தவறி புலி அவர்மேல் பாயவும், அதனுடன் கைகலந்து சண்டை போடவும் நேரிட்டது. ஒவ்வொரு தடவையிலும், அவர்தான் கடைசியில் வெற்றி பெற்றார்.

இன்னொரு சமயம், அவருடைய சிம்மாசனத்துக்கே ஆபத்து வருவதாயிருந்தது. ஒரு பெரிய பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் பிரதிபந்தபுரத்துக்கு விஜயம் செய்தார். அவருக்குப் புலி வேட்டையில் ரொம்பப் பிரியம். அதைக் காட்டிலும், தாம் கொன்ற புலிக்குப் பக்கத்தில் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்வதில் அதிகப் பிரியம். வழக்கம் போல் அவர் பிரதிபந்தபுரம் சமஸ்தானத்திலும், புலி வேட்டையாட விரும்பினார். ஆனால், மகாராஜா கண்டிப்பாக மறுத்துவிட்டார். ''வேறு என்ன வேட்டைக்கு வேணுமானாலும் ஏற்பாடு செய்கிறேன்; பன்றி வேட்டையா? ஆடுங்கள்; எலி வேட்டையா? நடத்துங்கள்; கொசு வேட்டையா? இதோ தயார். ஆனால், புலி வேட்டை மட்டும் இங்கே முடியாது'' என்றார் மகாராஜா.

''துரைதான் புலியைக் கொன்று ஆக வேண்டுமென்று அவசியமில்லை, மகாராஜாவே கொல்லலாம். செத்த புலிக்குப் பக்கத்தில், கையில் துப்பாக்கியுடன் நின்று ஃபோட்டோ எடுத்துக்கொள்வதுதான் துரைக்கு முக்கியம்'' என்று மேற்படி பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரின் காரியதரிசி, சமஸ்தான திவான் மூலமாகச் சொல்லியனுப்பினார். இதற்கும் மகாராஜா சம்மதிக்கவில்லை. இப்போது கொஞ்சம் இடங் கொடுத்துவிட்டால், அப்புறம் இன்னும் சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் புலி வேட்டைக்கு வந்து சேரலாமல்லவா?

இப்படி ஒரு பெரிய ஆங்கில உத்தியோகஸ்தரின் விருப்பத்துக்குக் குறுக்கே நின்றதன் பயனாக, மகாராஜாவின் கையைவிட்டு ராஜ்யமே போய்விடுமோ என்று பயம் உண்டாயிற்று.


இதைக் குறித்து மகாராஜாவும் திவானும் கலந்தாலோசித்தார்கள்.



மகாராஜா, நூறு புலிகளை முழுசாகக் கொன்ற பிறகுதான், மற்ற காரியங்களில் கவனம் செலுத்துவது என்று கங்கணம் கட்டிக்கொண்டார்.

உடனே கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய இங்கிலீஷ் நகைக் கம்பெனிக்குத் தந்தி போயிற்று, ''வைர மோதிரங்களில் சில உயர்ந்த மாதிரிகள் அனுப்பி வைக்கவும்'' என்று.

அவ்விதமே வைர மோதிரங்கள் சுமார் ஐம்பது தினுசுகள் வந்தன. அவற்றை அப்படியே மகாராஜா, மேற்படி பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரின் தர்ம பத்தினிக்கு அனுப்பி வைத்தார். துரைசானி அம்மாள், ஏதாவது ஒன்றிரண்டு பொறுக்கிக் கொண்டு, பாக்கியைத் திருப்பி அனுப்பி விடுவாளென்று மகாராஜாவும் திவானும் எதிர்பார்த்தார்கள்.



''திவான் சாகிப், இன்னும் முப்பது புலிகள் இந்தத் துப்பாக்கிக்கு இரையாகித் தீரவேண்டும்!''

ஆனால், சற்று நேரத்துக்கெல்லாம் துரைசானியிடமிருந்து பதில் வந்துவிட்டது: ''நீங்கள் அனுப்பிய பரிசு மோதிரங்களுக்காக மிகவும் வந்தனம்.''

இரண்டு நாளைக்கெல்லாம் நகைக் கம்பெனியாரிடமிருந்து மூன்று லட்சம் ரூபாய்க்குப் 'பில்' வந்தது. மூன்று லட்சம் ரூபாய் போனாலும், சிம்மாசனத்துக்கு ஆபத்தில்லாமல் தப்பியது பற்றி மகாராஜாவுக்குச் சந்தோஷம்தான்.

மகாராஜாவின் புலிவேட்டை விரதம் நன்கு நிறைவேறி வந்தது. பத்து வருஷ காலத்தில், எழுபது புலிகள் வரையில் வேட்டையாடிக் கொன்றுவிட்டார். அதற்குப் பிறகு ஒரு பெரிய இடையூறு எதிர்ப்பட்டது. பிரதிபந்தபுரம் காடுகளில் புலிகளே அற்றுப்போய்விட்டனபோல் தோன்றியது. புலிகள் ஒருவேளை கருத்தடை முறைகளைக் கையாண்டனவோ, அல்லது 'ஹிராகிரி' செய்துகொண்டனவோ, அல்லது வெள்ளைக்காரர்களின் கையினால் தான் சாகவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டு நாட்டைவிட்டு ஓடிப்போயினவோ, தெரியவில்லை.

மகாராஜா ஒரு நாள் திவானைக் கூப்பிட்டார். ''திவான் சாகிப், இன்னும் முப்பது புலிகள் இந்தத் துப்பாக்கிக்கு இரையாகித் தீரவேண்டுமென்று உமக்குத் தெரியுமோ, இல்லையோ?''என்று கேட்டார். திவான் துப்பாக்கியைப் பார்த்து நடுநடுங்கிக்கொண்டே, ''மகாராஜா! நான் புலியில்லை...'' என்றார்.

''நீர் புலி என்று எந்த முட்டாள் சொன்னது?''

''இல்லை, நான் துப்பாக்கி இல்லை'' என்றார் திவான்.

''நீர் புலியுமில்லை. துப்பாக்கியுமில்லை, திவான் சாகிப்! உம்மைக் கூப்பிட்ட காரணம் வேறு. நான் கல்யாணம் செய்துகொள்வதென்று தீர்மானித்துவிட்டேன்'' என்றார் மகாராஜா.

திவானுக்கு உளறல் இன்னும் அதிகமாகிவிட்டது. ''மகாராஜா! ஏற்கெனவே எனக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள்; உங்களையும் கல்யாணம் செய்து கொண்டு...''

''சட், என்னங்காணும் உளறுகிறீர்? உம்மை எதற்காக நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்? எனக்கு வேண்டி

யது புலி...''

''மகாராஜா! வேண்டாம், யோசனை செய்யுங்கள். உங்கள் குலத்து முன்னோர்கள் கத்தியைக் கல்யாணம் செய்துகொண்டார்கள். நீங்கள் வேணுமானால் துப்பாக்கியைக் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். இந்த சமஸ்தானத்துக்குப் புலி ராஜா இருப்பது போதும்; புலி ராணி வேறு வேண்டாம்!''

இதைக் கேட்ட மகாராஜா குபீரென்று சிரித்துவிட்டு, ''புலியுமில்லை, துப்பாக்கியுமில்லை. மனுஷப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன். தற்சமயம் எந்தெந்த சமஸ்தானத்தில் புலி இருக்கிறதென்று முதலில் கணக்குத் தயார் செய்யும். பிறகு, புலி இருக்கிற சமஸ்தானத்தில், ராஜ வம்சத்தில் கல்யாணத்துக்குப் பெண் இருக்கிறதா என்று பாரும்'' என்றார்.

திவான் அப்படியே பார்த்தார். கடைசியில் மகாராஜாவின் விருப்பத்தின்படியே, புலிகள் நிறைய உள்ள சமஸ்தானத்தில் பெண் பார்த்துக் கல்யாணமும் செய்து வைத்தார்.

மகாராஜா ஜங்ஜங் பகதூர் ஒவ்வொரு தடவை மாமனார் வீடு சென்றபோதும், ஐந்தாறு புலிகளைக் கொன்று எல்லாப் புலிகளின் தோலும் - சரியாக 99 தோல் - அரண்மனை ஆஸ்தான மண்டபத்தின் சுவர்களை அலங்கரித்தன.

கடைசியில் நூறுக்கு இன்னும் ஒரு புலிதான் பாக்கி என்ற நிலைமை ஏற்பட்டதும், மகாராஜாவின் பரபரப்பு மிகவும் அதிகமாயிற்று. பகலில் அதே நினைவு; இரவில் அதே கனவு; இதற்குள்ளே, மாமனார் சமஸ்தானத்திலும் புலிப் பண்ணை வறண்டு போய்விட்டபடியால், புலிகள் அகப்படுவது மிகவும் பிரயாசையாய்ப் போயிருந்தது. ஆனாலும், இன்னும் ஒன்றே ஒன்றுதானே? இன்னும் ஒரு புலியை மட்டும் கொன்றுவிட்டால், அப்புறம் பயமே இல்லை. புலி வேட்டையையே விட்டுவிடலாம்.

ஆனால், இந்தக் கடைசிப் புலி விஷயத்தில் வெகு ஜாக்கிரதையா இருக்க வேண்டும். காலஞ்சென்ற தலைமை ஜோசியர் என்ன சொன்னார்? 99 புலிகளை மகாராஜா கொன்றபோதிலும், நூறாவது புலி விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்! உண்மைதான். புலி பொல்லாத மிருகம்; ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அந்த நூறாவது புலிக்கு எங்கே போகிறது? புலி கிடைப்பது புலிப்பால் கிடைப்பதைவிடக் கஷ்டமாகிவிட்டதே?

மகாராஜா இப்படிப்பட்ட கவலையில் ஆழ்ந்திருந்தபோது, அந்தக் கவலையைப் போக்கக்கூடிய ஓர் அருமையான சந்தோஷச் செய்தி வந்தது. அந்தச் சமஸ்தானத்திலேயே மலைக் கிராமம் ஒன்றில், திடீர் திடீரென்று சில ஆடுகள் காணாமல் போயின. 'முழு ஆடு விழுங்கிகள்' என்று பெயர்பெற்ற காதர் மியான் சாகிபுவையும், வீராசாமி நாயக்கரையும் விசாரித்து, அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று

''என் கதை, கட்டுரைங்களையெல்லாம் ஒரு மூலையாதானே வைச்சிருக்கேன்... ஏன் கத்தறே?''

''இந்த மூலையில குப்பை சேரக்கூடாதுன்னு வாஸ்து ஜோசியர் சொல்லியிருக்காரில்லே!''

- கிரிஜா மணாளன்



தெரிய வந்தது. புலிதான் வந்திருக்க வேண்டுமென்று நிச்சயமாயிற்று. கிராமவாசிகள் ஓடிப்போய் மகாராஜாவிடம் தெரிவித்தார்கள். அந்தக் கிராமத்துக்கு மூன்று வருஷம் வரி, வாய்தா குவிட்ரெண்ட், ஜமாபந்தி, புறம்போக்குப் பட்டி ஒன்றுமே கிடையாது என்று மகாராஜா தெரிவித்துவிட்டு, உடனே வேட்டைக்குக் கிளம்பினார்.

புலி இலேசில் அகப்படவில்லை. வேண்டுமென்று மகாராஜா கையில் அகப்படக் கூடாதென்றே, அது ஒளிந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. மகாராஜாவோ, புலி அகப்பட்டால் ஒழியக் காட்டைவிட்டு வரமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தார். அதோடு, நாளாக ஆக மகாராஜாவின் கோபமும் பிடிவாதமும் அதிகமாகி வந்தன. அதன் பயனாய், அனேக உத்தியோகஸ்தர்களுக்கு வேலை போய்விட்டது!

ஒரு நாள் ரொம்பக் கோபம் வந்தபோது, மகாராஜா திவானைக் கூப்பிட்டு, ''சமஸ்தானத்தில் நிலவரியை உடனே இரண்டு பங்கு செய்யுங்கள்'' என்றார். திவான், ''பிரஜைகளுக்கு அதிருப்தி உண்டாகும், மகாராஜா! அப்புறம் நம் சமஸ்தானத்திலும் ஸ்டேட் காங்கிரஸ் ஏற்பட்டு விடும்'' என்றார். ''அப்படியானால், உம்முடைய வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போம்!'' என்றார் மகாராஜா.

இதற்குமேல் மகாராஜாவுக்குப் புலி அகப்படாதிருந்தால் விபரீதம்தான் என்று தீர்மானித்துக்கொண்டு வீட்டுக்குப் போனார் திவான். அங்கே, சென்னை பீப்பிள்ஸ் பார்க்கிலிருந்து வாங்கிக் கொண்டுபோய் இரகசியமாய் வைத்திருந்த புலியைப் பார்த்ததும்தான், அவருக்கு உயிர் வந்தது.

அன்று இரவு நடுநிசியில் ஊரெல்லாம் அடங்கிய பிறகு, திவானும் அவருடைய வயது முதிர்ந்த மனைவியும் மேற்படி புலியை இழுத்துக்கொண்டு வந்து மோட்டாரில் ஏற்றினார்கள். திவான் தாமே மோட்டாரை ஓட்டிக்கொண்டு போய், மகாராஜா வேட்டையாடிக் கொண்டிருந்த காட்டுக்குப் பக்கத்தில் புலியை இறக்கினார்! மோட்டாரிலிருந்து இறங்கமாட்டேன் என்று சத்தியாக்கிரகம் செய்த அந்தப் புலியைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளுவதற்குள், திவானுக்கு மேல் மூச்சு வாங்கி விட்டது!

மறுநாள் மகாராஜாவின் முன்னால் மேற்படி கிழப்புலியானது வந்து, 'எஜமானே! என்ன ஆக்ஞை?' என்று கேட்பது போல் நின்றது. மகாராஜா அளவிறந்த உற்சாகத்துடன் துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்துச் சுட்டார். உடனே புலி சுருண்டு விழுந்தது.

''நூறாவது புலியைக் கொன்றுவிட்டோம்; விரதம் நிறைவேறிவிட்டது!'' என்ற மகத்தான குதூகலம் மகாராஜாவின்

''வீட்டைக் கொள்ளையடிச்சது போதாதுன்னு, எதுக்கு என்னோட கைரேகையை வேற எடுக்கற?''

''எங்க சங்கத்துலயிருந்து வேற யாரும் உங்க வீட்டுல திருடாம இருக்கறதுக்கு கம்ப்யூட்டர்ல பதிவு செஞ்சுடுவோம்.''

- எஸ்.வி.பார்த்தசாரதி

மனத்தில் தோன்றிற்று. அந்த நூறாவது புலியை, தமது தலைநகரில் ஊர்வலமாகக் கொண்டு வரும்படி கட்டளையிட்டு விட்டு, மகாராஜா மோட்டாரில் ஏறி விரைந்து முன்னால் சென்றார்.

அவர் போன பிறகு, மற்ற வேட்டைக்காரர்கள் புலியின் அருகில் சென்று பார்த்தார்கள். புலியும் கண்களைப் பேந்தப் பேந்த விழித்து அவர்களைப் பார்த்தது! புலி சாகவில்லை என்றும், அதன்மேல் குண்டே பாயவில்லையென்றும் அவர்கள் கண்டார்கள். குண்டு சமீபத்தில் போன அதிர்ச்சியினாலேயே, அது அப்படி மூர்ச்சையாகி விழுந்திருந்தது! வேட்டைக்காரர்கள் யோசனை செய்தார்கள். குண்டு தவறிப்போன செய்தி மகாராஜாவுக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால், தங்களுடைய உத்தியோகத்துக்கு ஆபத்து என்று அவர்கள்

தீர்மானித்தார்கள். அவர்களில் ஒருவன், புலிக்கு ஓர் அடி தூரத்திலிருந்து குறி தவறாமல் சுட்டு அதைக் கொன்று தீர்த்தான்.

பிறகு, மகாராஜாவின் கட்டளையின் படி, அந்தச் செத்த புலியை நகரில் ஊர்வலம் விட்டுக்கொண்டு போய்க் கடைசியில் அதைப் புதைத்து, சமாதியும் எழுப்பினார்கள்.

மேற்கூறிய விசேஷ சம்பவம் நடந்து சில தினங்களுக்குப் பிறகு, மகாராஜாவின்



குமாரனுக்கு மூன்றாவது பிறந்த தினக் கொண்டாட்டம் நடந்தது. இது வரையில் புலிவேட்டையிலேயே கவனமாயிருந்த மகாராஜா, பட்டத்து இளவரசனைப் பற்றிக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. இப்போது அவருடைய கவனம் குழந்தையின் மீது சென்றது. பிறந்த தினத்தன்று குழந்தைக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். பிரதிபந்தபுரம் கடைத் தெருவுக்குப் போனார். கடை கடையாகத் தேடியும் அவருக்கு ஒன்றும் கிடைக்க வில்லை. கடைசியில் ஒரு பொம்மைக் கடையில் ஒரு சின்ன மரப் புலியைப் பார்த்தார். ''இதுதான் சரியான பரிசு'' என்று உடனே தீர்மானித்துவிட்டார்.

அந்த மரப்புலியின் விலை இரண்டே காலணாதான். ஆனால், மகாராஜா கேட்கும் போது அவ்வளவு குறைந்த விலை சொன்னால், நிச்சயம் அவசரச் சட்டத்தின் கீழ் தண்டனை கிடைக்குமென்று தெரிந்த கடைக்காரன், ''மகாராஜா! இது ரொம்ப ரொம்பக் கலைத் திறமை பொருந்திய பொம்மை; விலை முந்நூறு ரூபாய்தான்!'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம்! யுவராஜாவின் பிறந்த தினக் கொண்டாட்டத்துக்கு இது உன்னுடைய காணிக்கையாய் இருக் கட்டும்'' என்று சொல்லிவிட்டு, மகாராஜா அதை எடுத்துச் சென்றார்.

யுவராஜாவின் பிறந்த தினத்தன்று, தகப்பனாரும் குழந்தையும் அந்தச் சின்னஞ் சிறு மரப்புலியை வைத்துக்கொண்டு விளையாடினார்கள். யாரோ பட்டிக் காட்டுத் தச்சன் செய்த பொம்மை அது. ஆகையால், அதன் மேலெல்லாம் சிலாம்பு சிலாம்பாய் நின்றது. மகாராஜா அதைக் கையில் வைத்துக்கொண்டு விளையாடிய போது, வலது கையில் ஒரு சிலாம்பு குத்தியது. இடது கையால் சிலாம்பைத் தட்டி எறிந்துவிட்டு, மகாராஜா மேலும் விளையாடிக் கொண்டிருந்தார்.

மறுநாள் சிலாம்பு குத்திய இடத்தில் சின்னக் கொப்பளம் புறப்பட்டது.

இரண்டு நாளையில் அது பெரிய சிரங்காயிற்று. நாலு நாளைக்கெல்லாம் கை முழுவதும் புரையேறிவிட்டது.

சென்னைப் பட்டணத்திலிருந்து பெரிய ஸர்ஜன்கள் மூன்று பேர் வரவழைக்கப் பட்டார்கள்.

அவர்கள் கூடி ஆலோசித்து, ''ஆபரேஷன் செய்ய வேண்டியதுதான்'' என்று தீர்மானித்தார்கள்.

ஆபரேஷன் நடந்தது.

மூன்று ஸர்ஜன்களும் ஆபரேஷன் செய்துவிட்டு வெளியில் வந்து, பின்வரும் செய்தியைத் தெரிவித்தார்கள்:

''ஆபரேஷன் வெற்றிகரமாய் நடந்தது; மகாராஜா காலமாகிவிட்டார்!''

இவ்விதமாக நூறாவது புலியானது கடைசியில், புலி ராஜாவின் மேல் வஞ்சம் தீர்த்துக்கொண்டது.



''பாகுபாடு பார்க்காதீர்கள்''

'மித்ரு மை ஃப்ரெண்ட்' படம் மூலம் அறிமுகமான ஒளிப்பதிவாளர் பவுசியா, பி.சி.ஸ்ரீராமின் மாணவி. அவர் பேசப் பேச காட்சிகளும் கூடவே நம் கண் முன்னே விரிகின்றன...

''ஒளிப்பதிவுங்கறது சூட்சும மான, புரியக்கூடாத ஒரு விஷய மல்ல; அது ஆத்மார்த்தமானது. ஒரு ரசிகனை மூணு மணி நேரம் வேற ஓர் உலகத்துல கட்டிப் போடறது. கதையை விட்டு வெளியே துருத் திக்கிட்டுத் தனியே தெரியறது நல்ல ஒளிப்பதிவுக்கு அழகல்ல. கதையைக் கட்டுக்கோப்பா நகர்த்தும் அசாத்திய மான ஒரு பாதிப்பை, பார்வை யாளனிடத்தில் ஏற்படுத் தணும்'' என்று ஒளிப்பதிவின் நேர்மையைச் சொல்லும் பவு சியா எதிர் கொண்ட சவால் கள் கொஞ்ச நஞ்சமல்ல.

''வீட்ல என்னோட சினி மாட்டோகிராஃபி ஆசைக் குப் பலத்த எதிர்ப்பு. ரொம் பப் போராடினேன். கடைசில 'போய்த் தொலை'ன்னு விட்டுட்டாங்க. பூனா இன்ஸ்டிடியூட்ல சேரப் போனா, அங்கேயும் பிரச்னை. நான் படிச்சப்போ பெண்கள், இந்த மாதிரி ஃபீல்டுக்கு வர்றது ரொம்ப அபூர்வம். அங்கே என்னை நேர்காணல் செஞ்சவங்க, 'ஏன் இந்த கோர்ஸுக்கு வந்து ஓர் ஆணோட வாய்ப்பைக் கெடுக் கறீங்க?'ன்னு கேட்டாங்க. இவங்களே இப்படிக் கேட்டப்போ, எனக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்துச்சு. இருந்தும், நான் ஓடிப்போயிடல. எனக்கான உரிமையை நான் போராடிப் பெற்றேன். முதல் வருஷம் படிக்கும்போதே பி.சி. சார்கிட்ட போய்ப் பேசினேன். உடனே வந்து ஜாயின் பண்ணிக்கச் சொன்னார். அப்புறம் கோர்ஸ் முடிச்சுட்டுப் போய்ச் சேர்ந்தேன். அவர் ஒரு ஜீனியஸ். வாழ்க்கையில் மறக்க முடியாத காலகட்டம்னா, அது அவரோடு பணி புரிஞ்ச காலம்தான். எங்களைக் குழந்தை மாதிரி பரிவா பார்த்துப்பார். அவருக்கு வந்த வாய்ப்பை, எனக்குத் தந்து ஒளிப்பதி வாளராக்கின தாயுள்ளம் அவருக்குரியது'' என்று மெய்சிலிர்த்த பவுசியா, ஒளிப் பதிவின் இருண்ட பக்கங்களையும் நம் மிடம் அலசத் தவறவில்லை.

''ஒளிப்பதிவாளருக்கு முதல் தேவை சுதந்திரம். அது இல் லைன்னா, எல்லாம் இருந் தும் வீண்தான். அடுத்து டைரக்டருடனான ரிலே ஷன்ஷிப். தாமரை இலைத் தண்ணீர் மாதிரி இருந்துட்டா, எல்லாம் போச்சு. நல்ல புரிதல் இருக்கணும். ஒவ் வொரு ஃப்ரேமுக்கும்



'என்னாலான பங்களிப்பை நான் தர்றேன். உன்னால முடிஞ்ச பெஸ்ட்டை நீ கொண்டு வா'ன்னு மெனக்கெடற பண்பு வேணும். 'நீ பெரியவனா... நான் பெரியவனா'ங்கற ஈகோ கூடாது. தயாரிப்பாளர் முக்கியம். எந்த விதத்திலும் நம்ம சண்டையால அவர் பாதிக்கப்பட்டுடக் கூடாது. இப்படி எதுவும் இல்லாட்டாலும் ஆண், பெண்ணுன்னு பிரிச்சுப் பார்க்கக்கூடாது. ஒளிப்பதிவு தரமா இருக்கா, நேர்மை இருக்கா, வேகம் இருக்கான்னுதான் பார்க்கணும். இந்த விஷயங்களைச் சரிசெஞ்சுக்கிட்டாலே, இங்க நடக்கற பெரும்பாலான டைரக்டர்கள் - ஒளிப்பதிவாளர்கள் சண்டைகளெல்லாம் காணாமல் போயிடும்'' என்றவர், தமிழ் சினிமா ஒளிப்பதிவின் தரத்துக்குத் தாவினார்.

''ஆங்கிலப் படங்களுக்கே சவால் விடக்கூடிய அளவுக்கு, நம்ம தமிழ்ப்பட ஒளிப்பதிவின் தரம் உயர்ந்திருக்கு! இந்திப் பட உலகத்தை, நம்ம ஆட்கள் ஆக்கிரமிச்சிருக்கறது பெருமைக்குரிய விஷயம். அதுலயும் ஆரோக்கியமானது, ஒரு டைரக்டராவும் பரிணமிக்கற ஒளிப்பதிவாளர்களின் திறமை! இவங்கள்ல முன்னணில இருந்த ஜீவாவை நாம இழந்தது துரதிர்ஷ்டவசமானது.''

சரி, முதல் பட இயக்குநர்களிடமே பவுசியா அதிகம் பணி புரிவது ஏன்?

''எனக்கு அப்படிப் பட்ட வாய்ப்புகள்தான் வருது, பண்றேன். பெரிய ஆர்ட்டிஸ்ட், இயக்குநர்கள் படமெல்லாம் யாராவது வேண்டாம்னு சொல்வாங்களா? நம்பிக்கை வைச்சு தேடி வர்றவங்களுக்கு உண்மையா இருக்கேன். அவங்களோட ஸ்கிரிப்ட்டுக்கு நேர்மையா உழைக்கறேன். 'பவுசியாவால ஒரு படம் பாதியில நின்னுபோச்சு'ன்னு என்னிக்கும் யாரும் சொல்லக் கூடாதுங்கறதுல உறுதியா இருக்கேன். பிடிச்ச வேலை, காதல் திருமணம், அழகான குழந்தைன்னு வாழ்க்கை அமைதியா போயிட்டிருக்கு. கணவரும் சினிமா சார்ந்த நபர்ங்கறதால, என்னால என் வேலையை எந்த எல்லைல நின்னும் இயல்பாவும் சுயமாவும் செய்ய முடியுது'' என்றவர், தூக்கம் கலைந்து எழுந்துவிட்ட தன் குழந்தையைக் கொஞ்சியபடி நமக்கு விடை கொடுத்தார்.

– மு.மாறன்

படங்கள் : பொள்ளாச்சி சுந்தரம்



ஒளிப்பதிவாளர் பவுசியா பேட்டி

எங்களாலும் தரமான கல்வி கொடுத்து, பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி.) பொதுத்தேர்வில், நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெற வைக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறது ஒரு மாநகராட்சி உயர் நிலைப்பள்ளி. அதுவும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள்! என்ன வாயைப் பிளக்கிறீர்களா? வாருங்கள் வட சென்னைக்கு.





* மேயர் மா.சுப்பிரமணியன்

* தணிகைவேலு



காட்சி - 1

குடிசை மற்றும் ஓட்டு வீடுகளில் வசிக்கும் மூட்டை தூக்கும், ரிக்ஷா ஓட்டும் குடும்பத் தலைவர்கள் உடல் வலியில் அசதியில் உறங்கிக்கொண்டிருக்க, அவர்களின் பிள்ளைகள் குளித்து முடித்து, அவசர அவசரமாக மாநகராட்சிப் பள்ளிக்குக் கிளம்பத் தயாராகிறார்கள். அருகில் உள்ள அனாதை காப்பகத்திலிருந்தும், மாணவிகள் பள்ளிச் சீருடையோடு புறப்பட்டு, இவர்களுடன் இணைகிறார்கள்.

காட்சி - 2

ஞாயிற்றுக்கிழமை - எல்லோரும் வெளியில் விடுமுறையைக் குதூகலமாய் அனுபவிக்க, வகுப்பறையில் மாணவ-மாணவிகள் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். தலைமையாசிரியர், சக ஆசிரியைகளிடம் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உணவு குறித்து விசாரித்துக்கொண்டிருக்கிறார். உணவுக்கு முன் அளிக்க வேண்டிய டீ மற்றும் ரொட்டியை, மாநகராட்சி அதிகாரிகள் முதலிலேயே அளித்துவிட்டதாகவும் இனி மதிய உணவுக்கான ஏற்பாடு நடந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

காட்சி - 3

மாலை நேரம் - பெரும்பான்மையான மாணவர்கள் வெளியேறிய பின்பும், சில பாடப் பிரிவுகளில் பலவீனமாயிருக்கும் மாணவர்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ்க்கான வகுப்பு துவங்குகிறது.



நூற்றுக்கு நூறு

வாவ் வடசென்னை!

காட்சி - 4

தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. பள்ளி நிர்வாகம் சந்தோஷத்தில் திளைத்து உள்ளது. மாணவ-மாணவிகள் மகிழ்ச்சி வெள்ளத்திலிருக்க...

தலைமையாசிரியர், 24 பேர் எழுதிய பத்தாம் வகுப்புத் தேர்வில், அனைவரும் தேர்ச்சி பெற்றதாகவும் நூறு சதவிகித வெற்றியெனவும் அறிவிக்கிறார். கரகோஷம் விண்ணை முட்டுகிறது.

காட்சி - 5

சென்னை மாநகராட்சி மேயர் மா.சுப்ரமணியன்:

"மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகக் கேள்வி வங்கி, தீர்வு காணப்பட்ட கேள்வி மட்டுமின்றி, நோட்டு, புத்தகங்கள், சீருடை போன்றவற்றை அளித்தோம். விசேஷ அக்கறையும் எடுத்துக்கொண்டோம். பள்ளி ஆசிரியைகளின் தீவிரமான முயற்சியில் அனைத்து மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இப்பள்ளிக்கு கணினி மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்பட உள்ளது'' என்று தமது கருத்தைப் பகிர்ந்துகொள்கிறார்.

காட்சி - 6

இந்தச் சாதனையை, தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக நிகழ்த்தியிருக்கும் வடசென்னை வால்டாக்ஸ் சாலையிலிருக்கும் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியை, காமராவில் 'ஜூம்' செய்து, மகிழ்ச்சியில் 'க்ளிக்' கிட, ஒரு 'சல்யூட்'டோடு படப்பிடிப்ட முடிகிறது.

– ஸ்ரீநி

படங்கள் : ராஜன்



ச.ந.கண்ணன்



நீயா...

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக ஆடிய கோனி, இந்திய ஏ அணிக்காகத் தேர்வானபோது, எதற்குத் தலையைச் சுற்றி மூக்கைத் தொடவேண்டும். நேராக இந்திய அணியில் நுழைந்துவிட வேண்டியதுதானே என்று எண்ணத் தோன்றியது. சரியாக, ஸ்ரீசாந்த் காயத்தில் மாட்டிக்கொள்ள, கோனிக்குக் கதவு திறக்கப்பட்டுவிட்டது. முன்பு ஒருமுறை, பாகிஸ்தான் டூரின்போது ஆசிஷ் நெக்ரா காயமடைந்ததால், இர்பான் பதானுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதேபோல ஷாகிர்கான் உடல் நலத்தில் பின் தங்கியதால், இஷாந்த் சர்மா இந்திய அணிக்குள் நுழைந்தார். இதே பாணியில் இப்போது கோனிக்கும் வாய்ப்பு மலர்ந்துள்ளது. மனிதர் ஐ.பி.எல்.-லில் பந்து வீசிய தைப் பார்க்கும்போது, இந்திய அணிக்கு ஒரு மெக்ராத் கிடைத்துவிட்டார் என்றே வாழ்த்தத் தோன்றியது.

ஷாகிர் கான், இர்பான் பதான், ஆர்.பி. சிங், ஸ்ரீசாந்த், இஷாந்த் சர்மா, பிரவீன்குமார் கோனி... என 80களில் மே.இ.தீவு அணி வேகப்பந்து வீச்சில் எப்படி அசுரபலத்துடன் இருந்ததோ, அதுபோன்றதொரு தோற்றத்தைத் தருகிறது இந்திய வேகப் பந்து வீச்சு அணி. ஜவகல் ஸ்ரீநாத்தின் ஓய்வுக்குப் பிறகு, அகர்கரை விட்டால், மாற்று பௌலர் எவரும் கிடையாது என்றொரு மந்தநிலைதான் நீடித்து வந்தது. ஆனால், கண்மூடிக் கண் திறப்பதற்குள் மளமளவென கடந்த இரண்டு வருடங்களில் அரை டஜன் பௌலர்களை (அதுவும் நல்ல தரத்துடன்) உற்பத்தி செய்துவிட்டது இந்திய அணி. இதில் முக்கியப் பங்கு வகித்த எம்.ஆர்.

எஃப் வேகபந்து வீச்சு அகாதமியையும் மறக்காமல் பாராட்ட வேண்டும்.

டென்னிஸில் ரஃபேல் நடாலுக்கும் ரோஜர் ஃபெடரருக்கும் இடையே நடக்கும் போட்டிகள் ஒவ்வொரு முறையும்




நானா..?

வெகு சுவாரசியத்தை உண்டு பண்ணுகின்றன. இவர்கள் இருவரும் ஆடினால்தான், டென்னிஸ் ஒளிபரப்புகளின் டி.ஆர்.பி. ரேட்டிங் உயரத்தைத் தொடுகிறது. இந்த முறை நடந்த ப்ரெஞ்ச் ஓப்பன் போட்டியில், ஃபெடரரை இலவம் பஞ்சுபோல ஊதித் தள்ளிவிட்டார் நடால். உன்னை விம்பிள்டனில் பார்த்துக்கொள்கிறேன் என்று, காயம்பட்ட ஃபெடரர் கர்ஜனை செய்தது இன்னும் சுவாரசியம். இது நடாலின் நான்காவது தொடர்ச்சி பிரெஞ்ச் ஓப்பன் பட்டம். விம்பிள்டனைப் பொறுத்தவரை, பெடரர்தான் அங்கு ராஜா. தொடர்ச்சியாக ஐந்து முறை பட்டம் வென்றிருக்கிறார். ஐந்து முறை விம்பிள்டன் பட்டத்தைத் தமதாக்கிக்கொண்ட முன்னாள் வீரர் ஜான் போர்க், 'இந்தமுறை நடால்தான் விம்பிள்டனை வெல்வார்' என்று கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்கிறார். இதுவரை இவருவரும் 17 முறை மோதியதில் பதினொரு முறை ஃபெடரருக்குத் தண்ணி காட்டியிருக்கிறார் நடால். அதுவும் கடைசியாகப் போட்டியிட்ட மூன்று போட்டிகளிலும் நடாலின் கைதான் ஓங்கியிருந்தது. என்ன செய்து நடாலின் கொட்டத்தை ஃபெடரர் அடக்குவார் என்று புரியவில்லை.

ஒலிம்பிக் ஜுரம் அனலாக உலகமெங்கும் அடித்துக்கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால், நேற்றுவரை நீயா - நானா விளையாட்டு ஆடிக்கொண்டிருந்த லியாண்டர் பெயஸும் மகேஷ் பூபதியும் ஒரே ராத்திரியில் கைகுலுக்கி அறிக்கை விட்டிருக்கமாட்டார்கள். அஞ்சு ஜார்ஜ் மீது பெரிதாக நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று, அவருடைய சமீபத்திய போட்டிகள் கூறுகின்றன. ஆனால், ஒருவர் மட்டும் அதிக நம்பிக்கைக் கொடுக்கிறார். அவர்தான் எந்தச் செய்தியிலும் அடிபடாத, டீ.வி.யில் தினமும் முகம் காட்டாத விஜேந்தர் சிங் என்னும் குத்துச் சண்டை வீரர். சென்ற ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற கஜகஸ்தான் வீரரை சமீபத்தில் வென்றுள்ளார் விஜேந்தர்சிங்!

* கோனி



கண்ணனைத் தேடி...

திருக்குருகூர் ஆதிநாத பெருமாள் கோயிலின் நவராத்திரி மண்டபத்தில் நிகழும் உத்ஸவ விசேஷம் பற்றி போன வாரம் பார்த்தோம். இந்தக் கோயிலில் இருக்கிற பல்வேறு மண்டபங்களிலும் அப்படிப்பட்ட சிறப்புகள் நடக்கும். மங்களா சாஸன மண்டபத்தில், வைகாசி உத்ஸவத்தின்போது மிகக் கோலாகலமாக இருக்கும். திருக்குருகூரைச் சுற்றி அமைந்துள்ள நவ திருப்பதி எம்பெருமான்களும் இங்கே வருவார்கள். ஐந்தாம் திருநாளன்று அவர்கள் இவ்வூருக்குள் பிரவேசிக்கிறபோது, நம்மாழ்வாரே அவர்களை முகமன் கூறி வரவேற்பார். அவர் சன்னிதியிலேயே இந்த பெருமான்கள் ஒவ்வோர் இடத்தில் முதலில் இருப்பர். மதியம் எல்லாருக்கும் திருமஞ்சனம்-அபிஷேகம்-நடக்கும். இரவு பதினொரு மணி அளவில் ஒவ்வொரு எம்பெருமானும் கருட வாகனத்திலே ஸேவை சாதிப்பர். ஆழ்வார் சன்னிதியின் பெரிய வாசல் கதவுகள் திறக்கப்பட, கருட ஸேவையோடு எம்பெருமான்கள் ஒவ்வொருவராக வெளியிலே வருவார்கள். ஒன்பது (நவதிருப்பதி) எம்பெருமான்களும் வீதி வலம் வர, நம்மாழ்வார் ஹம்ஸ வாகனத்திலே எழுந்தருளுவார். மதுரகவியாழ்வார் தந்தக் குரிசில் என்கிற தந்தம் இழைத்த நாற்காலியில் வருவார். பதினொரு பேரும் இரவு முழுவதும் புறப்பாடு கண்டருள்வது, கண் கொள்ளா காட்சியாக இருக்கும்! விடியற்காலை ஐந்து-ஆறு மணி வரை இது நடக்கும். பிறகு மறுபடியும் இந்த மங்களாசாஸன மண்டபத்துக்கு எல்லோரும் வருவார்கள். ஆழ்வார் ஒரு சிறு தோளுக்கினியானிலே (பல்லக்கு) இருப்பார். ஒவ்வொரு பெருமாளாக விடை கொடுத்து அனுப்புகையில், அந்தந்த பெருமான் மீது அவர் பாடிய பாசுரத்தை அரையர் ஸ்வாமிகள் தாளம் இசைத்துப் பாடுவார். பாடலைப் பெற்றுக்கொண்டு, ஒவ்வொரு பெருமாளாக சன்னிதி தெரு வழியே திரும்ப தமது திருப்பதிக்குச் செல்வார்கள்.

எல்லோரையும் வழியனுப்பிவிட்டு, சிறிய தோளுக்கினியானில் நம்மாழ்வார் தம்முடைய ஆஸ்தானத்துக்குள்ளே எழுந்தருள்வார்.

இப்படியாக ஒன்பது திருப்பதி எம்பெருமான்களும் வந்து பாடலைப் பெற்றுக்கொண்டு போகிறார்கள் என்றால் நம்மாழ்வார் எவ்வளவு பாக்கியம் பண்ணியிருக்க வேண்டும்! ஒரு பக்தனுக்காக பெருமான் தேடி வருவது என்பது சாமானியமாக நடக்கக்கூடியதா! அப்பேர்ப்பட்ட மகாஞானி, பரம பக்தர் நம்மாழ்வார்!




பெருமையும் எளிமையும் கலந்து பொலிபவன்!



வேளுக்குடி
ஸ்ரீ க்ருஷ்ணன்
சுவாமிகள்

நம்மாழ்வாருடைய அவதாரம் சாமானியமானதல்ல. கலியுகத்தினுடைய ஆரம்பத்தில், அதாவது சுமார் 5108 ஆண்டுகளுக்கு முன்பு, வைகுண்டத்திலே ஓர் உரையாடல் நடந்தது. ஸ்ரீமன் நாராயணப் பெருமான் பக்கத்திலே நாச்சிமார்களும், ஆதிசேஷனும் இருக்க, நடுவிலே பேசிக்கொண்டிருந்தார். ''நீங்கள் கீழே பூலோகத்திலே போய்ப் பிறக்க வேண்டும்'' என்றார் பகவான். ''வேதத்தைத் தமிழாக்கி, திவ்யப் பிரபந்தங்கள் எனும் அருளிச் செயலாகப் பாடுவிக்க வேண்டும் என்று சங்கல்பித்திருக்கிறேன். முதலில் ஸேனை முதலியார் (விஷ்வக்ஸேனர் - நித்ய சூரிகளின் தலைவர்) சடகோபனாகப் பிறக்க வேண்டும்'' என்றார். ஆதிசேஷனைப் பார்த்து, ''ஒரு புளியமரமாய்ப் பிறக்க வேண்டும்'' என்றார். அருகிலேயிருந்த கருடனைப் பார்த்து மதுர கவி ஆழ்வாராகப் போய்ப் பிறந்து,



ஆழ்வாரின் (சடகோபன்) சிஷ்யராகி, அவர் பெருமைகளையும் அவரது திவ்யப்பிரபந்தங்களையும் உலகம் முழுக்கப் பரவச் செய்ய வேண்டும்'' என்றார்.

பகவானின் சங்கல்பத்துக்கு இலக்கான இவர்கள் **அவன்** தேர்ந்தெடுத்த திருக்குருகூரில் அவதரித்தார்கள். ஆகவே எம்பெருமானே தேர்வு செய்த திவ்ய தேசம் இது. குருகூர்ச் சடகோபன் என்றே நம்மாழ்வாருக்குப் பெயர். திருக்குறுங்குடி நம்பியின் அவதாரமாகவே இவர் பிறந்தார் என்று பார்த்தோம். ஸேனை முதலியாருடைய அம்சம் என்றும் சொல்லலாம்.

நம்மாழ்வாருக்கு வராஹ மூர்த்தியினிடத்திலே தனி ஈடுபாடு உண்டு. இதைத் திருவிருத்தம் கடைசியில் ஒரு பாசுரத்தில் தெரிவிக்கிறார்:

இரும் கற்பகம் சேர் வானத்தவர்க்கும்
அல்லாதவர்க்கும் மற்றெல்லா
எவர்க்கும்
ஞானப் பிரானை அல்லால் இல்லை
நான் கண்ட நல்லதுவே.

- 'இதோ இந்த ஞானப் பிரானை அல்லது எனக்கு மற்றொரு நல்லது தெரியாது!' என்கிறார். திருக்குருகூரில் இந்த ஞானப்பிரானாகிற வராஹ மூர்த்திக்குத் தனிச் சன்னிதி இருக்கிறது. இவ்வூர் நாச்சியாரான ஆதி நாச்சியாருக்கும் தனிச் சன்னிதி.

திருக்குருகை என்று பெயர் வருவதற்கு ஒரு சுவையான காரணம் இருக்கிறது. பிரம்மா, பல ஆண்டுகள் இங்கே இருந்து கொண்டு தவம் புரிந்தார். பெருமானும் சந்தோஷப்பட்டு பிரம்மாவுக்குக் காட்சி





யளித்து, ''அர்ப்பணம் குரு'' (எனக்கு அர்ப்பணம் செய்வாய்) என்று பிரம்மாவைத் தூண்டிய இடம் இது. 'குரு' என்றது குருகூர் ஆயிற்று.

தாந்த க்ஷேத்திரம் என்றும் இதற்குப் பெயர். வட தேசத்தில், சாளக் கிராமம் என்ற இடத்தில் தாந்தன்

என்பவன் வேதம் பயின்று கொண்டிருந்தான். அவனை எல்லோரும் 'மந்தன்', 'மந்தன்' என்று ஏசி வந்தார்கள். அவன் மறுபடியும் பிறந்து தாந்தன் என்ற பெயருடன் வாழ்ந்தபோது, ''பொருணையாற்றங்கரையிலே ஆதிநாதப் பெருமாளைத் தொழுது வா. ஞானம் உண்டாகும்'' என்று ஒரு மஹான் அனுக்ரஹித்தார். அதன்படி தாந்தன் இவ்வூருக்கு வர, இங்கேயும்



✱ திருக்குருகூர் திருப்புளியாழ்வார்

அவனை ஏசினார்கள். ஏசியவர்களுக்கெல்லாம் ஏதேதோ இன்னல்கள் ஏற்பட, கடைசியாக தாந்தனுடைய பெருமையை உணர்ந்து, ஊர் மக்கள் அவனுக்கு மரியாதை செலுத்தினார்கள்.

ஆகவே, ஞானத்தை வழங்கக்கூடிய திவ்ய தேசம் இது. பிறவியிலேயே ஞானம் பெற்ற சடகோபரின் அவதார திருத்தலம் அல்லவா!

சடம் என்பது ஒரு வாயு - காற்று. ஒவ்வொரு குழந்தையும் தாயின் கர்ப்பத்திலே இருக்கிறபோது ஞானம் படைத்ததாகத்தான் இருக்குமாம். (இதை பாகவதத்தில் சுகாசார்யாரும் விஷ்ணு புராணத்தில் பராசர மஹரிஷியும் சொல்கிறார்கள்). இந்தக் குழந்தை, கருவில் இருக்கையில் பகவானிடம் வேண்டிக் கொள்ளுமாம்: ''எனக்குப் பிறவியைக் கொடுத்துவிடாதே! உன் திருவடிகளைக் கொடுத்தருள்'' என்று இரைஞ்சுமாம். ஆனால், கர்ப்பத்திலிருந்து வெளியிலே வருகிறபோது சடம் என்கிற

பிரம்மா, பல ஆண்டுகளாக இங்கே இருந்து தவம் புரிந்ததால் இத் தலத்துக்கு திருக்குருகை என்று பெயர் வந்தது.

வாயு போய் அதைச் சூழ்ந்துகொண்டுவிட, இந்த அறிவு (பகவானை அடையும் வேகம்) மழுங்கிப் போய்விடுமாம்!

ஆனால், நம்மாழ்வார் தமது தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவருகிறபோது இந்த 'சடம்' என்கிற வாயுவைக் கோபித்து உதறித் தள்ளினார்! ஆகையால் அவருக்குச் சடகோபன் என்று பெயர் அமைந்தது. அவர் அருளிய திவ்யப்பிரபந்தங்களை நாம் அனுபவித்துப் பாடும்போது நாமும் 'சடம்' என்கிற வாயுவை உதறித் தள்ளிவிட்டுப் பெருமாள் திருவடிகளைப் பெறலாம் என்பது உயர்ந்த கருத்து.

அந்தப் பாசுரங்களில் ஒன்று,

'அரியும் செந்தீயைத் தழுவி,

அச்சுதன் என்று மெய் வேவாய்
மண்ணை இருந்து துழாவி...
வாமனன் மண் இது என்னும்....'

என்பதாக அமைந்திருக்கிறது!

இந்தத் திருக்குருகூரில் அமர்ந்திருக்கிற ஆழ்வார், இந்த பூமி மண்ணை எடுத்துத் துழாவுகிறார். 'இது நம் ஊர் மண்' என்றே அவருக்குத் தோன்றவில்லை! 'வாமன மூர்த்தி, திரிவிக்கிரமனாக வளர்ந்து, தம்முடைய திருவடித் தாமரைகளாலே அளந்த மண்ணல்லவா இது!' என்று பாடுகிறார்!

என்றைக்குத் திரிவிக்கிரமாவதாரம்? என்றைக்கு ஆழ்வார் இருக்கிறார்?! ஆனால் அவருக்கு இது வாமனனுடைய மண் என்றுதான் தோன்றுகிறது! நமக்கோ மண்ணைப் பார்த்தால் அதை வாங்கலாமா? வீடு கட்டலாமா? எத்தனை ஏக்கரைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்றுதான் தோன்றும்! ஆனால் இது வாமனனுடைய மண் என்று தோன்றிவிட்டால், நம்முடையது என்கிற பேச்சுக்கு இடமேது!

இதைத்தானே வேதங்களும் கூறுகின்றன! அறிவையும் புலன்களையும் மனத்தையும் பகவானிடத்திலே செலுத்தச் சொல்கின்றன. ஆனால், வேதங்கள் பெருமானுடைய பெருமையை எடுத்துரைக்கின்றன. 'அவன் மிகப்பெரியவன், பராத்பரன், எட்டாதவன், எங்கோ உயரத்தில் இருக்கிறவன்' என்றெல்லாம் சொல்கின்றன. ஆழ்வாருடைய பாசுரங்களோ, அவன் மிக உயர்ந்தவன் என்று மட்டும் சொல்லி நிறுத்திவிடுவதில்லை. அவன் எளியவன்; அடைவதற்கு இலகுவானவன் என்றும் எடுத்துரைக்கின்றன:

பற்றுடை
அடியவர்க்கு
எளியவன்
பிறர்களுக்கரிய
வித்தகன்


- 'யாருக்கெல்லாம் பக்தி இருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் எளியவனாக இருக்கிறான்; பக்தி அற்றவர்களுக்கோ அரியவனாக இருக்கிறான்' என்று ஆழ்வார்கள் நமக்கு வேத மார்க்கத்தைச் சுலபமாக்கிக் கொடுத்தார்கள். வடமொழி வேதம் திருமாலை 'மிகப் பெரியவன்' என்று சொல்ல, தென்மொழி வேதம் (பிரபந்தங்கள்) அவனை எளியவன் என்று சொல்லும்.

பெருமையும் எளிமையும் கலந்திருக்கின்ற ஒரு தத்துவம் தானே பரப்பிரம்மம்!

(தேடுவோம்)



'வாமன மூர்த்தி, திரிவிக்கிரமனாக வளர்ந்து தம்முடைய திருவடித் தாமரைகளாலே அளந்த மண்ணல்லவா இது!'

* சத்திய சிந்தனை!

● ஜி.மாரியப்பன், சின்னமனூர்

? வடிவேலு அளவுக்கு விவேக்கின் காமெடி தற்போது எடுபடவில்லையே?

! அறியாமையை வெளிப்படுத்துவதில் வடிவேலுவும், அறிவை வெளிப்படுத்துவதில் விவேக்கும் குறியாக இருக்க, அறிவு நம்மைச் சிரிக்க வைப்பதைக் காட்டிலும் அறியாமைதானே அதிகம் சிரிக்க வைக்கும்!

● எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? பெட்ரோல் - டீசல் விலையையும் காஸ் சிலிண்டர் விலையையும் கடுமையாக உயர்த்திய மத்திய அரசு, கெரஸின் விலையை ஏற்றாமல் ஏழைகளுக்கு உதவியிருப்பது பாராட்டுக்குரியது தானே?

! ஆணி வேரில் ஆஸிட்டை ஊற்றிவிட்டு, 'செடியைக் காப்பாற்ற பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கிறோம்'னு சொல்றாப்ல இருக்கு மத்திய அரசின் போக்கு. பெட்ரோல் - டீசல் விலையை ஏத்திட்டா, சமையலுக்குத் தேவைப்படும் எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறிடும். அப்புறம் கெரஸின் விலை மட்டும் கம்மியாக இருந்து என்ன பிரயோஜனம்?

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? குஜ்ஜர்கள் போராட்டத்தின்போது சேதப்படுத்தப்பட்ட ரயில் பாதைகளை, தாங்களே சரி செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார்களே. இந்தப் பண்பு எல்லாப் போராட்டக்காரர்களுக்கும் வருமா?

! 1) இதைப் பண்பு என்று ஒப்புக்கொள்வது கடினமாக இருக்கிறது. 2) வன்முறையில் இறங்காமல் போராடியோ, பேச்சுவார்த்தை நடத்தியோ ஜெயித்துக் காட்டுவதே பண்பு. 3) ரயில் பாதைகளை அமைப்பது இன்ஜினியர்களின் வேலை. அதை விவரமறியாத குஜ்ஜர்கள் செய்வது பயணிகளுக்கு ஆபத்து. 4) அவர்கள் செய்

கிருஷ்ணர் வடிவில் என்.டி.ஆர். சிலை வைக்கலாமா?



* பிழைத்த கிருஷ்ணர்!





★ போதிக்கும் பொறுமை!

★ பிரச்னை பெரிது!

பக்கூடியது, ரயில்வேக்கு நஷ்டஈடு தருவது தான்.

● வெ.நா.சிவகுமார், சென்னை - 33

? 'நாம் பொறுமையாக இருக்க வேண்டும். இன்னும் நான்கு மாதங்களில் பண வீக்கம் குறைந்துவிடும்' என்று திட்டக் குழு துணைத் தலைவர் மான்டெக்சிங் அலுவாலியா சொல்கிறாரே?

! 'சல்லடையில் நீரைக்கூட எடுத்துச் செல்லலாம் - அது ஐஸ் கட்டியாக மாறும் வரையில் பொறுமை இருந்தால்' - எங்கோ கேட்ட தூர தேசத்துப் பழமொழி!

● எஸ்.வி.பக்கிரிசாமி, திருவாரூர்

? ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை, கர்நாடகா மாநில அரசு தடுத்து நிறுத்த முடியாது என்று, தமிழக பா.ஜ.கவினர் முந்திக்கொண்டு அறிக்கை விடுகின்றனரே?

! தேசியக் கட்சியானாலும் மாநிலங்களைக் கைப்பற்ற, வெவ்வேறு டயலாக் பேச வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது பா.ஜ.க!

● அனன்யா, திருச்சி

? கர்நாடகாவில் நிலம், நீர், மொழியைப் பாதுகாப்பேன் என்கிறாரே எடியூரப்பா?

! கூடவே, மனித நேயம், நட்புணர்வு, தேசிய நோக்கு ஆகியவற்றையும் பாதுகாத்தால் நன்றாக இருக்கும்.

★ அறியாமைத் தெறிப்பு!



● எஸ்.வெங்கடரமணன்,
சென்னை - 33

? தன்னுடைய சிலையைத் தானே திறந்து வைத்த உ.பி. முதல்வர் மாயாவதி, அது உயரம் குறைவாக இருப்பதால் அகற்றிவிட்டு, அதே இடத்தில் வேறு பெரிய சிலை வைக்க உத்தரவு போட்டுள்ளாராமே?

! நீலன் சிலைகூட சென்னையில் பெரிதாகத்தான் இருந்தது. அதைவிடப் பெரிதாக ஸ்டாலின் சிலை மாஸ்கோவில் இருந்தது. ஸத்தாம் ஹுஸைனின் சிலை, பாக்தாதில் பிரம்மாண்டமாக இருந்தது.

● க.வேடியப்பன்,
கும்மிடிப்பூண்டி ★

? பக்குவம் என்பது வயதால் வருவதா... தொழிலால் வருவதா?

! வாழ்க்கை நமக்குக் கற்றுத் தரும் பாடத்தால் வருவது. சிலர் இந்தப் பாடத்தைப் பதினாறிலேயே கற்பதுண்டு. சிலர் அறுபதிலும் அறியாமல் போவதுண்டு.

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:
டி.குமரேசன், மும்பை - 17

● அகிலா அன்புமணி, ஈரோடு

? பத்தாம் வகுப்புத் தேர்வுகளில், ஏராளமான மாணவர்கள் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளது, தமிழகத்தில் கல்வித்தரம் உயர்ந்துள்ளதைக் காட்டு



● பிராந்திய தேசியம் !

கிறதா? அல்லது பெற்றோர்களின் கூடுதல் ஆர்வத்தைக் காட்டுகிறதா?

! புதிய தலைமுறை குழந்தைகளின் அறிவாற்றல் பலப்படுவதைக் காட்டுகிறது.

● எஸ்.சாந்தி, காட்பாடி

? கிருஷ்ணர் வடிவில் என்.டி..ஆர். சிலை விசாகப்பட்டினத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது பற்றி...?

! நல்லவேளை, என்.டி..ஆர். வடிவில் கிருஷ்ணர் சிலையை வைக்காமலிருந்தார்களே, அதற்காக நன்றி! அந்த அளவில் புத்திசாலிகள்தான்!

● எஸ்.ராகவன், சென்னை - 87

? 'கணவர் அடித்தால் திருப்பி அடியுங்கள்' என்ற மகளிர் ஆணையத் தலைவி ராமாத்தாள் கூற்று குறித்து...?

! அடி ஆத்தே! இப்படியா பேசுறது? 'மறு கன்னத்தைக் காட்டி காத்திருக்கா தீங்க; உங்க சுய கௌரவத்தையும் பொருளாதாரத்தையும் பாதுகாத்துக் கொள்ள மகளிர் ஆணையத்தை நாடுங்க!' என்று சொல்லியிருந்தால் அர்த்தமுள்ளதாக இருந்திருக்குமே!

● டி.குமரேசன், மும்பை - 17

? கடவுள் மறுப்பைக் கொள்கையாகக் கொண்ட கழகங்களில், அதைப் பின்பற்ற யார் இருக்கிறார்கள்?

! கழகத்தினர் கடவுளை மறுத்தாலும்



● பாதுகாப்புப் பிரகடனம்!

'ஞாயிறு போற்றுதும்' என்று சொல்பவர்களை கடவுள் மறுக்க மாட்டார்!

● எஸ்.வி.கீர்த்தனா, ஈரோடு - 11

? வாழ்க்கையில் பிரபலமடைந்த ராஜாஜி, மகாத்மா காந்தி ஆகியோரின் கையெழுத்து மோசமாக இருக்குதாமே?

! கையெழுத்து மோசமாக இருந்திருக்கலாம்; ஆனால், சிந்தனையில் தெளிவும் சத்தியமும் இருந்தன. அதனால்தான், அடிமை நாட்டின் தலையெழுத்தையே அவர்களால் மாற்றி அமைக்க முடிந்தது!

● அறிவுத் திரிப்பு!



★ ரூ.50/- பரிசு பெறுபவர்:
க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி

ப்ரிஸ்கிரிப்ஷன்

● என்னுடைய உறவினருக்குக் கடும் தலைவலி ஏற்பட்டதைத் தொடர்ந்து மருத்துவமனையில் CSF Test என்ற ஒன்றைச் செய்தார்கள். இதற்காக முதுகுப் பகுதியிலிருந்து ஒரு திரவத்தை எடுத்துச் சோதனை செய்தார்கள். இது என்ன திரவம்? எதற்காக இந்தச் சோதனை?

- சண்முகவேல், திருச்சி

நரம்பியல் நிபுணர் டாக்டர் நடராஜன் :

Cerebro Spinal Fluid என்பதன் சுருக்கம்தான் CSF. மூளையைச் சுற்றியுள்ள உறையின் பெயர் 'மெனின்ஜிஸ்'. இங்கு பாதிப்பு ஏற்படுவதைத்தான் 'மெனின்ஜைடிஸ்' என்கிறோம். இந்த உறைக்குள் ஒரு திரவம் சுற்றிக்கொண்டிருக்கிறது. உறைக்குத் தேவையான சத்துக்களை அளிப்பது இதுதான். தவிர தலையில் அடிபட்டால், மூளையைக் காப்பாற்றுவதில் மண்டை ஓட்டுடன் இணைந்து செயல்படுவதும் இந்தத் திரவத்தின் முக்கிய பணி.

● டாக்டர் நிகிலா ஷர்மா



இந்தத் திரவம் முதுகில் உள்ள தண்டுவடத்தைச் சுற்றியும் வருவதால், அங்கிருந்து அதை எடுத்துச் சோதனை செய்வோம். இதன்மூலம் மெனின்ஜிஸ் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா? இந்தப் பாதிப்பு பாக்டீரியாவாலா வைரஸாலா? என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

மெனின்ஜிஸ் பாதிப்பும், கடும் தலைவலிக்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்பதால், இந்தச் சோதனையைச் செய்யச் சொல்லி இருப்பார்கள்.



● என் இரண்டு வயதுக் குழந்தைக்குக் காய்ச்சல் அவ்வப்போது உண்டாகிறது. டாக்டரிடம் அழைத்துச் செல்லும் போது காய்ச்சல் இருப்பதில்லை. ஆனால், வீட்டுக்கு வந்த கொஞ்ச நேரத்தில் காய்ச்சல் வருகிறது. அப்படியானால் டாக்டரால் எப்படிச் சரியான மருந்துகளைக் கொடுக்க முடியும்?

- தேவகி, பூண்டி

தெர்மாமீட்டர் ப்ளீஸ்!

குழந்தை நல மருத்துவர் டாக்டர் நிகிலா ஷர்மா:

முதலில் ஒரு தெர்மாமீட்டரை வாங்கி வைத்



துக்கொள்ளுங்கள். குழந்தைக்குக் காய்ச்சல் வந்தவுடனேயே உடனடியாக டாக்டரிடம் போக வேண்டும் என்பது அவசியமல்ல. ஆனால், ஓரிரு நாட்களுக்கு ஒவ்வொரு வேளையும் காய்ச்சல் நிலையை தெர்மாமீட்டர் மூலம் கணித்து குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

காய்ச்சலுக்கான பாரசிடமால் மருந்தை (திரவ வடிவத்தில் கிடைக்கும்) ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று வேளை கொடுத்துப் பார்க்கலாம். ஆனால், சில அம்மாக்கள் எங்களிடம் குழந்தையை அழைத்து வர வேண்டுமென்றால், அதற்கு முன்னால் சில மணி நேரங்களாவது ஜுரத்துக்கான மாத்திரையைக் கொடுக்க மாட்டார்கள். டாக்டரிடம் வரும்போது குழந்தைக்குக் காய்ச்சல் இருந்தால்தான் சரியான மருந்தை எழுதித் தருவோம் என்பது அவர்கள் நினைப்பு! இது தேவையில்லை. அவ்வப்போது காய்ச்சலின் அளவைக் குறித்து வைத் துக்கொண்டு எங்களிடம் அதைக் காட்டினால் போதுமானது.



தவிர, காய்ச்சல் என்பது வயிற்றுப் போக்கு, சிறுநீர் தொற்று என்று பல்வேறு காரணங்களினால் இருக்கலாம். எனவே, குழந்தையை ஒருநாள் முழுவதும் கவனித்துக்கொண்டிருந்து, பிற அறிகுறிகளையும் டாக்டரிடம் சொல்ல வேண்டும்.

காய்ச்சல் குறையாத நிலையில், குழந்தைகளுக்கு வலிப்பு (fits) வரக் கூடும். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கடும் காய்ச்சல் என்றால் 'டெபிட் ஸ்பான்ஜிங்' (tepid sponging) நல்லது. அதாவது வெதுவெதுப்பான தண்ணீரில் துணியை நனைத்து, குழந்தையின் உடலைத் துடைத்து விடுவது. முக்கியமாக, அதிகமாக ரத்த நாளங்கள் உள்ள இடங்களில் (அக்குள் உள்பட) துடைத்து விட வேண்டும். இதனால் காய்ச்சல் குறையும்.

- ஜி.எஸ்.எஸ்

இலக்கியக் காதலுக்கும், இன்றைய நடைமுறை வாழ்க்கையில் நாம் சந்திக்கும் காதலுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. மக்களிசைப் பாடல்களில் காதல் சுவைகொண்ட பாடல்கள்தான் அதிகம். அவை, நம் மக்களின் யதார்த்த வாழ்வனுபவங்களை, தம் வரிகளாகக் கொண்டிருக்கின்றன. ஒரு கிராமத்து இளைஞன் தன் மனசுக்குப் பிடித்த பெண் மீது கொண்ட காதலால், தன் சாதி சனங்களைப் பகைத்துக்கொள்ள நேர்கிறது. ஆனாலும், அவனுடைய காதல் மங்கிவிடுவதில்லை.

'பார்த்தேனடி உன் முகத்த
பகைச்சேனடி என் சனத்த
கேளாத வார்த்தையெல்லாம் தங்க
ரத்தினமே'
கேட்டேனே உன்னாலே
பொன்னு ரத்தினமே!'

ஒளிந்து மறைந்து நடக்கும் இந்தக் காதல் விளையாட்டில், ஆண் பிள்ளை எல்லை மீறவே துடிப்பான். ஆனால், அந்தப் பெண்ணின் மனத்திலோ, எச்சரிக்கை உணர்வு ஒரு வேலி கட்டி வைக்கும். கற்பு நிலையை விட்டுக் கொடுக்காத அவள், அவனுக்குத் தன் பாட்டில் சொல்கிறாள்,

'மண்ணுக்குடம் உடைஞ்சா மறுகுடம்
வாங்கிடலாம்
பொன்னுக்குடம் உடைஞ்சா
வாங்க முடியுமா?'

கற்பை, பொன்னுக்குடம் என்று புரிய வைக்கிறாள்.

உயிரோடு இருக்கும் மனிதனின் காதலைத் தாண்டி இறந்த பின்பும் காதலோடிருப்பேன் என்னும் காதலை, எந்த இலக்கியம் பேசுகிறது? அதை மக்களிசைப் பாடல்களில் மட்டுமே காண முடிகிறது. என்ன ஆசைவார்த்தை காட்டினாலும், நம்பிக்கை சொன்னாலும் தன் காதலை ஏற்றுக் கொள்ளாத காதலிக்கு மல்லிகைப் பூவாக முளைப்பேன் என்கிறான்.

'மாண்டு மடிஞ்சாலும்
மண்ணுலகம் போனாலும்
மாண்ட இடந்தனிலே - உனக்கு
மல்லியப் பூ நானாவேன்!'



வெற்றிலை

கோயில் திருவிழாவில், அம்மா, அப்பா, கல்யாண வயதில் பெண் என மூவரும் கோரைப்பாய் விரித்து கூத்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கூத்து ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, யாருக்கும் தெரியாமல், அங்கு வேறு கதையொன்றும் நடக்கிறது. பெண்ணை நோட்டம் விடுகிறான் ஒருவன். அவளுக்கும் அது தெரிந்தே இருக்கிறது. அவன் கடைக்குச் சென்று வெற்றிலை, பாக்கு வாங்கிக் கொள்கிறான். கண்ணாம்பு வாங்கவில்லை. பாக்கை வாயிலே போட்டுக் கடித்துக் கொண்டு, வெற்றிலையைக் கையிலே வைத்துக் கொண்டு, அந்தப் பெண்ணும் அவள் அம்மாவும் இருக்கும் இடம் தேடி வருகிறான். வந்தவன் அவள் அம்மாவிடம் வெற்றிலையைக் காட்டி, 'கொஞ்சம் கண்ணாம்பு

தர முடியுமா?' என்று கேட்கிறான். சுண்ணாம்பு கிடைக்கிறது. அந்த வெற்றிலையில் சுண்ணாம்பு தடவும் அழகில் ஒளிந்திருக்கிறது அவன் சொல்ல வந்த சேதி! பெண்ணுக்கும் புரிந்து விடுகிறது. மறுநாள் தோட்ட வேலையின் போது சந்திக்கிறார்கள். பேச முடியாது. ஆனால், பாட்டு அவளுக்குத் துணையிருக்கிறது.

'வெத்திலையக்
கையில வச்சு
வெறும் பாக்க
வாய்ல வச்சு



விடு தூது!

சுண்ணாம்பு இருக்கு தான்னு
செல்லையா! - என்ன
சுத்திச் சுத்தி வாரீங்களே
செல்லையா!
சுண்ணாம்புத் தடவுறாப்புல
செல்லையா! - என்ன
சுருக்க வான்னு கண்டாதீங்க
செல்லையா!'

இப்படி நல்ல காதல் மட்டுமா இருக்கிறது.

அகம், புறம் என்றும் பேசும் நம் இலக்கணத்தில் அகத்திணை, மூன்று வகையாகக் காதலைப் பேசுகிறது. கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை ஆகியவற்றில் பெருந்திணை என்பது பொருந்தாக் காதல் பற்றியது. தன்னுடைய வயதுக்கும் அதிகமான வயதுடைய பெண்ணை விரும்புகிறான் ஒருவன். என்றாலும் சமூகம் விதித்திருக்கும் சில ஒழுங்குகளுக்குள் பொருந்தும் காதல் தானே வெற்றி பெறுகிறது. ஆனால், அதை அந்தப் பெண் உணர்ந்தே இருக்கிறாள். தனக்குத் தகுதியில்லாத பையனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறாள்.

'ஆசைக்கேத்த வயசுமில்லே
அக்கா பொண்ணு நானுமில்லே
கால்முளைச்ச கத்தரிக் காய்க்கு
கழுத்த நீட்ட சம்மதமில்லே
காதலிக்கும் அரைக்காப் படிக்கு
உருப்படியா ஒண்ணுமில்லே
சின்னப்பொண்ணு எங்கிட்ட
வேணாம் இல்லுமுல்லு! - உன்
செண்டுமல்லிப் பூச்சரம்
வேணாம் தள்ளி நில்லு!'

பண்பாட்டைக் காத்து நிற்பவர்கள் கிராமத்துச் சனங்கள்.

(அடுத்த வாரம் அனிதா குப்புசாமி)

எழுத்தாக்கம்: **சிவன்**

காலைப் பனி!

படுகொலை செய்யப்பட்ட ஒரு பெண்ணைச் சுற்றி அடர்ந்த பனியாய்ச் சூழ்ந்திருக்கும் மர்மம். அந்த மர்மப் பனியில் மறைந்திருக்கும் கொலையாளி தந்தையா... ஒரு தலையாய்க் காதலிக்கும் காதலனா? என போலீஸ் விசாரணையில் கேள்விகள் எழும்போது, கொலை செய்யப்பட்டதாக நினைக்கப்பட்ட பெண்ணே ஒரு கட்டத்தில் நேரில் வர, கதை பனிக் காற்றிலிருந்து புயல் காற்றாய் வேகமெடுக்கிறது! கொலை செய்யப்பட்ட பெண் யார்... கொலையாளி யார்? என திடுக் திடுக் திருப்பங்களோடு, திரைக்கதையை நகர்த்தியிருக்கும் இயக்குநர் ராஜேஷ் செல்வாவுக்கு மென் பனியில் நனைத்த பூங்கொத்து!

அடர்த்தியான அன்பும் அதீத பாசமும் கொண்ட தந்தையாக நாசர். சராசரி தந்தையை நினைவுறுத்துகிறார். ஆனால், எத்தனை நாளைக்குத்தான் இப்படியே நடிப்பார்? கேள்வி ஊசிப் பனியாய் உள்ளத்தைக் குத்துகிறது!

தந்தையின் கண்டிப்பைத் தாங்கமுடியாது தவிக்கும்போது கோபத்தையும், நாசர் வளர்ப்புத் தந்தை எனத் தெரிய வருகையில் பாசத்தையும் கலந்து கொடுக்கிறார் புதுமுகம் வசுந்த்ரா. டப்பிங்கில் ஏனோ அவர் குரல், பனியில் நனைந்த உடலாய் நடுக்கமெடுக்கிறது. ஒரு தலையாய்க் காதலிக்கும் ஜேஜேயின் நடிப்பு மனசுக்குள் மூடு பனியாய் மையமிடுகிறது. முத்துக் காளையின் காமெடி ஊட்டி பனி. ரசிக்கலாம்; சிரிக்கலாம். சதிஷ் ராமலிங்கத்தின் இசையில் உறை பனியாகப் பாடல்கள் உள்ளத்தில் சில்லிடுகின்றன. கோபி ஜகதீஷின் கேமராவில் காட்சிகள், அதிகாலைப் பனியின் புத்துணர்ச்சியாய்ப் பதிவாகியுள்ளன. போலீஸ் விசாரணைக் காட்சிகளில் இன்னும் வேகம் கூட்டியிருந்தால், காலைப் பனி எல்லோருக்குமான காதல் பனியாக இருந்திருக்கும்.

– சரண்யா



ஜோரான ஜோடி!



தமிழகத்திலேயே முதல் முறையாக ஒரு மருத்துவத் தொழில் நுட்பம் அறிமுகமாகியிருக்கிறது. அது 64 ஸ்லைஸ் பெட் - சி.டி. (PET-CT) எனும் கருவி.

சுமார் 30 கோடி ரூபாய் செலவில் இந்தக் கருவியை வாங்கியுள்ள டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனையின் தலைவர் டாக்டர் டி.ஜி. கோவிந்தராஜன், இதை அடையார் புற்று நோய் மைய வளாகத்தில் நிறுவியிருக்கிறார்.

''பல கோடி செலவில் வாங்கிய கருவியை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நிறுவ காரணம் உண்டு'' என்று விளக்கினார் டாக்டர் கோவிந்தராஜன். ''இக்கருவி புற்றுநோயைக் கண்டறியவே அதிகம் பயன்படும். அடையாறு கான்ஸர் இன்ஸ்டிடியூட்டில் உள்ள மருத்துவக் குழு, சிறப்புத் தேர்ச்சியும் கடமை உணர்வும் வாய்க்கப் பெற்றவர்கள். ஆகையால்தான் இங்கு இக்கருவியை நிறுவி பராமரிப்புச் செலவை மட்டும் நாங்கள் ஏற்றுள்ளோம்'' என்றார்.

''புற்றுநோயின் ஆரம்ப கட்டத்தை எளிதில் கண்டுபிடிக்க இக்கருவி உதவுவதால், இது ஒரு பெரும் வரம்'' என்று மையத் தலைவர் டாக்டர் சாந்தா மகிழ்ச்சி தெரிவித்தார். கருவியின் செயல்பாட்டை விளக்கினார் டாக்டர் கோவிந்தராஜன்:

''சி.டி.ஸ்கேன் தொழில்நுட்பத்தில் கதிரியக்கத்தின் மூலம் உடலில் கட்டிகள் உள்ள இடங்களைத் தெரிந்துகொள்ள முடியும்.

(PET எனப்படும் Positron Emission Tomography) தொழில்நுட்பத்தின் மூலம் கட்டியில் உள்ள எந்த செல் வீரியமானது (அதாவது புற்றுநோயை உருவாக்கும் வாய்ப்பு கொண்டது) என்பதுபோன்ற தகவல்களைக் கூடுதலாக அறிய முடிந்தது. எப்படியென்றால், இந்தச் சோதனையில் ஃப்ளூரினோடு (F-18 என்ற வடிவத்தில்) க்ளூகோஸையும் சேர்த்து உடலுக்குள் செலுத்துவார்கள். இயல்பான உடலில் இந்த க்ளூகோஸ் உடல் முழுவதும் பரவி உடையும். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட செல்கள் க்ளூகோஸை உறிஞ்சி அப்படியே தக்கவைத்துக் கொள்ளும். இதனால் தகுந்த நடவடிக்கைகள் மூலம் புற்றுநோயைக் கட்டுப்படுத்த வாய்ப்பு உண்டு. சி.டி.ஸ்கேன் - பெட் இரண்டும் இந்தக் கருவியில் இருப்பதால், புற்றுநோய் மட்டுமல்ல, பிற நோய்களைக் கண்டறிவதிலும் இந்தக் கருவி மிகவும் பயன்படும். உதாரணத்துக்கு, இருதய ரத்தக் குழாய்களில் அடைப்புகள் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய மட்டுமே சி.டி. ஸ்கேன் உதவும். ரத்தக் குழாய்கள் எந்த அளவு இயங்குகின்றன என்பதற்கு 'பெட்' தொழில்நுட்பம் பயன்படும். தசைகளிலுள்ள பாதிப்பு எத்தகையது என்பதை பெட் உணர்த்துவதால், அறுவை சிகிச்சை தேவையா என்பதைத் தீர்மானிக்கவும் இது உதவும்.

மேற்படி கருவிக்குத் தேவையான FDG-18என்ற தனிமத்தை உற்பத்திச் செய்ய சைக்ளோட்ரான் என்ற உயர்முடுக்கி தேவைப்படுகிறது. 16 கோடி விலை மதிப்புள்ள இந்த நவீன தொழில்நுட்பக் கருவியை காமாட்சி மருத்துவமனை வாங்கி நிறுவ உள்ளது. இதற்கு அடிக்கல் நாட்டியவர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் செயல் இயக்குநர் நாராயணன்.

- ஜி.எஸ்.எஸ்.



காத்தவராயன்

உடுக்கை: மதுவிலக்கையும் லாஹிரி எதிர்ப்பையும் எடுத்துரைக்கும் திரைக்கதை.

பம்பை: திரைக்கதையின் இயக்குநர் சலங்கை துரை காட்டியுள்ள வேகம்.

கரகம்: புதுமுகம் விதிஷாவின் சாகசமான நடிப்பு.

உருமி: கரணுடைய தி.மு.(திருந்துவதற்கு முன்) அத்தியாய நடிப்பு.

நாயனம்: அதே கரணுடைய தி.பி. அத்தியாய நடிப்பு!

தீ மிதி: கார்த்திக் ராஜாவின் ஜகஜ்ஜால ஒளிப் பதிவு

பொய்க்கால் குதிரை: வடிவேலுவின் காமெடி டிராக்.

பஞ்சுமிட்டாய்: ஸ்ரீகாந்த் தேவாவின் இசை.

குடை ராட்டினம்: 'இத்தனையையும் பார்த்து நம்பணுமாங் காட்டியும்'னு கஷ்டப்பட்டுட்டு தியேட்டரைவிட்டு வெளியே வரும் ரசிகனின் மண்டை!

– உதயகண்ணன்



* ஓவியப் பயிற்சி...

* Root இயக்குநர்
பாலகிருஷ்ணன்...





*யோகாசன பயிற்சி...



*குதூகல டூர்

வேர்விடும் விழுதுகள்!

கோடைக் காலத்தில் கல்லூரி இளைஞர்கள் என்ன செய்வார்கள்...? சம்மர் கோர்ஸ்க்குப் போவார்கள். அல்லது நண்பர்களோடு சேர்ந்து பீச், பார்க், சினிமா, பார்ட்டி என கலவரப்படுத்துவார்கள். ஆனால், ஓர் இளைஞர் பட்டாளம் Root என்ற அமைப்பாய் ஒருங்கிணைந்து கோடைக் கால கல்வி முகாமை கிராமத்துக் குழந்தைகளுக்காக இலவசமாக நடத்தி வருகின்றனர். எங்கே...? மதுரைக்குப் பக்கத்திலிருக்கிற அச்சம்பத்து கிராமத்தில். அதுவும் கிராம மக்களோடு இணைந்து. பணம் சம்பாதிக்கும் நோக்கில் பல சம்மர் கேம்ப்புகள் நடத்தப்பட்டாலும், அச்சம்பத்து முகாம் அக்கறையில் மட்டுமே நடத்தப்படுகிறது!

- லக்ஷ்மி சரவணக்குமார்

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.